# ஸ்ரீ பரமலைச்செல்வி

பிரபந்தத் திரட்டு

JL
Y15m,N37
N39.3
134088

7 - FEB 1939
MADRAS



231

# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

பிரசுரிப்பவர்

டாக்டர் எஸ். சேஷகிரி ராவ்.

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ. (ஆனர்ஸ்).

பிப்ரவரி 1939



மலர் 3] [இதம் 2

134088
600 028

# கிரஹலக்ஷ்மி

## சந்தா விவரம்

வருட சந்தா ரூ. [illegible], ஆறு மாதம் 1-8-0. 6 மா[illegible] குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 3-8-0. தனிப்பிரதி விலை அணு 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணு போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலுவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½% கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிறிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனுவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே. என். கேசரி, 15, வெஸ்ட்காட் ரோட், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.



டோங்கரே
அவர்களின்
பாலாம்ருதம்


குழந்தைகளுக்கு
பொறுத்தமான டானிக்.

இது தணிந்த ஜுரத்தையும், துன்பமளிக்கும் இருமலையும் நிவர்த்திக்கின்றது. குழந்தைகளுக்கு பல் போடுவதற்கும் உதவியாக இருக்கின்றது. குடிப்பதற்கும் வெகு ருசிகரமாயிருக்கின்றது.




AMRUTANJAN Express

இந்த ரயிலில் உங்கள் இஷ்டம்போல் பிரயாணம் செய்வதற்கு
"TRAVEL-AS-YOU-LIKE"
குறைந்த விலையுள்ள டிக்கெட் 0—8—0 தான்
எல்லா வகுப்புகளுக்கும் ஒரே சார்ஜுதான்.



மதராஸ் டி. சி. என். கோல்டன் மெடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய

## கழுத்து செயின்கள்

அசல் தங்க செயின்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல. கறுக்காது.

2 வருஷம் உத்தரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

செயின்கள் விலை விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| பெரிய சைஸ் | ஒத்தபேட்டை | 1-க்கு | ரூ. | 7—0—0 |
| ,, | ரெட்டபேட்டை | ,, | ரூ. | 14—0—0 |
| ,, | மூன்றுபேட்டை | ,, | ரூ. | 21—0—0 |
| ,, | நான்குபேட்டை | ,, | ரூ. | 28—0—0 |

வி. பி. செலவு 1 பேட்டை முதல் 4 பேட்டை வரையில் 8 அணா

| | | | | |
|---|---|---|---|---|
| பேபி சைஸ் (சின்னது) | ஒத்தபேட்டை | 1-க்கு | ரூ. | 5—0—0 |
| ,, | ரெட்டபேட்டை | ,, | ரூ. | 10—0—0 |

வி. பி. செலவு 1-க்கு 8 அணா

குறிப்பு :—"கிரஹலக்ஷ்மி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும். மேலும் 2 அணா பெருமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனாம்.

**டி. சி. நாகலிங்கப்பா அண் கோ.**, 280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன், மதறாஸ்.

## தி எலக்ட்ரோக்ராப் ஸ்டூடியோ,

### 67, எழும்பூர் ஹைரோட்,

### எழும்பூர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ¼ ப்ளேட், 2 காப்பிகள் | .... | ரூ. | 1 | 0 | 0 |
| ,, அதிகப்பிரதி ஒன்றுக்கு | .... | ,, | 0 | 6 | 0 |
| காபினட் சைஸ் 2 காப்பிகள் | .... | ,, | 1 | 12 | 0 |
| ,, அதிகப்பிரதி ஒன்றுக்கு | .... | ,, | 0 | 8 | 0 |
| 8½ X 6½ சைஸ் 2 காப்பிகள் | .... | ,, | 3 | 0 | 0 |
| ,, அதிகப்பிரதி ஒன்றுக்கு | .... | ,, | 1 | 0 | 0 |
| 8½ X 6½ என்லார்ஜ்மெண்டு ஒன்றுக்கு | .... | ,, | 1 | 12 | 0 |
| 12 X 10 என்லார்ஜ்மெண்டு ஒன்றுக்கு (கட் அவுட் மவுண்டுடன்) | .... | ,, | 3 | 0 | 0 |
| 4 விதங்கள் 4 போஸ்ட் கார்டு சைஸ்களுடன் அல்லது 8 விதங்கள் 2 போஸ்ட் கார்டு சைஸ் படங்களுடன் .... .... | .... | ,, | 1 | 0 | 0 |

கோஷா ஸ்திரீகளை நமது ஸ்திரீ ஆர்டிஸ்ட் கவனிப்பார்.


# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நாகரீக மங்கையரும் மஹாத்மாவும் .... .... | 73 |
| 2. | வயதுவந்த ஸ்திரீகள் கல்வி — ஸ்ரீமதி எஸ். கமலா .... | 76 |
| 3. | ஈராக் — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... ... | 79 |
| 4. | சிவராத்திரி விரதமகிமை — "ஞானா" .... .... | 81 |
| 5. | ஸந்தேஹ நிவர்த்தி — திரு. ஏ. வெங்கட்ராமன் .... .... | 83 |
| 6. | வாய்மை — திரு. ஜே. வெங்கடராம அய்யர் .... .... | 87 |
| 7. | தமிழ் மொழி — ஸ்ரீமதி வி. ராதாமணி .... .... | 89 |
| 8. | அழகும், பெண்மக்களும் — டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை .... | 91 |
| 9. | ஆலயவழிபாடும், பெண்கள் நிலையும் — ஸ்ரீமதி ராஜம் .... | 93 |
| 10. | குலதர்மம் — ஸ்ரீமதி கே. கமலா .... .... | 99 |
| 11. | விடுகதை வினா — "ஜனகஜா" .... .... | 102 |
| 12. | மாதவி, மனோன்மணி — "தாமரை" .... .... | 105 |
| 13. | ச்ருங்ககிரி ஸ்தலம் — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் .... | 110 |
| 14. | மலையாள கூட்டான் வகையரு — "ஜனககுமாரி" .... | 113 |
| 15. | வாழ்க்கையின் ஏக்கம் — திரு. ஸி. சண்முகம் .... .... | 118 |
| 16. | கற்பின் மாட்சி — ஸ்ரீமதி அன்னாள் .... .... | 121 |
| 17. | இன்புளுயன்ஸா — திரு. டி. கே. கோவிந்தய்யர் .... .... | 128 |
| 18. | மாங்கல்யத்தின் மகத்துவம் — "கோன்" .... .... | 132 |
| 19. | செய்தித்திரட்டு .... .... .... | 134 |
| 20. | கதம்பம் .... .... .... .... | 136 |
| 21. | விசித்திரம் ஆனால் வாஸ்தவம் .... .... .... | 137 |
| 22. | சினிமா செய்திகள் .... .... .... | 138 |
| 23. | இலங்கையின் பாராட்டு — திரு. கே. டி. சிற்றம்பலம் .... | 139 |
| 24. | ஆசிரியர் குறிப்புகள் .... .... .... | 140 |
| 25. | பஞ்சாங்கம் .... .... .... .... | 143 |
| 26. | பிரசவ அட்டவணை .... .... .... | 144 |


மூவர்ணப்படங்கள்


1. ஜடாயு மோக்ஷம்
2. சஞ்சல சிந்தனா சிங்காரி


# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

**பெங்களூர் :** மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மென்ட்.
**கோலார் கோல்ட் பீல்ட்ஸ் :** திரு. ஏ. எம். அந்தோனி, கண்ணபிரான் தெரு, ராபர்ட்ஸன் பேட்டை, கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.
**திருப்பதி :** மெஸர்ஸ் ஒய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்செண்ட்.
**சேலம் :** திரு. சி. பி. வி. நாராயண செட்டி, சேலம் கன்னிகாபரமேஸ்வரி பாங்கு லிமிடெட், சேலம்.
**மதனபள்ளி :** என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜண்ட்.
**சித்தூர் :** திரு. வி. வெங்கடரமணய்ய செட்டி, 163, பஜார் ரோட், சித்தூர்.
**வேலூர் :** திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெரு, கோட்டை.
**திருச்செங்கோடு :** திரு. டி. ஏ. செல்லமுத்து, நியூஸ் ஏஜண்ட், அம்மன்கோயில் தெரு.
**கோயமுத்தூர் :** திரு. கே. பழனிக்கவுண்டர், முனிசிபல் மிடில்ஸ்கூலுக்கு எதிர்புறக் கடை.
**திருவண்ணாமலை :** மெஸர்ஸ் மணி புரொவிஷன் ஸ்டோர்ஸ், ஜெனரல் மெர்ச்செண்ட்ஸ் அண்டு கமிஷன் ஏஜண்ட்ஸ்.
**காரைக்குடி :** மெஸர்ஸ் பாரதிபிக்சர் பாலஸ்.
**திருநெல்வேலி :** திரு. ஏ. கோபால பிள்ளை, நியூஸ் ஏஜண்ட், பெருமாள் தெற்கு ரத வீதி, பாளையங்கோட்டை.
**தஞ்சாவூர் :** திரு. என். எல். அய்யர், நியூஸ் ஏஜண்ட் அண்டு ஜெனரல் மெர்ச்செண்ட், ரயில்வே ரோடு, தஞ்சாவூர்.
**ஸ்ரீரங்கம் - திருவானைக்காவல் :** திரு. எம். ராமஸ்வாமி பிள்ளை, மளிகை வியாபாரி, தெற்கு வாசல், ஸ்ரீரங்கம்.
**தூத்துக்குடி:** மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட், கதர்ஸ்டோர், 25, கிரேட் காட்டன் ரோட்.
**காளஹஸ்தி, ராஜம்பேட்டா :** திரு. எஸ். அப்துல் அஸீஸ் சாஹிப், நியூஸ் ஏஜண்ட்.
**நிடதவோல் :** திரு. கே. வி. சென்ன கேசவய்யர், வியாபாரி.
**ஹோஸ்பேட் :** திரு. நாகப்ப செட்டி அண்டு பிரதர்ஸ், ஜெனரல் மெர்ச்சன்ட்ஸ்.
**சென்னை :** மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.
**கொழும்பு :** திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191—193, நார்ரிஸ் ரோட்.
**யாழ்பாணம் :** திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.
**கண்டி :** திரு. வி. ஏ. நடராஜா, ஜாப்னாஸ்டோர், 77 & 78, பிரௌன்ரிக் தெரு.
**ரங்கூன் :** திரு. வி. பகவதி சாஸ்திரி, 248, பேர் தெரு.
**பினாங்கு :** பி. சிவகுரு & கோ., தபால் பெட்டி நம்பர் 197, 133, பினாங்கு தெருவு.
**கோலாலம்பூர் :** திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.
**திருச்சினாப்பள்ளி :** திரு. டி. கே. கோவிந்தய்யர், 5, குஜிலி தெருவு, ஹெட் ஆபீஸ் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.
**பல்லாரி :** திரு. எச். சினிவாசருவ், நியூஸ் ஏஜண்ட், கம்பிளி பஜார்.

ஹிக்கின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா இடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
**ராயப்பேட்டை, :: சென்னை.**



# நாகரீக மங்கையரும் மஹாத்மாவும்

மஹாத்மா காந்தியடிகள், சகமாணவர்கள் வகுப்புகளிலும், இதர வெளியிடங்களிலும் தங்களிடம் நடந்துகொள்ளும் அசிங்கமான நடவடிக்கைகளைப்பற்றிப் புகார் செய்து எழுதிய சில கல்லூரி மாணவிகளின் கடிதங்களைப்பற்றிப் பிரஸ்தாபித்து, அம்மாதிரியான நடவடிக்கைகளைச் செய்யும் மாணவர்களை வன்மையாகக் கண்டிப்பதுடன், அப்பேர்ப்பட்டவர்களை எப்படி நடத்துவது என்பதைப்பற்றிய சில அரிய யோசனைகளையும் "ஹரிஜன்" பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அதில் மாணவிகள் எப்படி அஹிம்ஸா தர்மத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆபாசமான சொற்களைச் சொல்லிக்கொண்டு தன்னை நெருங்கி வந்த ஒரு சைக்கிள் சவாரி செய்த வாலிபனை தன் புஸ்தகத்தை வீசி அடித்து துரத்த முயன்ற ஒரு பாஞ்சால யுவதியின் கடிதம் பூராவும் காந்திஜி 'ஹரிஜனி'ல் பிரசுரித்திருக்கிறார். அவர் மாதர்கள் இம்மாதிரியான மாணவர்களையும், அயோக்கியர்களையும் எதிர்ப்பதில் பூரண தைர்யம் காட்டவேண்டும் என்றும், அந்தப் பேர்வழிகளின் தகாத செய்கைகளைப்பற்றி உடனுக்குடனே பத்திரிகைகளில் பஹிரங்கமாக எழுதிப் பிரசுரிக்கவேண்டும் என்றும், இவ்வாறு செய்ய யுவதிகள் பொய் நாணத்தாலும், வெட்கத்தாலும் தயங்கக் கூடாதென்றும் கூறுகிறார். இவ்வித அயோக்கியத்தனமும், சில்லரை விஷமங்களும் மறைத்து வைத்தால் தான் வளருமென்றும், மூடிவைக்காமல் அப்பேர்ப்பட்டவர்களின் மானம் கரையேறும்படி செய்தால், தானே இக் 'காலிகள்' அடங்கி விடுவார்களென்றும் மகாத்மா அபிப்பிராயப் படுகிறார். காந்தியடிகளின் இந்த யோசனை மிகவும் சரியானதே. ஆனால் தற்போதிருந்து வரும் 'மான நஷ்ட .சட்டம்' (law of libel)

பல பத்திரிகைகளை இம்மாதிரியான சம்பவங்களைப் பற்றிப் பிரசுரிப்பதினின்றும் விலகச் செய்யும் என்ற நிலைமையை நாம் இங்கு கூறவேண்டியிருக்கிறது. பகிரங்கப்படுத்துவதற்கு தற்காலம் அமுலிலிருந்து வரும் மான நஷ்ட சட்டம் ஒரு தடையாகவே இருந்து வரும். தனிப்பட்டவரின் புகார்களை அவைகள் உண்மையாக இருந்தால் கூட பிரசுரிப்பது பத்திரிகைக்காரர்களுக்கு ஆபத்தான காரியமாகவே சில சமயங்களில் நேர்ந்து விடுகிறது. ஆகையால் பத்திரிகாசிரியர்களும், சொந்தக்காரர்களும் இது விஷயத்தில் சற்று ஜாக்கிரதையாகவே இருப்பது பற்றி நாம் அவர்களைக் குறை கூற முடியாது.

இது சமயம் நவீன நாகரீக நங்கையர்க்கு மஹாத்மா சரியான சூடும் கொடுத்துள்ளார். "அவள் பலகாதலருக்கு, அரைடஜன் காதலருக்கு காதலியாக இருக்க முயல்வதாக அவர் நினைக்கின்றார். அவள் தீரச்செய்கைகளை விரும்புகிறாள்; அவள் தன்னை காற்று, மழை, சூரியவெப்பம் இவற்றினின்றும் பாதுகாத்துக்கொள்ள உடை அணியாது பிறரை வசீகரப்படுத்தும் நோக்கத்துடன் ஆடையாபரணம் பூணுகிறாள். இயற்கையின் மேல் செயற்கைப் பூச்சுகள் பூசிக்கொண்டு நூதனமாக விளங்குகிறாள். இப்பேர்ப்பட்ட மங்கையர்களுக்கு அஹிம்ஸா தர்மமுறை சரிப்படாது," (Modern girl loves to be 'Juliet' to half-a-dozen 'Romeos'. She loves adventure. She dresses not to protect herself from wind, rain, and sun, but to attract attention. She improves upon nature by painting herself and looking extraordinary) என்று காந்திஜி கூறுகின்றார்.

அவரது சொற்கள் சகல படித்த நங்கையர்களுக்கும் சொல்லப்பட்டதல்ல. அளவுக்கு மிஞ்சி நாகரீகப்பித்தம் தலைக்கேறியவர்களைப்பற்றியே அவர் அவ்வளவு கடுமையாகக்கூறியிருக்கிறாரென்று நாம் கருதுகிறோம். அந்தச் சொற்கள் கவனிக்கப்படவேண்டியதே. படித்த பெண்களும் கலாசாலை மாணவிகளும் கூடியவரையில் மேற்கூறியவாறு நடந்து கொள்ளாமல் பெண்களுக்கியற்கையான அம்சங்களைக் கைவிடாமல் நடந்து வரவேண்டியதவசியமென்று நாம் நம் சகோதரிகளுக்கு எடுத்துக்கூற விரும்புகிறோம். ஆடைகள் அணிவதிலும், அலங்காரங்கள் செய்து கொள்வதிலும் ஒரு முறை இருக்கவேண்டும். தெருவில் போவோர் யாவரும் தமது நடை உடைகளைக்கண்டு மயங்கி தியங்கி பிரமித்துப் போகவேண்டுமென்ற எண்ணத்துடன் இல்லாத தடபுடல்கள் செய்து கொள்வது குடும்ப மங்கையர்கட்கு நேர்மையானதல்லவென்று நம் ஹிந்து வனிதையர்க்கு அதிகம் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. நம் மாணவ சகோதரிகள் தங்கள் கல்வி அறிவையும், உயர்வையும் ஆடம்பரமான உடைகளிலும், நவீன நகைகளை நவீனமுறையில் அணிந்து கொள்ளுவதிலும் வெளிப்படுத்துவதைவிட நற்குண நற்செய்கைகளால் உலகம் அறியச் செய்வதே சாலச்சிறந்தது. இது பற்றி மஹாத்மா மிகவும் பச்சையாக கூறியிருப்பது தற்கால நிலைமைக்கு மிகவும் அவசியந்தான்.

மகாத்மா அத்துடன் நிறுத்தவில்லை. கலாசாலை மாணவர்கள் சிலர் தங்கள் கல்லூரிகளில் வாசிக்கும் சகோதரிகள் நிம்மதியாகவும், அமைதியாகவும், நிர்பயமாகவும்





இருப்பதற்கிடைஞ்சலாக இருப்பதையும் வன்மையாகக்கண்டிக்கின்றார். "கௌரவமான பெண்கள் தங்கள் மானத்துக்காபத்து நேரிடுமோ என்று திகில் எப்பவும் அடையும்படி சர்வசாதாரண ஒழுக்கமுறைகளின்றிக்கூட ஏன் வாலிபர்கள் இருக்கவேண்டும்? பெரும்பான்மையான யுவர்கள் மாதர்தம் கௌரவத்தைக்காக்கும் தன்மையை, குணத்தைப், பூராவும் இழந்துவிட்டார்களென்று காண எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கின்றது. ஆனால் அவர்கள் தங்கள் மாணவசமூகத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதில் அதிக தீவிர சிரத்தை காண்பிக்கவேண்டும். தங்கள் தோழர்கள் யாராவது ஒழுங்குமீறி சகமாணவிகளிடம் நடந்தால் அதற்குத் தக்க நடவடிக்கைகள் உடனே எடுத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஸ்திரீயின் கௌரவத்தையும் தங்கள் சொந்தசகோதரிகள், தாய்மார் கௌரவத்தைப்போல் உயர்வாக பாவித்து நடக்க அவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும்" (They must learn to hold the honour of every woman as dear as that of their own sisters and mother) என்று உத்தமத்தலைவர் கூறியிருப்பதைச் சிரமேற்கொண்டு ஒவ்வொரு இந்தியயுவனும் நடக்கவேண்டும். பாரததேசத்தில் மங்கையர்தம் மானத்தையும் கௌரவத்தையும் காப்பாற்ற தங்கள் உயிரையும் திரணமாக மதித்த வீரர்கள் எத்தனையோ பேர் வாழ்ந்திருக்கின்றனர். பிறஸ்திரீகளை தாயைப்போலவும், சகோதரியைப்போலவும் பாவித்து அவர்கட்கு உறும் இன்னல்களையும் மானஹீனங்களையும் விலக்க முற்படுவது பாரதயுவன் என்று பேர் வைத்துக்கொள்ளும் ஒவ்வொருவருடைய தூய கடமையாகும் என்று நாம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மாதர் தம் கௌரவம் போற்றப்படும் தேசமே நாகரீகமான தேசமாம். தன்னலங்கருதி மாதர் தம்மானம் குலைவதைக் கண்ணாரக் காணும் பேடிகள் மனிதவர்க்கத்தினரைச் சேர்ந்தவர்களாகக்கூட நினைக்கமுடியாது. மேலே நாம் எடுத்துக்காட்டியுள்ள மஹாத்மாவின் உயர்ந்த யோசனைகளின்படி மாணவ, மாணவிகள் நடக்குமாறு காந்திஜியின் பேரால் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## "கிரஹலக்ஷ்மி ஜயந்தி விழா"

தெலுங்கு "கிரஹலக்ஷ்மி" தோன்றி வருகிற மார்ச்சீ 12-வது வருஷம் ஆரம்பமாகின்றது. 1939ளு மார்ச்சுமீ 1உ "கிரஹலக்ஷ்மி" ஜயந்தி விழா, பத்திரிகாலயத்தில் நடைபெறும். அச்சமயம் "ஹிந்து சுந்தரி" என்ற பத்திரிகையை கடந்த 35 வருஷங்கள் சேர்ந்தாப்போல் நடத்திவரும் ஸ்ரீமதி பி. சேஷம்மாள் அவர்களின் விடாமுயற்சியையும், பத்திரிகா சிரத்தையையும் பாராட்டியும், சித்திரக் கலையில் சிறந்து விளங்கும் ஸ்ரீமதி ஆர். கமலாபாயின் கலைத்திறமையை மெச்சியும் இருவருக்கும் "கிரஹலக்ஷ்மி" கங்கணம் பரிசளிக்கப்படும்.

# வயதுவந்த ஸ்திரீகள் கல்வி

## (ADULT WOMEN'S EDUCATION)

ஸ்ரீமதி எஸ். கமலா

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று தமிழ் கிழவியும், "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு", "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர்" என்று திருவள்ளுவரும் கல்வியின் அவசியத்தை வெகு அழகாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நம் தேசத்திலிருக்கும் அறியாமையே பலவித கெடுதல்களுக்குக் காரணம். சமூகத்திலுள்ள பல மூட பழக்க வழக்கங்கள், தரித்திரம், நோய் முதலியவற்றுக்கு முக்கிய காரணம் அறியாமையே.

நம் தேசத்தில் 35½ கோடிமக்களிருக்கின்றார்கள். அதில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு பத்துப்பேர்தான். அதிலும் ஸ்திரீகளில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 100க்கு 3 தான். அசோகச் சக்கிரவர்த்தி காலத்திலே 100க்கு 60 பேர்கள் படித்தவர்களாயிருந்த நம் பாரத தேசத்திலேபிரிட்டிஷ் ஆட்சி 150 ஆண்டுகள் நடைபெற்றபின் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 10% தான் என்று நினைக்க வெட்கத்தால் தலை குனிய வேண்டியதிருக்கிறது.

100க்கு 90 பேர் அறியாமை யென்னும் அந்தகாரத்துட் கிடந்து உழலும் வரை நம் நாடு எப்படி முன்னேற்ற மடையும்? எந்த சீர்திருத்தம் செய்ய முற்படினும் மக்களின் மனம் அவற்றின் மேன்மையையும் பயனையும் உணர்ந்து அவற்றைப்பின்பற்ற கல்வி அறிவு வேண்டாமா? சகல சீர்திருத்தங்களுக்கும் அடிப்படையான அஸ்திவாரம் கல்வி ஞானமே என்று கூறுவது மிகையாகாது. அதிலும் நம் நாட்டில் வயது வந்தோரை எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக்குவது ஒரு முக்கியமான பிரச்சினை. இது முக்கியமானது மட்டுமல்ல; முதன்மையாக கவனிக்கப்பட வேண்டியதொரு விஷயமுமாகும்.

அதிலும், குடும்பத்தின் ஜீவநாடியாக இருந்து வரும் ஸ்திரீகளிடை படிப்பு வாசனை இல்லாமலிருந்தால் குடும்பமே சீராக நடைபெறுவதற்கு ஒரு பெருந்தடையாக இருக்கும். வயது வந்தவர்களிடை இருந்து வரும் படிப்பின்மையை அகற்றி அவர்களை எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகச் செய்யும் வழிகளைப்பற்றி ஆராய சென்னையில் ஜனவரிமாதம் இரண்டாவது வாரம் ஒரு மகாநாடு கூடியது. அம்மகா நாட்டின் மாதர்கிளை ஒன்றும் நடை பெற்றது. அதற்கு ஸ்ரீமதி அம்முஸ்வாமிநாதன் தலைமை வகித்தார். பேகம் மீர் அமீருதீன் ஸ்திரீகள் மகாநாட்டைத் திறந்து வைத்தார். பேகம் மீர் அமீருதின் திறப்புரையில் கூறிய யோசனைகள் யாவும் பொது மக்களாலும், சர்க்காராலும் கவனித்துக் கைக்கொள்ளக் கூடியவைகளாக இருக்கின்றன. அவரது பிரசங்கம் பூராவும் அரிய கருத்துக்களும்,





அனுபவ சாத்திய மானதும் லகுவானதுமான வழிகளும் நிரம்பியிருக்கின்றது. நமது சர்க்காரும், பொது ஸ்தாபனங்களும் தங்களாலியன்ற அளவு ஸ்ரீமதி அமீருதீனின் யோசனைகளை அமுலுக்குக் கொண்டு வருவரேல் மாதர் சமூகத்தை மறைத்துக் கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருள் வெகு விரைவில் விலகி நம் சகோதரிகள் யாவரும் உண்மைக் கண்களை அடைந்து சமூகத்துக்கும் தேசத்துக்கும் நன்மையை விளைவிக்கும் கருவிகளாவார்கள்.

"ஒரு ஸ்திரீயை நாம் படித்தவளாகச் செய்யும் போது நாம் ஒரு ஆசாமியை மட்டும் படித்தவராகச் செய்ய வில்லை; நாம் ஒரு குடும்பத்தையே படிப்பிக்கின்றோம். ஏனென்றால் படித்த ஸ்திரீ தன் பிள்ளைகளை கல்வி யில்லாமலிருக்க விடமாட்டாள்; கற்றதை மறக்கவும் விடமாட்டள்" (When we educate a woman we educate a whole house-hold, for no literate woman ever allows her children to remain illiterate or lapse into illiteracy) என்று பேகம் மீர் அமீருதீன் கூறியிருப்பது யாவராலும் கவனிக்கத்தக்கது.

பொது ஜனக்கல்வி அரசாங்கத்தாரால் கவனிக்கப்படவேண்டிய தொருமுக்கிய விஷயமாக இருந்தபோதிலும் நம் சர்க்கார் மதுவிலக்கு முதலிய திட்டங்களையும் கைக்கொண்டிருப்பதால் இந்த வேலை பூராவையும் சர்க்கார் தலை மேலேயே போட்டுவிடமுடியாது. பிரபுக்களும், ஸ்தலஸ்தாபனங்களும், சமூக சேவாஸ்தாபனங்களும் ஒரு சரியான திட்டம் வகுத்து வயது வந்தவர்களிடமுள்ள அறியாமையை அறவே ஒழிக்க முனைந்து வேலை செய்யமுற்படவேண்டும். ஆங்காங்குள்ள மாதர் சபைகள் தங்கள் ஆதரவில் வயதுவந்த ஸ்திரீகளுக்காக தனிவகுப்புகள் வைத்து பொது அறிவையும், எழுதப்படிக்கவும் சொல்லித் தரவேண்டும். அவ்வகுப்புக்கு குடும்ப ஸ்திரீகளும் வரும் விதமாக அவர்களுக்கு உற்சாகமான சங்கீதம், தையல் வேலை முதலியவற்றையும் சொல்லிக்கொடுத்து பொதுக்கல்வியையும் புகுத்தவேண்டும். வயது வந்தோரைச் சிறுவர்களைப்போல் படிக்கவைப்பது சாத்தியமில்லை. படிப்பது அவர்களுக்குச் சந்தோஷமளிக்கும் வகையில் வகுப்புமுறை அமைக்கப்படவேண்டும். சிசுபராமரிப்பு, குழந்தை சம்ரட்சணை, தாய்மார் சுகதார சங்கங்களும், இலாகாதாரர்களும் இந்த வழியில் நல்ல வேலை செய்யலாம். இதில் வேலை செய்பவர்கள் அவர்களது காரியாலயங்களில் வயது வந்த ஸ்திரீகளுக்கு கல்வியளிக்க வகுப்புகள் நடத்தலாம். கல்வி, சுகாதார முறை இரண்டும் சகலஸ்திரீகளும் உணரும்படி செய்ய ஹேதுவாகும். இதுபோன்ற ஸ்தாபனங்களும், ஸ்தல ஸ்தாபனங்களும், பொது நலச்சங்கங்களும் கட்டுப்பாடாக ஒரு திட்டப்படி ஒழுங்காகவேலை செய்ய இவர்களின் வேலைப்பாட்டை சர்க்கார் ஒருமைப்படுத்தி உதவி செய்யலாம். ஒரு மத்திய கமிட்டியும், ஜில்லாகமிட்டிகளும் ஏற்படுத்தி பணவசூல் செய்து வேலைத்திட்டம் நிறைவேறுவதற்கான இதரவேலைகளையும் கமிட்டியார் கவனித்து வரும்படி செய்யலாம். இப்பிரச்சினையில் பொதுஜனங்களிடம் ஊக்கம் உண்டாக்கலாம். சமூக சேவை செய்ய அவகாசம் உள்ள படித்த ஸ்திரீகளின் தனிக்கை

ஒன்று எடுத்து அவர்கள் வாரத்துக்கு இத்தனை மணிநேரம் படிக்காத தங்கள் சகோதரிகளுக்கு போதனை செய்ய வேண்டுமென்று சர்க்கார் கேட்டுக் கொள்ளலாம். கலாசாலைப்பட்டம் பெற விரும்பும் பெண்கள் கட்டாயம் மூன்று மாதம் வயதான படிப்பில்லாத ஸ்திரீகளுக்கு கல்வி போதிக்க வேண்டிய சேவை செய்ய வேண்டுமென்று யுனிவர்ஸிடி ஒருவிதி ஏற்படுத்தினால் அதனால் மிகுந்தபலன் ஏற்படும். படித்தபெண்களிடை தாங்கள் 'ஒஸ்தி' பாமரப் பெண்கள் தாழ்த்தி என்ற மனப்பான்மை ஏற்படாமலிருக்கவும் இவ்விதி பிரயோஜனப்படும். சீனாவில் இருந்த அறியாமையை அகற்ற ஆயிரக்கணக்கான மாணவிகள் பாடுபட்டனர். ஏன் நமது பாரதபுத்திரிகளும் அவர்களைப் பின்பற்றக்கூடாது? இம்மாதிரியான சேவை செய்யும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், உபாத்தியாயினிகள் முதலியோருக்கு சர்க்காரும், ஸ்தலஸ்தாபனங்களும், பிரமோஷன், சம்பள உயர்வு போன்ற விஷயங்களில் சலுகைகாட்டி உற்சாகமூட்டவேண்டும்.

குடும்பஸ்திரீகள் இந்த வகுப்புகளில் வந்து படிக்க அந்த நேரங்களில் அவர்களின் குழந்தைகளை கவனித்துக் கொள்ள பொறுப்புள்ள கற்றஸ்திரீ வாலண்டியர்கள் முன்வந்து தங்கள் சகோதரிகளுக்கு இந்த வகுப்புகளுக்குப் போகவேண்டிய உற்சாகத்தையும் வசதியையும் கொடுக்க வேண்டும். ஏழைத் தொழிலாள ஸ்திரீகளுக்கு அவர்களின் குடியிருப்பு இடங்களுக்குப் பக்கத்திலேயே வகுப்புகள் நடத்தி அவர்களும் கல்வி என்னும் கண்ணைப் பெற்று உய்விக்கும்படி செய்ய வேண்டியது கற்றுத் தேர்ந்த கன்னியர்களின் கடமையாகும். இத் தொண்டு சமூகசேவை மட்டுமல்ல; ஆடம்பர மற்ற தேசசேவையு மாகும்; ஆண்டவனின் சேவையு மிதுவே. கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள், உபாத்தியாயினிகள், வைத்திய சுகாதார இலாக உத்தியோகஸ்தர்கள் யாவரும் ஒத்துழைத்து ஒரு சரியான திட்டம் வகுத்து வேலை செய்தால் நம் மக்களிடம் மண்டியிருக்கும் படிப்பின்மை வெகுசீக்கிரம் ஒழிந்துவிடும். பாஞ்சாலத்தில் இதுபோல் வேலை நடந்து வருவதாகத் தெரிகிறது. இந்த கைங்கர்யத்துக்கு சினிமா, ரேடியோ இவ் விரண்டையும் தாராளமாக உபயோகித்துக் கொள்ளலாம்.

மஹாத்மா காந்தியடிகள் சமீபத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு ஓட்டுரிமை வழங்குதல் கூடாது என்று தன் அனுபவ உண்மையைக் கூறியிருப்பதையும் ஈண்டு நான் ஞாபக மூட்டிக் கொள்கிறேன். அரசியல் முன்னேற்றமும், சமூகசீர்திருத்தமும் ஏற்பட பொது மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருப்பது அவசியம் என்றும் அதுவரையில் வயது வந்தவர்களுக்கு ஓட்டுக் கொடுப்பதை (Adult franchise) நிறுத்தி எழுதப் படிக்கத் தெரிந்தவர்க்கு மட்டும் தான் (Literacy franchise) ஓட்டுரிமை இருக்க வேண்டுமென்று மஹாத்மா கூறுகிறார். 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்று கூறியிருக்கிறார் மூத்தோர். எனவே இந்த மாபெரும் சேவை செய்ய நம் யுவதிகள் ஒவ்வொருவரும் முன்வர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.



# ஈராக்

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

ஈராக் என்ற தேசம் சென்ற மஹா யுத்தத்துக்குமுன் மெஸப்பட்டோமியா என்றழைக்கப்பட்டு வந்த பிரதேசம். இதற்கு வடக்கே குர்திஸ்தானமும், தெற்கே அரேபியாவும், மேற்கே பாலஸ்தீனமும், ஸிரியாவும், கிழக்கே பாரஸீகமும் இருக்கின்றன. இதன் விஸ்தீரணம் சுமார் 143250 சதுரமைல்கள். 1920-ம் வருஷ ஜனத்தணிக்கைப் பிரகாரம் ஈராக்கின் ஜனத்தொகை சுமார் முப்பது லக்ஷம்.

இது ஒரு புராதன நாடு. ஒருக்காலத்தில் நாகரீகம் மிகுந்து பல நகரங்களிருந்திருக்கும் என்றே தெரியவருகிறது. பல நகரங்கள் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன. இதன் சரித்திரமும் மிகப் பழமையானது. மஹாயுத்தத்துக்குப்பின் இது பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குட்பட்ட அரசாங்கமாகச் செய்யப்பட்டது. அமீர் பாஸல் என்பவர் 1921-ம் வருஷம் ஜனநாயக வாக்கின்பேரில் அரசனாக பிரகடனம் செய்யப்பட்டார். அவரது குடும்பமே இன்று ஈராக்கை ஆண்டு வருகிறது. பேருக்கு பூரண சுதந்திரம் அடைந்துவிட்டதாகக் கருதப்பட்ட போதிலும், பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலேயே உண்மையில் இருந்து வருகின்றதென்று சொல்லலாம். ஈராக்கின் முக்கிய நகரங்கள் பாக்டாட், பஸ்ரா, மோசூல் முதலியன. முக்கிய நதிகள் டைக்ரீஸ், யூப்ரடீஸ்.

இந்த தேசத்தின் பிரதான விளைபொருள்கள் பெட்ரோலியம் முதலிய மண்ணெண்ணைகள், கோதுமை, பருத்தி, ஈச்சம் பழம், மணிலாக்கொட்டை, பார்லி முதலியன. நிலம் விவசாயத்துக்கு ஏற்ற செழிப்பான பூமி. விவசாயம் அபிவிருத்தியாகி வருகிறது. முக்கிய துறைமுகம் பஸ்ரா. தந்திக்கம்பி வசதிகளும் ரயில்வே வசதியும் இருக்கின்றன. இந்நாட்டில் பெரும்பான்மையோர் முகமதியர்கள். யூதர்களும், கிறிஸ்தவர்களும் கூட இருக்கின்றனர்.

ஜனங்களில் பிரபுக்களுக்கு 'பெடூன்கள்' (Beduins) என்று பெயர். இவர்கள் இதரவகுப்பினரை சம அந்தஸ்துடன் நடத்தமாட்டார்கள். பல அராபிய குடும்பத்தினர் வெகு அழகானவர்களாகவும், தீரமும், கம்பீரமு முடையவர்களாயும், உயர்ந்தவர்களாயும் இருக்கின்றனர். இவ்வாரபியர்கள் வீரமிகுந்தவர்கள். பொதுவாக நாகரீகம் குறைந்தவர்களென்று கருதப்படுகிறார்கள். கொள்ளையடிப்பதில் இன்னும் இவர்களுக்கு ஒருவிதமான பிரேமை இருந்து வருகிறதென்றே சொல்லப்படுகிறது.

'ஸாபியன்ஸ்' அல்லது நட்சத்திரம் பூஜிப்பவர்கள் என்ற ஒரு நூதன வகுப்பினர் இருக்கின்றனர். இவர்கள் கிறிஸ்து, மகமதிய, யூதமதங்களிலுள்ள பல அம்சங்

களையும் அனுஷ்டித்து வருகின்றனர். இவர்கள் வெள்ளிவேலையில் மகாசமர்த்தர்கள். பேய் பூஜிப்பவர்கள் என்று ஒரு கூட்டமும் இருக்கின்றது. இவர்கள் பாம்பையும், மயிலையும் பூஜிக்கின்றனர்.

முஸ்லீம்களுக்கு முக்கியஸ்தலங்களாகிய கீர்பாலா, (Kerbala) நஜாப் (Najaf) காஜிமெயின் (Kazimain) முதலியன ஈராக்கிலிருக்கின்றன. ஷீயா, ஸன்னி இருவகுப்பு முஸ்லீம்களும் இந்நாட்டு ஸ்தலங்களுக்கு அடிக்கடி யாத்திரை போகின்றனர். இந்த நகரங்களிலும் வீடுகளும், ரோடுகளும் அவ்வளவு உயர்ந்த தன்மைகளாக இருக்கவில்லை. மாடிவீடுகள் காண்பது துர்லபம். ரோடுகள் எல்லாம் வெகு குறைவான அகல முள்ளவைகளாகவே இருக்கின்றன.

அராபியர்கள் காப்பி குடிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவர்கள். புகையிலையையும் பலவிதங்களில் உபயோகிக்கின்றனர். முக்கிய ஆகாரம் பேரீச்சம்பழம், வெள்ளரிப்பழம், முலாம்பழம் முதலியன. வைத்தியமும், க்ஷவரமும் ஒரே வகுப்பினர் செய்கின்றனர். பொதுவாக ஈராக் ஜனங்கள் மருந்துகளில் அதிக நம்பிக்கை இல்லாதவர்கள். அல்லாவின் பேரில் பாரத்தைப்போட்டு தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

## ஸ்திரீகள்

சாதாரண அந்தஸ்துள்ள ஸ்திரீகள் கூட அழகாகவே இருக்கின்றனர். இவர்கள் 'பர்தா' அணிவதில்லை. இவர்கள் மிகவும் புத்திசாலிகளாகவும், உழைப்பாளிகளாகவும் இருக்கின்றனர். பிரபுக் குடும்பங்களைச்சேர்ந்த ஸ்திரீகள் எப்பொழுதும் 'பர்தா' அனுஷ்டிக்கின்றனர். இன்னமும் ஆடவர்கள் நாலைந்து மனைவியரை மணந்து கொள்ளுகிறார்கள். பர்தா அணிந்த ஸ்திரீகள் கூட குடும்பவேலைகளை எல்லாம் தாங்களே கவனித்து வருகின்றனர். ஸ்திரீகள் அதிக சுதந்திரமுடன் வாழாவிட்டாலும் தங்கள் நிலைமையில் அதிருப்தி அடைந்தவர்களாகக் காட்டிக் கொள்ளவில்லை. இவர்களின் உடை காபூலிப் பெண்கள் உடைமாதிரியே கிட்ட தட்ட இருக்கின்றது. குடும்பங்களில் சமாதானமும், பரஸ்பர அன்பும் குடிகொண்டிருக்கிறது. ஆண் மகன் தான் சமூகத்தில் உயர்ந்தவனாக இருக்கின்றான். பெண்களிடத்தில் இன்னும் சுதந்திர சமூக சீர்திருத்த ஆர்வம் அவ்வளவாக ஏற்படவில்லை. பலவித விசித்திர நகைகளை அணிவதில் அவர்களுக்கு அதிக ஆசை. ஆண் பெண் இருபாலாரிடையும் இன்னும் மேல் நாட்டு நாகரீகம் பரவவில்லை. அந்தந்த வகுப்பினர் தங்கள் தங்கள் பண்டைய பழக்க வழக்கங்களையே அனுஷ்டித்து வருகின்றனர்.

பொதுவாக ஈராக் ஜனங்கள் சட்டதிட்டங்களுக்கு அதிகமாக கட்டுப்பட்டு நடக்கும் குணம் வாய்ந்தவர் களல்ல. எனவே அரசாங்கம் ஒருவாறு நடைபெற்று வருகிற தென்றே சொல்லலாம். இன்னும் ஸ்திரமான நிலை யேற்படவில்லை.



# சிவராத்திரி விரதமகிமை

"ஞானு"

ஒரு காலத்தில் நைமிசாரண்ணிய வாசிகளாகிய மகரிஷிகள், ஸ்ரீஸூத முனிவரை நோக்கி, "ஸ்வாமி! உலகத்தில் எந்த விரதத்தை ஆசிரயித்தால் சிவபெருமான் உவந்து சகல சுகங்களையும், புத்தி முக்திகளையும் கொடுப்பாரோ அந்த விரதத்தை எங்கட்குச் சாற்றுவீர்" என வினவ அதற்கவர் உளம்பூரித்து, பூர்வத்தில் இது விஷயமாய், சிவபெருமான் தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்கிச் சொல்லியருளிய சாராம்சத்தை இயம்பலுற்றார்.

விரதங்களுக்கெல்லாம் சிவராத்திரி விரதமே முதல்தரமானதும், உத்தமமானதுமாம். அன்றியும் இதுவேதங்கள், உபவேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் ஆகிய இவற்றினுள் சொல்லியிருக்கும் இரகசியங்களிலும், அதிரகசியமான சாராம்சம். உலகத்தில் மோக்ஷங்கொடுக்கத் தக்கவை நான்கு, அவை:— 1. சிவார்ச்சனை. 2. உருத்திர பாராயணம் அஷ்டமி சோமவாரம். 3. கிருஷ்ணபக்ஷம், சதுர்த்தசி, (பிரதோஷம்) ஆகிய இம்மூன்று நாளுபவாசமும், 4. காசி க்ஷேத்திரத்தில் மரணமும் ஆகும். ஆனால் இந்நான்கினும் சிவராத்திரி விரதமே அதியுக்தமானது. புத்திமுக்திகளையடைய விரும்பும் சகோதரிகள் இவ்விரதம் ஒன்றையே அனுஷ்டித்தால் போதுமானது. இவ்விரதத்தை எந்த விதியால் எப்படி பூஜிக்கவேண்டும் என்பது நம்மில் பலருக்கு இன்னும் தெரியவில்லை.

இவ்விரதம் எல்லோருக்கும் தர்மசாதனமானது. எவ்வருணத்தாருக்கும், சிறியோர், பெரியோர், சிறுமிகள், மங்கைகள், தாய்மார்கள், சகோதரிகள், முதலியோருக்கும் தகுதியானது. இது மாசிமாத கிருஷ்ணபக்ஷசதுர்த்தசி அர்த்த ராத்திரி பதினன்கு நாழிகையில் வருவது; கோடி பாவங்களையும் நசிப்பிக்கும். சகலசம்பத்தும் பெருகும். அன்று கதிரவன் உதிக்கு முன் எழுந்திருந்து சந்தோஷமனதுடன் காவேரிநதி, முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சிவாலயம் சென்று, சிவபூஜை புரிந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ் சொல்லி, மனம் அனலில் இட்டமெழுகு போல் உருக அன்பினால் மெய்மறந்து ஸ்வாமியை நோக்கி "சிவபெருமானே! நின் திருக்கருணையால் இச் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டுமென் றிச்சையுற்றேன். அது நிர்விக்கினமாக முடியுமாறும், விரதமுடியுமளவும் மனமாறுபடாது, பகல் நித்திரை முதலிய அபத்தியங்கள் விலகியிருக்குமாறு அனுக்கிரகிக்க வேண்டு" மென்று பிரார்த்தித்துக்கொண்டு பூஜா திரவியங்களைச் சேர்த்துக்கொண்டு, சிவலிங்கத்திற்கு பூஜை செய்து, பக்தியோடு கண்விழித்து ஜாமங்களைக் கழிக்கவேண்டும்.

முதன் முதலில் இலிங்கத்தை வைத்துச் சுத்தமான ஜலத்தாலும், பிறகு எண்ணெய் பால், தயிர், நெய், தேன், பழங்கள், சந்த

னம், வாசனாதிகள் கலந்த தீர்த்தம் இவற்றாலும், கடைசியில் பஞ்சாமிர்தத்தாலும், அபிஷேகஞ்செய்து, பின்னர் உலர்ந்த வஸ்திரத்தினால் சிவலிங்க மூர்த்தியை, உபசாரமாக ஒத்தி, சுகந்த பரிமள சந்தனஞ் சாத்தவேண்டும். முதலாம் ஜாமத்தில் சதபத்திரம், கமலம், காவீரம், முதலிய புஷ்பங்களும், இரண்டாம் ஜாமத்தில், கமலமும், வில்வமும், மூன்றாம் ஜாமத்தில் அறுகும் ஆத்தியும், நாலாம் ஜாமத்தில் நறுமணம் கமழும் மலர்களுங்கொண்டு சிவநாமங்களால் அருச்சிக்கவேண்டும். நான்கு ஜாமத்திலும் வெவ்வேறாக நிவேதனைசெய்து, சக்திக்கேற்றவாறு தாம்பூலதக்ஷிணைகளோடு பிராமண போஜனம் முதலியவை அளிக்கவேண்டும்.

மற்றைய நேரங்களில், சிவமகிமையைப் பிறர்க்குச் சொல்லவேண்டும் அல்லது பிறர் சொல்ல சிரவணஞ் செய்யவேண்டும். விடிந்தபிறகு மீண்டும் ஸ்நானம் செய்து சிவனை ஸ்தோத்தரித்துச் சிவபெருமானிடத்தில் "சுவாமி! தேவரீரது கிருபையால் யான் விரும்பிய சிவராத்திரி விரதத்தை முடித்தேன். என் சக்திக்கேற்ப யான் செய்த பூஜைக்கு தேவரீர் சந்தோஷித்து நற்பயன்களைக் கொடுக்கவேண்டும்" என்று புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து நமஸ்கரித்து, பார்வதிதேவியாரையும் நமஸ்கரித்து தான் செய்த பூஜாபலனைச் சிவப்பிரீதிசெய்து ஜலபானம் பண்ணி, அவ்விரத நியமத்தைவிடவேண்டியது.

இந்த விரதத்தினால் சகல சம்பத்தும் பெருகும். பார்வதி தேவியாரும், சிவபிரானும் இறும்பூதெய்துவர். அவர்களது அனுக்கிரகம் கிடைக்கும்.

பிரம கற்பமொன்றில் சக்தி நான்கு ஜாமத்திலும் சிவபூஜை செய்து தாம் பூசித்தகாலம் சிவராத்திரியாக வெனவும் அன்று பூஜிக்கும் சகோதரிகளுக்கு நற்பயன் அளிக்கவேண்டுமெனவும் சிவபிரானைவேண்டி வரம்பெற்ற நாள் எனவும், சக்திதேவியார் விளையாட்டாகச் சிவமூர்த்தியின் திருநேத்திரங்களை மூட உலகங்கள் இருண்டன. அப்போது தேவர்கள் சிவபிரானை வணங்க அக்காலமே சிவராத்திரி யாயிற்றென்றும் புராணங்கள் கூறுகின்றன. இன்னும் இதுபற்றிய கதைகள் சகோதரிகள் உணர்ந்திருப்பதால் நான் விவரிக்க விரும்பவில்லை.

இந்த சிவராத்திரி விரதம் இம்மாதம் (பிப்ரவரி) 17 ம் தேதி வருகின்றது. அன்றையதினம் எனதன்பார்ந்த கிரஹலக்ஷ்மிகள் யாவரும் சிவராத்திரி விரதமிருந்து, பார்வதி தேவியாருடையதும் சிவபிரானுடையவும் அனுக்கிரகம் பெற்று சீரும் சிறப்புமாய் ஜயலக்ஷ்மியாய் விளங்குவார்களாக.

வென்றாளே புலன்களைத்தார் மெய்யுணருள்ளந் தோறுஞ்
சென்றாளே யமுதமூற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றாளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றாளே மாறியாடு மறைச்சிலம்படிகள் போற்றி.



# ஸந்தேஹ நிவர்த்தி

திரு ஏ. வெங்கட்ராமன்

'ஸேவாஸதன்' என்ற ஒரு அழகிய மாளிகையின் மெத்தையறை ஒன்றில், 'இந்தியாவின் தவநடிகர்' என புகழப்படும், மிஸ்டர் ஸம்பத்குமார் எம்.ஏ. (M. A.) ஒரு ஈஸிசேரில் சாய்ந்த வண்ணம், அன்றுதான் 'ஹாலிவுட்'டிலிருந்து தனக்கு வந்த 'ஸினிமா க்ரானிகல்' என்ற ஆங்கில மாதாந்திர ஸினிமா பத்திரிகையை வெகு ஆவலுடன் வாசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது யுவனும், யுவதியும் ஆழ்ந்து காதலில் ஈடுபட்டு முத்தமிடும் காக்ஷியான புகைப்படமொன்று ஒரு பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்தது. அதன் அடியில் 'மெஜஸ்டிக் பிக்சர்ஸ்' கம்பெனியாரால் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வரும் 'வஸந்த காலம்' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கும் மிஸ்டர் ஜான் பி.ஏ. (B.A.)யும், அவருடன் கதாநாயகியாய் நடிக்கும் பிரபல இந்திய நடிகை மிஸ் ஸுலோசனாவும் என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இதைப்பார்த்த ஸம்பத்குமார் தன் கண்களையே நம்பவில்லை. மீண்டும் மீண்டும் புகைப்படத்தையும், அதன்கீழ் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விஷயத்தையும் உற்றுப் பார்த்தார். "ஆம் இது ஸுலோசனா தான். கொஞ்சங்கூட ஸந்தேஹமில்லை. அதோ அவள் கையில் மச்சமும் நன்றாய்த் தெரிகிறதே. ஆ! பாவி, நான் கெட்டேன். ஸினிமாவின் அரிய நுட்பங்களையும், நடிப்புத்திறமையையும் கற்றறிந்து வருவதற்காக என்னருமை ஸுலோசனாவை 'ஹாலிவுட்'டிற்கு அனுப்பியதின் பயன் இதுதான்போலும். தான் எக்காரணத்தைக் கொண்டும் பிற ஆடவருடன் நடிப்பதில்லை என்று அவள் செய்த சத்தியத்தையும் மீறி ஜானுடன் கொஞ்சமும் வெட்கமில்லாமல் காதல் படத்தில் நடித்திருக்கிறாள். ஆம் காலத்தின் கோலம் இது தான்........" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு, தான் வாசித்துக் கொண்டிருந்த பத்திரிகையை எரிச்சலுடன் ஒரு மூலையில் வீசி யெறிந்தார்.

அச்சமயம் "ஸார், தந்தி" என்று கூறிய வண்ணம் தந்திச்சேவகன் உள்ளே நுழைந்தான்.

"யாருக்குத்தந்தி ?" என்று வினவிய வண்ணம் கையை நீட்டினார் ஸம்பத்குமார்.

"உங்களுக்குத்தான்" என்று ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டு, கையெழுத்தை வாங்கிக்கொண்டு சென்றான் தந்திச் சேவகன்.

தந்தியை வாங்கிக்கொண்ட ஸம்பத்குமார், பரபரப்புடன் அதைப்பிரித்து வாசித்தார். அதில்,

ஹாலிவுட்,
ஸு........மீ........உ........

நான் என்னன்பார்ந்த ஜானுடன், இங்கிருந்து ........உ புறப்பட்டு, பம்பாய்க்கு

......ட வரும் 'மோஹினி ஆப் இண்டியா' (Mohini of India) என்ற கப்பலில் வருகிறேன். கட்டாயம் துறைமுகத்தில் (Harbour) சந்திக்கவும், தவறக்கூடாது.

ஸுலோசனா

என்று வரையப்பட்டிருந்தது.

இதை வாசித்த ஸம்பத்குமாரின் நிலைமையை நேயர்களே ஊஹித்தறிவார்கள். 'எரியும் நெருப்பில் குங்கிலியத்தை கொட்டியது' போல், அவருடைய முகமும், கண்களும் கோவைப்பழம் போல் சிவந்தன. பற்களை நறநறவென்று கடித்தார். "என்னை மறந்து, கொஞ்சமும் 'மானவமான மில்லாமல், தான் உயர்குடும்பத்தில் பிறந்து, சமகுலத்தில் வாழ்க்கைச் சம்பந்தத்தை வைத்துக்கொண்டவள் என்பதையும் நினையாமல், அன்னியருடன் கொஞ்சிக்குலாவி நடிக்கும் பரத்தையை நான் எதிர் கொண்டழைக்க வேண்டுமா? பேஷ்! தன்னுடன் தன்னன்பார்ந்த ஜானும் வருவதைப் பெருமையுடன் எழுதியிருக்கிறாள். 'அன்பார்ந்த' என்பதைக்காட்டிலும் 'ஆசைக் கண்ணாளன், காதலன்' என்று எழுதியிருக்கலாமே. அவனுடன் கூடி நடித்தது மல்லாமல் அவனையும் தன்னுடன் கூட அழைத்து வருகிறாளாமே! என்ன மமதை! 'கட்டாயம் சந்திக்கவும், தவறக் கூடாது' உத்திரவைப்பார் உத்திரவு. என்னை உன் வேலைக்காரனென்று எண்ணிக் கொண்டாயோ? வரட்டும்" என்று சொல்லிக்கொண்டே தந்தியைக் கிழித்தெறிந்தார்.

## 2

ஒருநாள் மாலை ஸுமார் 4 மணியிருக்கும். ஸம்பத்குமாரர் தன்னறையினுட்கார்ந்துகொண்டு, ஸுலோசனாவைப்பற்றியே, யோசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது "ஹலோ! மை டியர் ஸம்பத்குமார்" (Hollow! My dear Sampath-kumar) என்று அன்பும் காதலும் ததும்பும் குரலில் கூப்பிட்டுக்கொண்டே, 24 வயது மதிக்கத்தகுந்த ஒரு யௌவன மங்கை, ஸம்பத்குமார் இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

குரலிலிருந்தே தன்னையார் கூப்பிட்டது என்றறிந்து கொண்ட ஸம்பத், ஸுலோசனாவைப் பார்க்கவும் மனமில்லாதவராய்க் கீழேகுனிந்து கொண்டார்.

ஸம்பத்தின், நூதன செய்கையைக் கண்ட ஸுலோசனா (வந்தவள் சம்பத்குமாரின் பிரியமனைவி யென்பதைவாசகர்கள் அறிந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்) திக்பிரமை கொண்டவளாய் "என்ன? ஏன் என்னுடன் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டிருக்கிறீர்? என்னைப்பார்க்கவும் இஷ்டமில்லையா? என்னைப் பிரிந்து ஒரு கணமும் இருக்கமுடியாது என்று கூறிய தாங்களா இவ்விதம் என்னைக்கண்டும், என்னுடன் பேசாமலிருக்கிறீர்!" என்று வினவினாள்.

"சீ துரோகி! இங்கு உனக்கென்ன வேலை. வந்தவழியே போ. உனக்கிங்கு யாதொரு பாத்தியமும் கிடையாது" என்று, தன் கோபத்தை யடக்கிக்கொண்டு கூறினார் குமார்.

"நாதா! இதென்ன? இதுவரையில் தாங்கள் என்னுடன் பழகிய காலத்தில் இம்மாதிரி ஒரு தடவைகூட கோபித்துக் கொண்டதில்லையே. ஏன் என் மீது கோபம்? நான் என்ன செய்தேன். என்





னுடைய வெற்றியையும், புகழையும் கேட்டு தாங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என்றல்லவோ எண்ணி ஓடோடியும் வந்தேன்" என்றாள் ஸுலோசனா.

"பெண்பேயே! யாரை உன் நாதன் என்றழைக்கிறாய்? உன் ஸினிமா சாகஸத்தை இங்கு என்னிடமே காட்ட வந்துவிட்டாயோ? உன்சாகசச்செய்கைகளினால் நான் ஏமாறமாட்டேன். மரியாதையாய் வெளியேபோய் விடு. கோபம் வந்தால் நான் உன்னை என்ன செய்வேனென்று எனக்கே தெரியாது."

'அன்பரே! நான் உங்களுக்கு என்ன தவறிழைத்தேன்? ஏன் என்னை இவ்வாறு ஏசுகிறீர்கள்? என் பிழையைத் தெரிவித்தால் அல்லவோ என்மனம் நிம்மதியடையும்?"

"என்ன? செய்வதையும் செய்துவிட்டு ஒன்றும் தெரியாதவள் போல் 'என்ன தவறிழைத்தேன்?' என்று என்னையே கேட்கிறாயே! உன் தவறு உனக்கே தெரியாதா......"

"நாதா! என் மனமறிந்து நான் உங்களுக்கு ஏதும்தப்பிதம் செய்யவில்லையே! அப்படியே நான் அபலை ஏதேனும் தவறிச் செய்திருந்தால் என்னை மன்னிக்கவேண்டும்" என்றுகூறி ஸம்பத்குமாரின் காலடியில் விழுந்து, அவருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீருகுத்தாள் ஸுலோசனா.

"மன்னிப்பா?........ உன் குற்றம் உனக்கே தெரியாது. இது எவ்வளவு தூரம்மெய்? வீண்பாசாங்கு செய்யாதே" என்று கூறிய வண்ணம், தன் கால்களைப் பற்றிக்கொண்டிருந்த ஸுலோசனாவை எட்டி உதைத்தார் ஸம்பத்.

கொஞ்சநேரங் கழித்து எழுந்திருந்த ஸுலோசனா கண்களில் நீர்ததும்ப சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒரு மூலையில், தன்னுடைய படம் வெளியான பத்திரிகை யொன்று வீசி எறியப்பட்டு கிடப்பதும், தந்தி கிழிக்கப்பட்டு மூலையில் பறப்பதும் அவள் கண்களுக்குத் தென்பட்டது. தன் பர்த்தாவின் சந்தேஹத்தை உடனே ஒருவாறு யூஹித்துக் கொண்டவளாய், "நாதா! என்மீது வீண் சந்தேஹம் கொள்ளாதீர்கள். நான் நிரபராதி. நீங்கள் நினைப்பது போல் குற்றம் செய்தவளல்ல. இதை உறுதியாய் நம்புங்கள்" என்று கூறினாள்.

"நிரபராதி! நீயா நிரபராதி? நான் நம்பமாட்டேன். கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேறுவேண்டுமா? உன் அட்டூழியச் செய்கை பத்திரிகையில் வெளிவந்திருக்கையிலேயே நீ இவ்வாறு மறைக்கப்பார்ப்பது சோற்றில் முழுப்பூஷனிக்காயை மறைப்பது போலிருக்கிறது."

"நான் சொல்வது முழுவதும் உண்மை. நீங்கள் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஜான் ஒரு ஆடவனல்ல......"

"என்ன? ஆடவனல்லவா?........என்ன வேடிக்கை! இது நம்பக்கூடியதாயில்லையே. அதில் கொஞ்சமும் சந்தேகமில்லை."

"நாதா! நீங்கள் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறீர்களேயொழிய நான் சொல்வதைக் கேட்கமாட்டேன் என்கிறீர்களே. நான் ஜானுடன் நடித்தது வாஸ்தவம்தான். ஆனால் ஜான்

என்னைப்போல ஒரு பெண்பிள்ளை! இதை நீங்கள் நான் சொன்னால் நம்பமாட்டீர்கள். ஜான் என்பவரின் முழுப்பெயர் ஜானகி. அவள் எப்பொழுதும் ஆண்வேஷம் பூண்டு கதா நாயகன் பாகம்தான் எடுத்துக் கொள்ளுவது வழக்கம். அவள் நாகரீகத்தினால் தன் பெயரை ஜான் என்று சுருக்கி வைத்துக்கொண்டாள். அவள் ஆண் வேஷம் பூண்டு நன்றாயும், திறமையாயும் நடித்ததால் அவளுக்கு ஜான் என்ற பெயரே நிலைத்துவிட்டது. அதனால் பட முதலாளிகளும் ஜான் என்ற பெயரின் முன் மிஸ்டர் என்ற அடை மொழியையும் சேர்த்து பிரசுரம் செய்திருக்கிறார்கள். நான் ஆடவர்களுடன் சேர்ந்து நடிக்க மாட்டேன் என்ற விஷயம் டைரெக்டருக்கும், படமுதலாளிகளுக்கும் தெரியுமாதலால் என்னுடைய உண்மை நடிப்பைப் படம் பிடிக்கவிரும்பி, ஜானுக்கு ஆண் வேஷம் தரித்து, 'வஸந்தகாலம்' என்ற காதல் படத்தில் நடிக்க ஏற்பாடு செய்தார்கள். இதுவே ஜானைப்பற்றிய வரலாறு" என்று முடித்தாள் ஸுலோசனா.

"இது என்ன கதையா? அல்லது உண்மைதானா? நீ சொல்வது நம்பக்கூடியதாயில்லையே!" என்றார் ஸம்பத்.

"இன்னும் எதற்கு வீண் ஸந்தேஹம்?" என்று ஸுலோசனா கீழே இறங்கிப்போய், ஸுமார் 25 வயது மதிக்கத்தகுந்த ஜான் என்ற வாலிபனுடன் திரும்பி வந்து "நாதா! இவர்தான் ஜானகி என்ற பெண். இவளுக்கு ஆண்வேஷம் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது பாருங்கள்!" என்றுகூறி, அவ்வாலிபனை ஒரு சிறு அறைக்கு அழைத்துக்கொண்டு போய், அவளுக்கு அவளுடைய பெண் உடையை அணிவித்து, ஆடையாபரணங்களுடன் ஸம்பத்குமாரிடம் அழைத்து வந்து "இப்பொழுதாவது தீர்ந்ததா தங்கள் சந்தேகம்?" என்று சிரித்தாள்.

ஸம்பத்குமார் தன் ஆத்திர புத்தியைக் குறித்து வருந்துபவன் போல், வெட்கத்தினால் தலைகுனிந்து கொண்டான்.



**சங்கீதம்**

# வாய்மை

திரு. ஜே. வெங்கடராம அய்யர்

ஃ

**வா**ய்மை யென்பதே சத்தியம். அரிச்சந்திரபுராணமே இதற்கத்தாட்சி. அல்லதை யுள்ளதாயுரைப்பதும் வாய்மையை மீறுதலாகும். சத்தியம் அல்லது மெய்யே ஆத்மாவின் உத்வேகம் (Soul force). அதுவே ஆத்மபலமும் வீரியமும். இந்த மெய்யென்பதென்ன? பெரியோர் சொல்லியிருக்கும் வசனங்களும், வேதபுராண உபநிடதகீதா நூற்களும் உண்மையைக் கொண்டவை. அவைகளைக் கடைப்பிடித்தொழுகலே வாய்மை விரதமாகும். "சத்ய" மென்பது சொல்லப்போனால் மனதினால் நினைந்து நாவின் மூலம் சொல்லப்படும் யாவற்று நன்மைகளுமாகும். இதை இன்னது தானென வரையறுத்துச் சொல்லவியலாது. ஏனெனில் அது பகவானுடைய அனந்த குண கல்யாணங்களி லொன்றாதலால் எல்லையற்றது. ஸத்யமே நித்யானந்தத்தை யளிக்கும். இதுவே பக்தர்களின் அங்கி. இப்படிப்பட்ட சத்தியவ்ருதனை யார் எதிர்த்துத் துன்புறுத்துகிறார்களோ அவர்கள் சத்தியத்தையே அழிக்க முயல்கிறார்கள் எனலாம். இதனாலன்றோ "ஸத்யாந்நாஸ்தி பரோதர்மஹ" என்ற சுருதி வாக்கியம் பெரியோர் உபதேசிக்கின்றனர். இப்பக்தனே சுகி. அடியார்களும் பகவானுடைய அவதாரங்கள். அவர்கள் மூலம் நன்மையும் சத்தியமும் நிலை நிறுத்தப்படுகின்றன.

கானடா—ஆதி.

பல்லவி

ஸுகி யெவ்வரோ?—ராம—நாம. || ஸு

அ. பல்லவி

ஸுகி யெவ்வரோ!—ஸுமுகி யெவ்வரோ?

அகில ஸாரமகு—தாரகநாம || ஸு

சரணம்

ஸத்யமுதப்பக—ஸகலலோகுலகு—ப்ருத்யுடை தெய்வ—பேத முலேக

நித்யமைன, ஸு—ஸ்வரமு கானமுதோ—நிரந்தர முகத்யாக—ராஜ நுத நாம ||
ஸு

## பொருள்

அனுபல்லவியும் பல்லவியும் :—அகிலஸாரமகு=உலகில் எல்லா நற்குண நற்செய்கைகளின் சாரமாகிய; தாரகநாம=சகலஜீவர்களையும் பிறவிக் கடலினின்று தாண்டுவிக்கும் நாமாவாகிய; ராமநாம=ஸ்ரீ ராம நாமாவின்; ஸுகி யெவ்வரோ; ஸுகி அல்லது அனுபவிப்பவன் அல்லது சுவை யறிபவன் யார்? ஸுமுகி=நல்லவாயையுடையவர்; எவ்வரோ? =யார் அதாவது சத்யசீலன் யார்?

சரணம் :—ஸத்யமுதப்பக =சத்தியம் பிறழாமல்; ஸகலலோகுலகு=யாவற்று ஜீவர்களுக்கும், ப்ருத்யுடை=சேவகனாகி; தெய்வபேதமு=மூர்த்தி சமயத்தெய்வ வேற்றுமை, லேக=இன்றி; நித்யமு=அனுதினமும்; ஸுஸ்வரமு கானமுதோ=நல்ல இன்னிசையால் பாடி; நிரந்தரமுக=இடைவிடாது; த்யாகராஜநுத நாம=ஸ்ரீத்யாக ராஜனால் துதிக்கப்பட்ட ஸ்ரீ ராம நாமாவைப்பாடி ரமிக்கும்; ஸுகி யார்?

> "ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே
> ஸஹஸ்ர நாமதத் துல்யம் ஸ்ரீராம நாம வரானனே"

ஆயிர நாமங்களிலும் ராம நாமமே உயர்ந்ததென ஈசன் பார்வதிக் குபதேசித்தபடி இத்தாரக நாமாவை ரமிப்பவன் யார் என்ற இக்கீர்த்தன சரணத்தில் "சத்யமுதப்பக" என்றிருப்பதில் சத்தியமே பக்தியின் அடிப்படையான குணம். அது வன்றி ராம நாமம் ஜபிப்பதில் உபயோகமில்லை. ஸத்திய நிலை நிற்பவனே மேலானவன்.

"உள்ளத்தார் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

"பொய்யாமை யன்னபுகழில்லை யெய்யாமை
யெல்லா அறமுந் தரும்"

"யாமெய்யாக் கண்ட வற்றுளில்லை யெனைத்தொன்றும்
வாய்மை யினல்ல பிற"

— திருக்குறள்





அன்னையின் அன்பு



ஸ்ரீமதி வி. ராதாமணி

"கிரஹலக்ஷ்மி"யில் உயர்தர வியாசங்கள் எழுதிவருபவர். வாய்ப்பாட்டிலும், வீணை வாசிப்பதிலும் தேர்ச்சியடைந்தவர். அகில இந்திய ரேடியோவிலும் தன் திறமையைக்காட்டி வாசித்திருக்கிறார்.



# தமிழ் மொழி

ஸ்ரீமதி வி. ராதாமணி

இத்தமிழ் மொழியானது இன்றைக்கு எத்தனையோ நூறு ஆண்டுகளுக்கு முன், சிவபெருமானால் அகத்தியருக்கு போதிக்கப் பெற்றது. பின் ஒரு காலத்தில் அகத்தியனார் முருக பிரானுடன் வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் அவர்களிருவரும் பேசிக் கொண்டிருந்த மண்டபத்தில் சுகந்த வாசனை கம கம வென்று பரிமளித்தது. இது யாதென்று அகத்தியர் சுப்பிரமணியரை வினவ அவர் அகத்தியரை அழைத்துக் கொண்டு போய் ஓர் மூலையிற் கிடந்த ஏட்டுக்குவியலைக் காண்பித்தார். அதைக்கண்ட மாத்திரத்தில் அகத்தியர் "ஆ! தமிழ் தமிழ்" என்றார். தமிழ் என்றால் இனிமை என்றர்த்தம். உடனே முருகபிரான் அவரைத் தென்றிசைக்குப் போய் தமிழைப் பரவச் செய்யும்படி சொன்னார். அகத்தியர் ஆனந்தத்துடன் அவ்வேட்டுக்குவியலை எடுத்துக் கொண்டு பொதிய மலைக்கு வந்து தமிழ் பாஷையை உண்டு பண்ணி இரண்டு இலக்கண நூல்களையும் பல இலக்கிய நூல்களையும் உண்டாக்கினார்.

தமிழோசை இயற்கையாகவும், நாவிற்கெளிதாயும், செவிக்கின்பமாயும், கற்குந்தோறும் கேட்குந்தோறும் தீஞ்சுவை தந்து சிறந்து மனத்திற்கு சந்துஷ்டி தருவதாய் நிலவுகின்றது. இச்சிறப்பு நோக்கியே கல்லாடனார் "உள்ளுதோருள்ளுதோறுணவமுதுறைக்குத் திருமுத்தமிழ்" என்றும் "அமுது ஆற்றெழுந்த நெஞ்சம் களிக்குந் தமிழ்" என்றும், மணிவாசகப் பெருமான் "ஒண்தீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" என்றும், இராமலிங்க சுவாமிகள் "இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசையும் பெருமறைப்பையும் போது போக்கையும் உண்டுபண்ணுகிற ஆரிய முதலிய பாஷைகளிற் எனக்கு ஆசை செல்லமாட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கு மிக இனிமையுடையதாயிருக்கிற தேன் மொழியாகிய தமிழ்மொழியொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அம்மொழியில் பாடுவித்தருளினீர்" என்று சொல்லியிருக்கிறார். இதுபற்றி மனோன்மணீய ஆசிரியரும்

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி
இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்
மலையாள முந்துளுவும்
உன்னுதரத்துதித் தெழுந்தே ஒன்று
பல வாயிடினும்
ஆரியம் போலுலக வழக்கழிந்தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயன் மறந்து
வாழ்த்துதுமே.

என்று புகழ்ந்து பாடியிருக்கிறார். நமது தேசக்கவிஞர் சுப்ரமணிய பாரதியாரும்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி
இனிதாவ தெங்கும் காணோம்" [போல்

"தேமதுரத் தமிழோசை உலக மெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

"சேமமுற வேண்டுமெனில் தெரு
வெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்றெல்லாம் தமிழை வியந்துபாடியிருக்கிறார்.

இன்னும் இத்தமிழ் மொழிக்குண்டாகிய இணையிலாச் சிறப்புகளை ஆராய்ந்து பார்த்த செந்தமிழ்ப் புலவர்கள் இதனை, செந்தமிழ், வண்டமிழ், தெள்ளுதமிழ், தீந்தமிழ், கன்னித்தமிழ் என்று பலவாறு கூறியிருக்கிறார்கள். தமிழைத் தவிர்த்த வேறொரு பாஷையில் திருக்குறளைப் போன்றும், கம்பராமாயணத்தைப் போன்றும் நூல்களைக்காண முடியாது. ஓடும் நீரில் தமிழ் ஏடு எதிர்த்து வந்ததென்று சொல்வதும், எலும்பைப் பெண்ணாக்கிய தென்பதும் தமிழின் உயர்வை உள்ளபடி எடுத்துக்காட்டுவதாகும். தமிழ் நாட்டைத் தமிழரசர்கள் ஆண்டகாலத்தில், முதல், இடை, கடை, என முச்சங்கம் கண்டு தமிழை வளர்த்ததாகவும், அச்சங்கங்களில் சிவபெருமான், முருகக்கடவுள் முதல் பல புலவர்கள் இருந்து தமிழுக்கு ஜெயக்கொடி நாட்டியதாகச் சொல்லப்படுகிறது. வேறெந்தப் பாஷையிலும் இல்லாத "ழ" என்ற எழுத்தைத் தனது பெயரினுள்ளும் தமிழ் அடக்கிக் கொண்டிருக்கிற புதுமைதான் என்னே! தமிழ் அன்பு தமிழ் தெய்வம் என்று அந்நாளில் போற்றி வந்தனர்.

அந்தோ! தற்காலம் தமிழ்மொழி மிகவும் மெலிந்திருக்கிறது. அன்னிய மொழியே ஆர்ப்பாட்டத்திலிருக்கிறது. தமிழைத் தமிழரே மதிக்கவில்லை யென்றால், பிறர் அதை ஏளனம் பண்ணக் கேட்கவா வேண்டும்? தமிழர்களே! சகோதரிகளே! இனியாவது தமிழ் மொழியை அசட்டை செய்யாமல் தமிழை விரும்பிப் போற்றி வளர்த்து வாருங்கள். தமிழ்க் கவி யின்பத்தைப் பருகுங்கள்.

"வாழ்க தமிழ் மொழி."



# அழகும், பெண்மக்களும்

டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை

உள்ளழகு — வெளியழகு என்பதாக அழகு இருவகைப்படும். இவ்விரண்டினுள் முன்னதே சிறந்த தென்றாலும் வெளியழகு கூடாதென்பதற்கில்லை. கடவுளின் சிருஷ்டியில் ஒவ்வொன்றும் அழகும், ஆனந்தகரமுமான வடிவங்களாயும், ரூபங்களாயும், வர்ணங்களாயும் உடையதாய் அமைந்திருக்கின்றன. எனவே உபயோகத்துக்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற வஸ்துக்கள் அழகுள்ளவைகளாயிருப்பதன்றியும், உபயோகமேயில்லாமல் கேவலம் சந்தோஷத்தையே கொடுப்பதற்காக விருக்கும் வஸ்துக்களும் அநேக முண்டு. இவைகளை யோசித்துப் பார்க்குமிடத்து உபயோகத்தில் மட்டுமேயன்றி நேர்த்தியிலும், அழகிலும் கடவுளுக்கு நோக்குண்டென்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ளலாம். ஆகையால், பெண்களுக்குத் தம்தேகத்தையும், வஸ்திரங்களையும், வீடுவாசல்களையும் கருத்துடன் பாதுகாத்து வெளிப்பார்வைக்கு அலங்காரமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று உண்டாகும் ஆசையானது குற்றமுடையதன்று.

பெண்மக்கள் அந்தஸ்துக்கும், சக்திக்கும், அனுகுணமாகவும், முக்கியமானதுமான விஷயங்களிருப்பதால் அவைகளை மறந்துபோகாமல் தம் அழகையும், ஆடை ஆபரணங்களையும் உசிதமாக அபேட்சிப்பது நியாயமானதே. ஆனால் அவைகளில் உசிதமாக ஆசை கொள்வதோடு நிற்காமல், அவர்கள் வஸ்திரம் நகை முதலியவைகளிலேயே சதாசிந்தனையாக இருந்து காலங்கடத்துவது சரியன்று. வெளியாபரணங்களிலேயே மனதைமுழுதும் செலுத்தி, உள்ளாபரணத்தை அலட்சியஞ் செய்வதால் ஒரு பெண்ணானவள் நற்பெயரெடுத்து விடமுடியாது. அவ்வுள்ளாபரணங்கள் எவையெனில், அவைதாம் மெய்யாபரணம், மெய்யழகு எனப்படும் நற்குண நன்னடத்தையாம்.

நற்குணசாலியென்று பெயரெடுப்பதற்கு எது உபாயமென்றறிந்து, அப்படியே நற்குணம், நன்னடத்தை பொருந்தியிருப்பது பெண்மக்களுக்குச் சால சிறப்பாம். மனதில் நினைத்து நடக்காவிடினும் வாயினால் முணுமுணுப்பதும், கண்ணினால் வெடுவெடுவென்று சுடுவதும், விகாரமுடைய செயல்களன்றோ? தீக்குணமும், சிடுசிடுப்பும், கடுஞ்சொற்களும், அலங்காரமும், டம்பமும், துணிவும், பெண்களிடமிருக்கத்தகுமோ? விசேஷமாகப் பெண்களிடத்தில் அமரிக்கையும், சாவதானமும், வணக்க வொடுக்கமுமல்லவா இருக்க வேண்டும்? பிறருக்கு வழங்கும் கையானது அழகான கையென்று சொல்வது உண்மையாயிருந்தால், குளிர்ச்சியுடன் பார்க்கிற கண்களே அழகான கண்களென்றும், கடுஞ்சொற்கள் பிரயோகிக்காத வாயே அழகியவாயென்றும், சிடுசிடுவென்பதை அறியாதமுகமே அழகுள்ள முகமென்றும் சொல்லத்தடையில்லையே.

கண்ணாடிபோன்ற கன்னங்களினாலும், பிரகாசமுள்ள கண்களினாலும், சுந்தரமான மற்ற உறுப்புக்களாலும் பெண்களுக்குச் சிறப்புப்பெயர் உண்டாகிவிடாது. மற்றெதனாலோ வெனில், அவயவங்கள் எல்லாவற்றிற்குள்ளேயும் வாசம் பண்ணுகிற சூட்சுமமான அம்சத்தினாலேயாம். நிற்க, வயது சென்ற ஸ்திரீகள் நமது கண்களில் எத்தனையோ பேர் தட்டுப்படுகிறார்கள். அவர்களில் சிலர் கபடமில்லாத அமரிக்கையான பிரகாசமுள்ள பார்வையோடு கூடியிருக்க, வேறுசிலர் பார்க்க விருப்பமில்லாத சிடுமூஞ்சிகளா யிருப்பதேன். இவர்களும் அவர்களைப்போல் பாலியத்தில் அழகும் ஆனந்தமுமா யிருந்தவர்கள்தானே. ஆனால் இப்போது வயது சென்றபிறகு அவர்களிடம் காணப்படும் கோரமானது எவ்விதமாக வந்ததுவெனில், கொஞ்சம் கொஞ்சமாக, நாளுக்கு நாள் அவர்களுடைய துர்க்குணங்களும், துர் நடத்தையும் பேராசையும், பொறாமை நினைவுகளுமே அவர்களை அவ்விதமாக தோன்றுவிக்கச் செய்து தம்முக உறுப்புக்களினும் ஒரு விதமான வேறுபாட்டை உண்டாக்கி விட்டதெனலாம். இதனால் வெளிப்படையாகத் தங்களை நல்லவர்கள் போல் காட்டிக்கொள்ள எவ்வளவு தந்திரங்கள் செய்தாலும் அகத்திலுள்ளது முகத்திற்காட்டும் என்பதுபோல் ஸ்பஷ்டமாகயாவும் அறிந்துகொள்ள முடியுமாதலால் பெண்கள் நற்குண நன்னடத்தையையே எப்போதும் நாடவேண்டும். உள்ளலங்கார மில்லாதிருக்க வெளியலங்காரம் மாத்திரம் செய்து கொள்வது, வேஷம் போடுவதுபோலன்றி வேறில்லை. ஆகையால், சாந்தம், நிதானம், மிருதுவு, காம்பீரம், பரோபகாரம் ஆகிய இவை போன்ற உத்தம குணங்களே மெய்யழகும்—ஆபரணமுமா மென்பதை எம் சகோதரிகள் அறிந்து மேற்கூறிய நற்குணங்கள் அமைந்தவர்களாயிருக்க இறைவன் இன்னருள் பாலிப்பானாக!





# ஆலயவழிபாடும், பெண்கள் நிலையும்

ஸ்ரீமதி ராஜம்

இச்சென்னையில் எவ்வளவோ கணக்கற்ற ஆலயங்களிருந்த போதிலும் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஆலயமே மிகவும் பிரஸித்தமாக கொண்டாடப்பட்டு வருகிறது. ப்ரதிதினமும் எண்ணிறந்த மக்கள் தெரிசனத்திற்கு வருகிறார்கள். அதில் முக்கால் வாசிக்குமேல் ஸ்திரீகளே என்று நாம் சொல்ல வேண்டியதில்லை.

தற்காலத்தில் ஆங்கில கல்வியால் நவநாகரீகம் முற்றிப்போய் கோவில்களில் நடக்கும் சில அசம்பாவிதமான நடவடிக்கைகளையும் அருவருக்கக் கூடிய விஷயங்களையும் கண்டு பலர் கோவிலுக்குப் போவதை பலவிதமாய் பரிகசித்து விலக்கி வருகிறார்கள். ஏதோ கொஞ்சம் நஞ்சம் வருகிறவர்களும் பக்தி மேலிட்டு பகவானை தெரிசிக்க வருகிறவர்களாக நினைக்க முடியாது.

தாய்மார்களின் உபத்திரவத்திற்காகவும் மனைவிகளின் வேண்டுதலுக்காவுமே சில ஆண்மக்கள் வேண்டா வெறுப்பாக வந்து போகிறார்களென்பது யாவரும் அறிந்த விஷயம். புராதன தர்மங்களும் வைதீக கர்மங்களும் ஆலயவழிபாடு முதலான சத்கிரியைகளும் மறைந்து போகாமல் நீடித்து நிற்பது ஸ்திரீகளாலேயே. இதை யாரும் மறுப்பதற்கில்லை. கோவிலில் கண்ட ஓர் சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன்.

புரட்டாசி கடைசி வெள்ளிக்கிழமை யானதால் ஸ்வாமியை தெரிசனம் செய்துவிட்டு வரலாமென்று என் சிநேகிதிகளோடு கோயிலுக்குப் போய்ச்சேர்ந்தேன். கும்பல் சொல்லிமுடியாது. கேழ்க்க வேண்டுமா, 'கிழவியை பாட்டி என்க'. சாதாரண தினத்திலேயே மூலஸ்தானத்தில் அர்ச்சனை தெரிசனம் முடித்துகொண்ட புண்ய புருஷர்கள் பக்தியிலீடுபட்டு வெளியேற மனமற்றவர்களாய் கண்கள் நாலாபக்கமும் வட்டமிட்டு சுழல கைகால்கள் அபிநயம் காட்ட பரதநாட்டியமாடி இடுப்பில் பச்சைக் குழந்தைகளை வைத்துக்கொண்டு தவியாய்த் தவித்துகொண்டிருக்கும் சிறு பெண்கள்மேல் அலாக்காய் விழுந்து இடித்து தொகைத்து ப்ரும்மானந்த மடையும்போது விசேஷ தினத்தில் கும்பலுக்கும் இவர்கள் திருக்கூற்றுக்கும் சொல்லிமுடியுமா?

பார்த்தன் தேர்முன் சாரதியாயமர்ந்த பக்த பராதீனனான கண்ணன் ருக்மணி தேவியின் தெரிசனம் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. கோவிந்தனின் புனிதமான தெரிசனத்தால் யாவும் மறைந்துபோய் மனச்சாந்தி யடைந்தவர்களாய் கும்பலை விலக்கிக் கொண்டு மூலஸ்தானத்திலிருந்து வெளியேறினோம். சரியாக மூச்சு விட எவ்வளவோ நேரம் சென்றது.

ப்ரேமா "ஏண்டி மூலஸ்தான மென்றால் குருவிக்கூடு போல் மூச்சுவிடக் கூட இடமில்லாமலும் குகைபோல் வாயு பகவான் நுழையக்கூட வசதியில்லாமலிருக்க வேண்டுமா? பெரிதாகக்கட்டி ஆண் பெண்கள் நெருக்கடியில்லாமல் தெரிசித்துக்கொண்டு போக இரண்டு மூன்று வழிகள் ஏற்படுத்தினால் என்ன முழுகிப் போய்விட்டது. விசாலமான கூடத்தில் ஸ்வாமி இருக்க மாட்டாரென்ற உத்தேசமா? அல்லது வருகிற பக்த கோடிகள் இடியும் பொடியும் பட்டுக்கொண்டாவது வருகிறார்களா இல்லையா வென்று பரீக்ஷிப்பதற்காக கல்கத்தா இருட்டறை போன்ற மூலஸ்தானங்களை நிர்மாணம் செய்தார்களோ வென்று தெரியவில்லை. வடக்கேயுள்ள பம்பாய் கோவில்களை பார்த்திருக்கிறேன். அங்கே இவ்விடத்துக் கோவில்களைப்போல் இருளடைந்த மிகச்சிறு குறுகிய மூலஸ்தானங்கள் காணப்படவில்லை. அபூர்வ அழகிய வேலைப்பாடமைந்த சலவைக் கற்களால் நிர்மாணிக்கப்பட்ட விசாலமான கட்டிடங்களில் தான் ஸ்வாமி இருந்து வருகிறார். தெரிசிப்போர்க்கு நெருக்கடி யில்லாமல் மூன்று பக்கமும் வழி ஏற்படுத்தி யிருக்கிறார்களே. அதை ஏன் நம் பக்கத்துக் காரர்கள் பின்பற்றக்கூடாது? ஒழுங்காகவும் சுத்தமாகவும் உள்ள விசாலமான மூலஸ்தானங்களில் உள்ள ஸ்வாமியை உபத்திரவம் இல்லாமல் தெரிசித்து விட்டால் அதில் புண்யமும் நாம் எதிர்பார்க்கும் பலனும் ஏற்படாது போலிருக்கிறது?" என்றாள்.

"வடநாட்டு சம்பிரதாயமே வேறு. நம் நாட்டில் எந்த கோவிலைப் பார்த்தாலும் வௌவால் அடைந்து இதே மாதிரிதான் காணப்படும். சாஸ்த்திர கர்த்தாக்களின் உத்தேசம்தான் என்னவென்று யூகிக்க முடியவில்லை. சாஸ்திரங்களையே கரைத்து குடித்த மடாதிபதிகளும் சாஸ்திரிகளும் எண்ணிறந்த உபன்யாசங்களும் கதைகளும் செய்திருக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் பல மூல காரணத்தைச் சரமாரியாய் பொழிந்து வருவதை கேட்டிருக்கிறோம். ஆனால் இந்த தமிழ் நாட்டிலிருக்கும் அல்லது தென்னாட்டிலிருக்கும் ஜோதிஸ்வரூபனின் கோவில் குகையாகச் சமைந்த ரகஸியத்தை யாரும் வெளியிட்டு சொன்னதை நான் கேட்டதில்லை. சில வைதீகர்கள் வடநாட்டிலுள்ள ஆலயங்களுக்கு ஆகமம் கிடையாதென்றும் மந்திரங்கள் நாஸ்தியானதால் தென்னாட்டு தெய்வங்களைப்போல சக்தி வடநாட்டு ஸ்வாமிகளுக்கு இருக்காதென்று பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். அதென்னவோ உண்மைதான்! ஒரு சிரமமுமில்லாமல் வேத பாராயணமென்று தொண்டை கிழிய கத்தி விட்டு ஒரு மூட்டை புளியோதரையை ஒரே மூச்சில் அமுக்கிக் கொண்டு போவது வடநாட்டில் நடக்குமா?" யென்று நான் சொன்னேன்.

அவ்வளவுதான் ப்ரேமா நாக்கில் ஜெலம் சொட்ட ஆரம்பித்து விட்டது. வெளி மண்டபத்திற்கு வந்து சேர்ந்தோம். தீர்த்தம் கொடுத்து கொண்டிருந்தார்கள். அதை வாங்காமல் போக மனமில்லாமல் மிகுந்த கஷ்டப்பட்டு தீர்த்தம் பெற்றுக் கொண்டோம். வினியோகம் வாங்குவதற்கு அக்கும்பலில் ரொம்ப நாழிகையாகுமென்று புறப்படுங்களென்றேன்.





'வினியோக' மென்றால் வைஷ்ணவசம்பிரதாயம் தெரியாதவர்கள் எட்டு விதமான யோகத்தில் இதுவும் ஒரு யோகமாக்கும் என்று நினைத்து விடாதீர்கள். வினியோக மென்றால் யாவருக்கும் ஒரு பொருளை பகுந்தளிப்பது என்று கருத்தமைந்தது. ப்ரேமாவிற்கு புளியோதரையை விட்டு வர மனம் வரவில்லை. சுந்தரி கோஷ்டி நடுவில் போவது பாபமென்று சொல்லியிருப்பதாக ஓர் கதை சொல்ல ஆரம்பித்தாள். சரி புளியோதரை பெண்கள் கும்பலுக்கு வருவதற்குள் கதை முடிந்து விடுமென்று, சொல்லும்படி தலையசைக்க, சுந்தரி பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள்.

"காசிதேசத்து ராஜகுமாரிக்கு பேய் பிடித்தது. ஒரு மந்திர வாதியாலும் ஓட்ட முடியவில்லை. நம் நாட்டிலிருந்து சகல வித்தியா சம்பன்னரான யாதவ ப்ரகாசர் என்பவர் தன் சிஷ்யர்களோடு காசிக்குச் சென்று ராஜகுமாரியின் மேலிருக்கும் பேயை ஓட்டி விடுவதாக ராஜனுக்கு அறிவித்து பெண்ணை அழைத்து வருமாறு சொல்ல அரசனின் அனுமதிப்படி ராஜகுமாரி வந்து சேர்ந்தாள்.

யாதவப்ரகாசரைக் கண்டவுடன் பேய் வெகு ஆடம்பரத்துடன் கூச்சலிட்டு ஆடத் தொடங்கியதைக்கண்ட யாதவப்ரகாசர் தான் கற்ற பலவிதமான மந்தரங்களைச் சொல்லி பேயை விரட்டப்பார்த்தார். பேய் கலகல வென்று கைகொட்டிச்சிரித்து "அடே யாதவப்ரகாசா நீயா என்னை விரட்டப்போகிறாய். உன்னால் முடியாது. உன் பூர்வ ஜென்ம விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேள். நீ பெரும் பாபத்தை செய்து ஓர் மலையடிவாரத்தில் உடும்பாய்க்கிடக்க ஓர் பிராமணன் தன் மனைவி மக்களோடு திருப்பதி யாத்திரை செய்து விட்டு அம்மலை யடிவாரத்தில் தங்கி தாங்கள் கொண்டு வந்த அமுதை புசித்து விட்டு இலையை போட்டுவிட்டு போக அம்மலை யடிவாரத்தில் கிடந்த உடும்பானது மெல்ல நகர்ந்து வந்து அவர்கள் சாப்பிட்டு விட்டுபோன மிச்ச அன்னத்தை புசித்ததால் அவ்வுச்சிஷ்டத்தின் மகிமையால் உடும்பு ஜென்மம் நீங்கப் பெற்று புனிதமான பிராமண ஜென்மமெடுத்து சகல கலா வல்லபனாய் விளங்கியும் சாந்தம் தயை பரோபகார மற்றவனாய் வித்தியா கர்வத்தால் மமதை கொண்டு சமதிருஷ்டியற்று பேராசை பொறாமை நீங்காததால் நீ கற்ற வித்தையெல்லாம் பயனற்றுப் போய் விட்டது. உன்னால் என்னை விரட்ட முடியாது. இதோ உன் சிஷ்யனாக விளங்கும் புண்ய புருஷன் இராமானுஜனுக்கே என்னை ஓட்டும் சக்தி உண்டு" என்று சொல்லியதும், ஸ்ரீராமனுஜர் "ஓம் நமோ நாராயணா" வென்று அஷ்டாட்சரத்தை உச்சரித்து தன் வலக்கரத்தை அப்பெண்ணின் சிரத்தின்மேல் வைக்கவும் அப்பேயானது இராஜகுமாரியை விட்டுப் போய் விட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆகையால் பகவானை தெரிசித்து வந்த பக்தர்களின் மிச்ச அன்னத்திற்கே அவ்வளவு மேன்மை யிருக்கச்சே எங்கும் நிறைந்த ஆனந்த சொரூபனான பரமாத்மாவின் ப்ரசாதத்திற்கு எவ்வளவு மேன்மை இருக்க வேண்டு மென்று பார்த்து கொள்ளுங்கள்" என்று ஒருவாறு கதையை முடித்தாள்.

கதை என்னவோ ரசமாய்த்தானிருந்தது. கதை கட்டுக்கதையா உண்மையாய் நடந்ததாவென்று நமக்கு தெரியாது. இராமனுஜரைப்பற்றி சாஸ்திரங்களும் நம் சமூகத்தார்களும் மிகவும் உயர்வாக கொண்டாடி வருவதைப் பார்த்து வருகிறோம்.

அது எப்படியாவது இருக்கட்டும். இக்கதையால் உடும்பாக இருந்த யாதவப்ரகாசர் வித்யாசம்பன்னராய் தெய்வாம்சம் பொருந்திய ராமானுஜரை சிஷ்யராகக் கொண்டாரென்றால் ஈஸ்வர ப்ரசாதத்தால் நாம் ஏன் திருப்பாவை பாடிய ஒரு ஆண்டாளாகவாவது ஔவையைப் போலாவது பிறக்கக்கூடாது என்ற ஆசை எல்லாருக்கும் தானிருக்கும். தவிர இப்போது தத்ரூபமாய் கைக்குமேல் பலன் அளிப்பது புளியோதரை.

கூடை கூடையாய் வைத்திருக்கிறது சர்க்கரைப் பொங்கல். வெண் பொங்கல்களை இரண்டுபேர் தூக்கிக்கொண்டு வந்து புருஷர்களுக்கு பூஷிணிக்காய் அளவு உருட்டி உருட்டிப் போட்டுக் கொண்டே பெண்கள் நிற்கும் இடத்திற்கு வந்து சேரவே பெண்மணிகளெல்லாம் பரபரப்போடு நான் முந்தி நீமுந்தி யென்று கையை நீட்டவும், அவ் வினியோகம் செய்யும் புண்யவான் மூஞ்சியில் எள்ளும் கொள்ளும் வெடிக்க "இந்த பொம்மனாட்டிச் சனியன்களுக்கு கொடுப்பதற்குள் நம் உயிரை வாங்கி விடுவார்களப்பா" வென்று வாயில் வந்தப்படி திட்டிக்கொண்டு "கையை இப்படி நீட்டினால் கிடையாது. மடக்கினால் கொடுக்க மாட்டேன். நின்ற இடத்திலிருந்து நகர்ந்தால் வினியோகம் மண்தான். நல்ல உபத்திரவம் பிடித்த மூதேவிகளடா" வென்று வாயில் பலவிதமான வசமாரி பொழிந்த வராய் சிடு சிடு வென்று எரிந்து விழுந்து பெண்கள் நிற்கும் கும்பலுக்குள் இடித்துப் புடைத்துக் கொண்டு நுழைந்து சோத்துக் கூடையாலும் கோவில் சொத்தைத் தின்று உருண்டு திரண்டு பெருத்த தன் முழங்கையாலும் பெரியவர் சின்னவரென்ற வித்தியாசம் பாராமல் தாக்கி மல்யுத்தம் செய்து தனக்குத் தெரிந்தவர்க்கு அள்ளிப் போட்டும் தெரியாத ஒன்றிரண்டு பேருக்கு கொடுக்காமல் ஒரே தாண்டாய்த் தாண்டி அவ்விடத்தை விட்டு அந்தரத்தியானமாய் மறைந்து விட்டார்.

பெண்கள் ஆரவாரத்திற்கும் வயிற்றெரிச்சலுக்கும், அளவு சொல்லிமுடியாது. பாட்டிமார்களின் பரபரப்பிற்கு கேட்க வேண்டுமா? "அடபடுபாவிகளா எங்கே போனாலும் இவங்கள் ஆடம்பரமும் அட்டகாசமும் தானா? மூலஸ்தானத்தில் தீர்த்தம் வாங்கிக்கப்போனால் அர்ச்சனை செய்தவர்களுக்கு மூன்றுதரம் தீர்த்தம் கொடுப்பது; நம்மைப்போலொத்தவர்கள் கற்பூர தட்டில் காலணாவாவது போடாமல் தீர்த்தம் கேட்டு விட்டால் மூஞ்சியை சுளித்துக்கொண்டு தீர்த்தம் கொடுக்காமல் சடாரியை தூக்கிக்கொண்டு ஓடிவந்து நாம் குனிவதற்குள் நம் மண்டையை பிளந்து போகும்படி இடித்து விட்டுப் போவதும் சுமங்கலிக்கு துளஸியைக்கொடுப்பது என்னைப்போலே அமங்கலி கிட்டே பூவை பிச்சுபோடறது. அவா அடிக்கற கூத்தைச் சொல்லிமுடியாது. கோஷ்டியிலே வந்தாலும் இவர்கள் கொண்டாட்டம்தான். மலைமலையாய் பொங்கலும் புளியோதரையும் குவிச்சுக்கிடக்கி





றது. பொம்மனாட்டிகளுக்கு கொடுக்கிற தின்னா வயிறெரிஞ்சு போயிடறது. இதை யாரும் கேட்பாரில்லை வைப்பாரில்லை என்று பாத்துகிண்டார்கள். நாளைக்கு கைஎழுத்து வாங்கவரட்டும் சொல்லுகிறேன் வழி" என்று பாட்டிமார்கள் பலவாறு கூக்குரலிட்டார்கள்.

மணி 12 வரையில் காத்திருந்தும் பொங்கல் புளியோதரையில் மண்விழுந்தது. கடைசியில் தோசைத்துண்டுகளையும் எண்ணைப்பசையற்ற கடலைச்சுண்டல்களைக் கலந்துகொண்டுவந்து சேர்ந்தார் ஓர் பீமசேனர். வழக்கம்போல் அதிகார தோரணையோடு சிலருக்கு கொடுத்துவிட்டு பாக்கிப் பெண்களுக்கு வழங்காமல் மீதியிருப்பதை கூடையோடு ஆகாசத்தில் தூக்கி பெண்கள் தலைமேல் சுண்டல்மாரி பொழிந்துவிட்டு போய் விட்டார்.

பெண்களுக்கு அப்போதிருந்த மனோநிலைமையும் ஆத்திரமும் அளவிடமுடியாது. அட பகவானே! பேதமற்ற ஈஸ்வர சன்னிதான மென்றும் பாராமல் லோகமாதாவின் சன்னிதானத்தில் அவள் அம்சமான ஸ்திரீகளை எவ்வளவு கேவலமாகவும் தாழ்மையாகவும் நடத்துகிறார்கள்! அவள் சகித்துகொண்டிருப்பாளா? பொம்மனாட்டிச் சனியன்களாமே அந்தச் சனியன் வராவிட்டால் பட்டருக்கு அர்ச்சனை உண்டியல் நிறையுமா? நகைப் பண்ணி போடுவதும் புடவை வாங்கி சாத்துவதும் தேசாந்திரிகளுக்கென்று அன்னம் அளிப்பதற்காக ஏராளமான நிலபலங்களையும் வீடுவாசல்களையும் எழுதி வைத்திருப்பதும் பெண்களென்றே சொல்லவேண்டும். இன்னும் நித்யபடி இந்த இந்த தினத்தில் என்ன என்ன செய்தால்புண்யமென்று சொல்லியிருக்கிறதென்று மூட்டை மூட்டையாய் அரிசி முதலானதைக் கொடுத்து பொங்கலும் புளியோதரையும் செய்யச்சொல்லிவருவது அவர்களே.



புருஷன்மாரைத் தூண்டியோ தன் சுயேச்சையாலோ கோவிலுக்கு நாலாவிதத்திலும் சேர்ந்திருக்கிற சொத்து பெண் சமூகத்தாலேயே. அப்படியிருக்க ஒரே பந்தியில் ஆண்களுக்கு யானைத்தலையளவு பொங்கலும் புளியோதரையும் கொடுத்து அவர்கள் மூட்டை கட்டிக் கொண்டு போவதும் அல்லாமல் பெண்களை தாழ்மையாக மதித்து நடத்துவது பெண்வர்க்கத்திற்கே இழிவாக காணப்படுகிறது. தற்காலத்தில் சாஸ்திரங்களையும் கோவில்களையும் போற்றிவருவது பெண்களே. அவர்கள் வராவிட்டால் கோவில் பட்டருக்கும் சுயம்பாகிகளுக்கும் வரும்படி வம்படிதானென்று நினைவிருக்கட்டும். ஓடுகிறவெள்ளம் எப்போதும் ஓடிக்கொண்டேயிருக்காது, என்று நினைத்துகொள்ளவேண்டும்.

ப்ரேமா ஆத்திரத்தோடு "கோவிலுமா இந்த அநீதி. தற்காலத்தில் எவ்வளவு சீர்திருத்தம் செய்து வருகிறார்கள். கோவில் தர்மகர்த்தா ஸ்தானத்திற்கு மூன்று மூன்று பேர் நியமிப்பதில் பெண் வர்க்கத்தினர் ஒருவரை ஏன் நியமனம் செய்யக்கூடாது? தர்மகர்த்தா ஸ்தானம் வகிப்பதற்கு மாதர்கள் தகுதியற்றவர்களா? அவர்களால் திறமாய் நடத்தமுடியாதென்று மறுக்கமுடியுமா? தற்காலத்தில் எவ்வளவோ படித்தபெண்கள் மேன்மையான பதவியில் இருக்கவில்லையா? அப்படியிருக்க சாஸ்திர நம்

பிக்கையும் தெய்வ வழிபாடு முதலான புராதன தர்மத்தை அழிந்து போகாமல் ரெக்ஷித்தும் வ்ருவது ஸ்திரீகளாயிருக்கும் போது அவர்களுக்கேன் கோவில்களில் உயர்ந்த ஸ்தானம் கொடுக்ககூடாது? வருகிற தேர்தலிலாவது மாதர்களுக்கு ஓர் ஸ்தானம் கொடுக்காவிட்டால் பெண்களிடையே மிகுந்த கிளர்ச்சி ஏற்படுமென்று நினைக்கிறேன்" என்றாள்.

நம்மினத்தோர்கள் கோவில்களில் தகுந்த ஸ்தானம் வகித்து சிரத்தையோடு பாடுபட முன்வந்தால் ஸ்திரீகளுக்கு மிகுந்த சௌகரியங்கள் ஏற்படுவதல்லாமல் கோவில்கள் சிறப்படைந்து அநேக விவரிக்கமுடியாத ஊழல்கள் மறையுமென்று தோன்றுகிறது.

அனேகம் கோவில்களில் இதேமாதிரி நடந்து வருவதை நாம் பார்த்து வருகிறோம். கேவலம் ஒரு பிடி அன்னத்திற்காக நாம் குறை கூறுவதாக யாரும் நினைக்கக் கூடாது. பெண்களை தாழ்மையாக நடத்தும் விதத்தையே இங்கு குறிப்பிட்டோம். கல்யாணங்களில் ஆயிரக்கணக்கில் செலவிடுகிறார்கள். மாப்பிள்ளைப் பணம் ஒரு ரூபாய் ஓதியிடாவிட்டால் அதனால் ஏற்படும் குழப்பம் சொல்லி முடியாது. நாம் ஒரு கல்யாணத்திற்கு போகிறோம். அவர்கள் அவசரத்தில் காப்பிகொடுக்க தவறிவிட்டால் "ஒரு லோட்டா காப்பி கொடுத்தானா வென்று" நம் வீட்டில் குடம் குடமாய் சாப்பிட்டாலும் அவர்கள் கொடுக்காததையே ஆத்திரத்தோடு சொல்லிக் கொண்டு தானிருக்கிறோம். கோவில் முதல் தீர்த்தக்காரருக்கு தவறிப் போய் இரண்டாம் தீர்த்தம் கொடுத்து விட்டால் அங்கு நடக்கிற சண்டை ஐக்கோர்ட்டுக்கு மேல் போய் பதினாயிறக் கணக்கில் செலவிடுவதை பார்த்து வருகிறோம். இவை எல்லாம் தன் மதிப்பிற்கும் தன் உரிமைக்கும் பாடுபடுவதே யல்லாமல் ஒரு பொருளை உத்தேசித்ததல்ல வாதலால் நம் சகோதரிகள் இவ்வாலய விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தி பெண் உரிமைக்கும் கௌரவத்திற்கும் பாடுபட முன்வருவார்களென்று நம்புகிறேன்.





**பாலர் பக்கம்**

# குலதர்மம்

ஸ்ரீமதி கே. கமலா

சமரபுரி என்னும் நாட்டில் சங்கமன் என்கிற அப்பாவிற்கும், சம்பகம் என்னும் அம்மாவிற்கும் அம்புஜம் என்று ஒரே ஒரு பெண்ணிருந்தாள். அம்புஜம் தன் தாய்தந்தையரிடம் மிக்க அன்பு கொண்டவள். அம்புஜத்தின் தாய் ஒரு தினம் தங்கள் குடும்ப வரலாற்றை தன் மகளுக்குச் சொல்லுகையில் "அம்மா அம்புஜம்! நாம் இப்பொழுது ஏழையாக இருந்தாலும் நம் குடும்பத்து உன் பாட்டனார் காலத்தில் அவர்களெல்லாம் மிக்க தர்மிஷ்டாளாயும் விவேகிகளாயுமிருந்தனர். உன் பாட்டனார் காலத்தில் அவர் விருந்தில்லாமல் ஓர் தினம்கூடச் சாப்பிட்டதில்லையாம். அவருக்கு இருந்த சொத்தெல்லாம் ஸாதுக்களை பூஜிப்பதிலும், ஏழை எளியவர்களுக்கெல்லாம் அன்னமளிப்பதிலும் தான் செலவாகிற்றாம். உன் பாட்டனாரானவர் அந்த உதாரகுணத்தினால்தான் மகத்தான கீர்த்தியுடன் வாழ்ந்துவந்தார். அதனால் அம்புஜா நீயும் நம் குல தர்மத்தை மறவாமல் என்றும் நடந்துக்கொள்ள மறவாதே. அப்படி நீ நம் குல தர்மத்தை விடாமல் நடந்து வந்தால் பகவானது க்ருபை தானாகவே உண்டாகும்" என்று கூறினாள்.

அதைக்கேட்ட அம்புஜம் "அம்மா நீங்கள் சொல்லியதை நான் என் மனதில் நன்கு பதியவைத்திருக்கிறேன். அதனால் நான் நம் குல தர்மத்திற்குப் பழுதுவராமல் நடந்துகொள்ள முயலுவேன்" என்று பதில் சொன்னாள்.

பிறகு கொஞ்சகாலம் பொருத்து சமரபுரியில் மழை பெய்வது நின்றுவிட்டது. ஒரே யடியாய் ஐந்துவருஷகாலம் கொடிய பஞ்சம் ஏற்பட்டு, அந்தப் பஞ்சக்கஷ்டத்தை சகித்திருக்கமுடியாத பல ஜனங்கள் அந்நாட்டை விட்டு வேறு நாட்டிற்குச்செல்ல ஆரம்பித்துவிட்டனர்.

சமரபுரி அரசனுக்கும் தன் நாட்டுப் பிரஜைகள் வெளியேருவதைத் தடுக்க முடியவில்லை. ஏன்? அதனால் அரசன் மனம் நொந்து தன் நாடு இப்படியே க்ஷீணித்து விடப்போகிறது என்று நினைத்து விட்டான்.

இவ்விதமிருக்கையில் அவ்வூரோரத்தில் பாழடைந்த மடமொன்றில், தலையெல்லாம் சடைவிழுந்து, பார்ப்பதற்கு பயித்தியக்காரன்போல் காணப்பட்ட ஒருவர், பட்டுப்போன மரங்களை (பஞ்சம் வேரூன்றிய ஊரில் பட்டுப்போன மரத்திற்கா குறைவு?) எரியவிட்டு ஏதோ உலோகப் பொருளைக் காய்ச்சுவதும், பிறகு கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருப்பதையும் ஜனங்கள் அறிய, பலர் அவ்விடம் சென்று "ஏ கிழவா என்ன உருக்குகிறாய்? சவரன் செய்து சாப்பிடலாமா வென்று பார்க்கப் போகிறாயா? அல்லது உருகின உலோகத்தையாவது குடிக்க முடியுமா வென்று பரீக்ஷை செய்கிறாயா?" என்று குறும்பாய்க் கேட்க, அக்கிழவர் யார் எத்தகைய குறும்புப் பேச்சுப் பேசினாலும் "ஆம்" என்பது போல் தலையை அசைப்

பது தவிர வேறு எவ்வித பதிலும் சொல்லாமல் இருப்பது கண்ட ஜனங்கள் அவ்ரை அரைப் பயித்திய மென்று கண்டபடி ஏளனம் செய்தனர்.

ஓர் தினம் அம்புஜம் மற்ற சிறுமிகளுடன் தண்ணீர் மொண்டுவர கிணற்றைத் தேடிச் சென்ருள். ஏனெனில் இந்நாள் வரையில் தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்த ஊர் கிணற்றில் தண்ணீர் வரண்டுவிடவே வேறு கிணர் தேடச்சென்றனர். வெகு தூரம் கடந்து வரவும் அங்கு பாழ் மடத்தைக் கண்டதும் மற்ற சிறுமிகள் தூர விலகி "அடி அம்புஜா அந்த மடத்தருகில் போகாதே. அங்கு ஒரு அரைப் பைத்தியக் கிழவர் இருக்கிருரும். அதாண்டி உலோகம் உருக்கும், கண் மூடிக்கிழம்" என்றனர்.

அதைக்கேட்ட அம்புஜம் "ஆமாண்டிம்மா, உலோகம் உருக்கி கண்களை மூடிக்கொண்டிருந்தாலும் கல்லை விட்டெறியும் பயித்தியமில்லையல்லவா? பாபம் அனுதை போல் தன்னந்தனியே இருக்கும் அந்தக் கிழவரைப் பார்க்க எனக்கு ஆவலாகிறதே, கொஞ்சம் வாருங்களடி, நாம் பார்த்தூட்டு ஓடிவந்துவிடலாம்" என்று கெஞ்சினுள். உடனே மற்ற சிறுமிகள் "போடிபோ பைத்தியமே, பித்தனைப் போலிருக்கும் அவனைப்போய் பார்வை என்னடி? அவனைப் பார்த்தாலும் நமக்கு ஏதாகிலும் கஷ்டம் வந்துவிடும். நாங்கள் வரமாட்டோம்" என்றனர். அம்புஜம் "என்னடிது, ரொம்பத்தான் பயமுறுத்துகிறீர்களே? நாம் பகவானை நினைத்துக்கொண்டு அவனை பார்த்துவிட்டு வந்தால் ஒரு கெடுதியும் வராது. ஏழைகள், பரதேசிகள், ஸாதுக்கள் இவர்களிடமெல்லாம் நாம் அன்பாக இருந்தால் அதனுல் நல்லதுதான் ஏற்படுமென்று என் அம்மா சொல்லி இருக்காள். எங்கள் குலத்தில் அப்படித்தான் நடப்பது வழக்கமாம். நான் கட்டாயம் அந்த தாத்தாவைப் பார்த்தூட்டுத்தான் வருவேன்" என்ருள். அதைக் கேட்ட மற்ற சிறுமிகள், "அப்படியானல் நீமட்டும்போய் பார்த்துக்கொள் நாங்கள் வரமாட்டோம்" என்று சொல்லி ஓடிவிட்டனர். அம்புஜா அவர்களை ஒரு நிமிஷம் இருக்கும்படி கெஞ்சிக் கேட்டும் அந்தச் சிறுமிகள் நில்லாமல் ஓடிவிட்டனர்.

தன்னந்தனியே நின்ற அம்புஜத்திற்கு முதலில் பயமாக இருந்தது. ஆனுல் உடனே பயம் பறந்து போக "நாம் சட்டென்று எட்டிப்பார்த்துவிட்டு வந்துவிடுவோம்" என்று தைரியமடைந்தவளாய் தடதடவென்று இடுப்பில் குடத்துடன் மடத்தினுள் நுழைந்தாள்.

அச்சமயம் உலோகம் உருக்கும் கிழவர் உருகிய லோகத்தை ஓர் அச்சில் எடுத்துவிட்டு இடுக்கியினுல் அந்த அச்சை திருப்பி விட்டுக்கொண்டிருந்ததைக் கண்டு அதைப் பார்த்தபடியே சத்தமின்றி நின்றுகொண்டிருந்தாள்.

பிறகு அந்தக்கிழவர் இடுக்கியினுல் அந்த அச்சை மற்ருெருபுறம் திருப்பிப் பூட்டைத் திறந்தார்.

உடனே அம்புஜம் "தாத்தா அது ஸ்வாமி விக்ரகமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

கிழவர் திரும்பிப்பார்த்து "ஆம் குழந்தாய்! அது பாரதமாதாவான பூமாதேவியின் விக்ரகம்" என்ருர்.

அதைக்கேட்டதும் அம்புஜம் "அடாடா இவரையா எல்லோரும் பயித்தியமென்று சொன்னுர்கள்? என்ன அபசாரம்!?"





என்று எண்ணி, குடத்தை வைத்துவிட்டு அவரை நமஸ்கரித்தாள். "கடவுள் ஸர்வ மங்களத்தையும் கொடுத்து ரக்ஷிப்பாராக" என்று அப்பெரியவர் ஆசீர்வதித்தார்.

அப்பொழுது அவரது பெருவிரலிலிருந்து இரத்தம் வழிவதைக் கண்ட அம்புஜா "தாத்தா உங்கள் விரலில் என்ன பட்டது? இரத்தம் வருகிறதே!" என்று கேட்க, அவர் "விக்ரகம் வார்க்கும் முன் இந்த அச்சை கழற்றும் பொழுது விழுந்து அடிப்பட்டது" என்று சொல்ல, அம்புஜா உடனே அந்த மடத்தின் கொல்லையிலிருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் மெண்டு வந்து தன் பாவாடையில் சிறிது துணி கிழித்து நனைத்து அதை காயம்பட்ட இடத்தில் கட்டும்படி கிழவரிடம் கூற, கிழவர் "அம்மா உன் வரலாரை என் ஞான திருஷ்டியினுல் அறிந்தேன். உனது குழந்தை உள்ளம் எவ்வளவு பரிசுத்தமாக இருக்கிறது என்பதை நினைக்க நான் பரம சந்தோஷமடைகிறேன். ஆறு மாதங்களாக நான் இவ்விடமிருக்க அனைவரும் என்னைப் பித்தனுக்கி விலக, நீ ஒருவளே என்னை அணுகி அன்புகொண்டாய். நீ உன் தாய் செய்த உபதேசத்தை மறவாமல் அப்படியே நடந்து காட்டி உன் குலப் பெருமையை பெருமைப்படுத்திய உன் பாக்கியமே பாக்கியம். குழந்தாய் உனக்கு வேண்டும் வரத்தைக் கேள் தருகிறேன்" என்ருர்.

அம்புஜம் என்ன கேட்பது என்று தெரியாமல் திகைத்தாள். பிறகு "ஊரார்க் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்" என்று தன் தாய் சொல்லுவது நினைவு வரவும் "தாத்தா இந்த ஊரில் பஞ்சத்தால் ஜனங்கள் ரொம்ப ரொம்ப கஷ்டப்படுகிருர்கள். இந்தப் பஞ்சம் தீரும்படி வரம் கொடுங்கள் அதுதான் வேண்டும்" என்ருள்.

அதைக்கேட்ட மகாத்மாவான ஸாது பரம சந்தோஷத்துடன் "உன் கோரிக்கையின்படியே இன்றைக்கு மூன்ருவது தினமே மழை பெய்யும்படி கடவுள் அனுக்கிரகிப்பார். பகவானுக்கு த்ருப்தியை அளிக்கும் குழந்தையான உன்னை அவர் மேன்மேலும் ரக்ஷிப்பார்" என்று ஆசீர்வதித்தார்.

அம்புஜம் சந்தோஷத்தினுல் மறுபடியும் அப்பெரியாரை நமஸ்கரித்து உத்திரவு பெற்று, அந்த மடத்து கிணற்றிலேயே தண்ணீர் மொண்டுக்கொண்டு வீடுவந்து சேர்ந்ததும் தான் ஸாதுவைக்கண்டதும் அனுக்ரகம் பெற்றதும் நாட்டிற்கு சுபிக்ஷம் ஏற்படப் போகிறதையும் விபரமாகக் கூறினுள். அவ்வரலாற்றைக்கேட்ட தாய் தந்தையர் அன்றே அவளை ஈன்றது போல் சந்தோஷித்தனர். மேலும் அவ்விஷயம் அதாவது அம்புஜம் உலோகம் உருக்கும் கிழவரான ஸாதுவைக் கண்டதும் அவரது அனுக்ரகம் பெற்றதுடன் நாட்டிற்கே சுபிக்ஷம் உண்டாகும்படி வரம்பெற்று வந்த விஷயமும் அரசன் மந்திரி முதல் ஒவ்வொரு ஜனங்களும் அறிந்து ஆச்சரியமும் சந்தோஷமும், தங்கள் மடமைக்காக வெட்கமும், அடைந்தனர். அன்றே அரசன் மந்திரி முதலானோர் மடத்திற்குச் சென்று பார்க்க ஸாது காணப்படாமல் ஏமாற்றமே அடைந்தனர்.

ஸாதுவின் வாக்குப்படி மூன்ரும் நாளிலிருந்து ஒருபக்ஷம் மழை விடாமல் கொட்டிற்று. சமரபுரி நாட்டினர் ஒவ்வொருவரும் அம்புஜத்தை சமரபுரி தைவமென்றே மதித்துப் புகழ்ந்தனர். அரசன் அம்புஜத்திற்கு அநேக கிராமங்களைக் கொடுத்து அரசிபோலிருக்கச் செய்தான்.

சிற்றரசிபோல் வாழ்ந்துவந்த அம்புஜம் ஏழை அம்புஜம் போலவே நடந்து, புகழாபரணம் பூண்டு விளங்கி வீதி சமயமும் தாய் சொல்லிய குலதர்மத்தை விட்டு ஒழுகியவளல்ல.



134088

# விடுகதை விஞ

“ஜனகஜா”

குழந்தைகளே! உங்களுக்காக புராதன, புதிய, யாருக்கும் தெரியாத சில புதிர்கள் எழுதியிருக்கிறேன். எல்லாம் புதிது. புது வருஷத்தில் புதிய புதிர்கள் போட்டு, உங்கள் சிநேகிதர்களை திக்குமுக்காடி முழிக்கவைத்து வேடிக்கை பண்ணுங்கள். உங்கள் சிநேகிதர்கள் யாராவது உங்களிடத்தில் பெருமை பீத்திக் கொண்டாலும், கர்வம் கொண்டாலும் இந்தப் புதிர்களை போட்டு விடை சொல்லச் சொல்லுங்கள். முழிப்பார்கள். அதனால் கர்வம் எல்லாம் காற்றாய் ஓடிப் போயிடும்!

1. தாயார் சமுத்திரத்தாள், தந்தையார் சூரியனார், தரணியிலே என்னைக்கொண்டு தாங்காத வீடில்லை.

2. பொறுமையிலே கீர்த்திபெற்ற பூமி தேவி புத்திரிநான், மங்களமான மங்கைமாரை மருவிடும் நல்தோழி நான்.

3. புவிமாது வடிவுடயேன், புவிமீது துள்ளிடுவேன், பாலர் கையில் அகப்பட்டுப் பதை பதைத்துத் துடித்திடுவேன்.

4. பச்சைப் பசேர் எனப்பிறந்து பக்குவமான பின்பு நான், செக்கச் சிவந்தமேனியோடு சிறக்கவாழச் செல்லுவேன். கண்ணிலென்னை ஒற்றினோரைக் கண்கலங்கி அழச்செய்வேன், சிரத்தில் கிரீடம் சூடியுள்ளேன் சொல்லுவாய் நான் யாரென்று.

5. தலைக்குமேலே அலரும்பூ, தண்டின் பக்கம் கவியும் பூ, ஆகாச நீர் கொட்டும் போது ஆளைக்காக்க மலரும் பூ, சூரியன்றன் கர்வங் குலைத்துச் சோபந்தீர்க்க விரியும் பூ, வட்டமான நூதனப்பூ, வாடாத பூ என்னபூ?

6. வருஷமொரு முறைவந்து வண்ண முறத் தைலமிட்டு, வகைவகையாய்ச் சிற்றுண்டி வண்மையுற அளித்திட்டு, டப் பென்பாள் டுப்பென்பாள்.

7. விதவிதமான குரல்களிலே பேசிப் பாடி மகிழ்விப்பாள், விநோத மென்ன வென்று கேட்டால் உயிரே இல்லை அவளுக்கே.

8. உருளுங் கண்கள் இரண்டிருந்து ஒரு கண் பார்வை உடையேன் நான், வீட்டில் நானும் வலியவந்தால் விரட்டித் துரத்தும் அம்மாமார்கள், விசேஷமான நாளிலென்னை விரும்பி அழைத்து விருந்திடுவார்.

9. தகதகப் பொருளிலே பரபரப்பொடி போட்டால், குபுகுபுவெனக் கிளம்பி கமகம மணம் வீசும்.

10. வாலிபரில் சிற்சிலரும், வயோதிகரில் பற்பலரும், வாஞ்சையோடு வரித்தென்னைக், கண்ணாகப், போற்றிடுவார்.

விடை:—1. உப்பு. 2. மஞ்சள். 3. பந்து. 4. மிளகாய். 5. குடை. 6. தீபாவளி பண்டிகை. 7. கிராமபோன். 8. காக்கை. 9. நெருப்பு, சாம்பிராணி. 10. மூக்குக் கண்ணாடி.





11. கிறுக்குபிடித்து வெளியே போய்க், கிணற்றில் விழுந்த கிளிப்பிள்ளை, உயிரில்லாத உடலோடு உற்ற செய்தி சொல்லப் போகிறது.

12. கட்டுக்கட்டென்று கனைக்குமாங் குதிரை, காதம் ஆயிரம் கணத்திற் போகுமாம், வாய்வும் அல்லடி மனமும் அல்லடி, வகையாய் நீ இதைச் சொல்லடி பெண் மணி.

13. அஸ்திவாரத்தோடு நடக்கும் அழகான ஒரு மாளிகை, அந்த மாளிகைக்குப் போவதற்குச் சக்கரமில்லா வண்டியாம்.

14. சருகுதின்பாள், சவரிதின்பாள், சமையல் வேலை சரியாய்ச் செய்வாள், தண்ணீர் குடித்தால் தளர்ந்து மடிவாள்.

15. மூன்று கண் முதலியார் முண்டக் கண் முதலியார், அவர் வயிறெறிவார் தக தக முதலியார், அவர் மேலே தொந்தியப்ப முதலியார், தொந்தியப்ப முதலியார் தொந்திக்குள்ளே அன்னத்தப்பனும் ஆற்றப்பனும் சண்டை யிடுகையில், வாலப்பன் வந்து வழக்குத் தீர்த்து, இரண்டப்பனையும் இசைத்து வைத்தான், பல கண் பார்ப்பவன் பதிந்து வந்து பக்குவமாகப் பாகம் பிரித்தான்.

16. அண்ணன் தம்பி இரண்டுபேர், தம்பி ஒரு சுற்று சுற்றினால் அண்ணன் பன்னிரண்டு சுற்று சுற்றுவான்.

17. பொறி கலக்கிப் புழுவாக்கிப் புத்தி தனைச் சிதறிடினும், பொலிவுறவே மனந்தனிலே பேரானந்தம் கொடுக்கும் புருஷரறியா நோவு என்ன நோவு?

18. அக்காள் சப்பாணி, தங்கை நர்த்தனப் பெண், இரண்டுபேரும் இல்லாவிட்டால் குடித்தனப் பெண் சிணு சிணுங்குவாள்.

19. அப்படித் திருப்பினால் அழுதிடுவான், இப்படித் திருப்பினால் அமர்ந்திடுவான்.

20. நாட்டிலென்னை இழித்துப் பேசுவார் நல்மதியில்லா நங்கையர்கள், நாச்சியார் நானில்லாவிட்டால் நாறிப்போகும் வீடெல்லாம்.

21. பச்சைக் கன்னி மடிபட்டாள், பவளகன்னி பொடிபட்டாள், வெள்ளைக் கன்னி பிடிபட்டாள், மூன்று கன்னியும் கடிபட்டுச் சிவப்புக்கன்னி பிடிபட்டாள்.

22. வட்டவளைவு நண்டு, வாலுள்ள நண்டு, வேனில் காலந்தன்னில், வீட்டில் வேண்டும் நண்டு, காலில்லாத நண்டு, கையில் கொள்ளும் நண்டு, பிராணன் இல்லாநண்டு, பெருமூச்சிடுமாம் நண்டு.

23. உயிரில்லா உடலுள்ள ஊமையாந் தோழி, உயர்வான உண்மைகளை உரைத்திடுவாள் தோழி, கையின்மேல் காசளித்தால் வந்திடுவாள் தோழி, காரிகையே இவள் பெயரைக் கழறிடுவாய் நீயே.

விடை:—11. தபால் கடிதம். 12. தந்தித் தபால். 13. ஸ்டீமர், தோணி. 14. நெருப்பு. 15. அடுப்பு, நெருப்பு, பானை, சாதம், தண்ணீர், அகப்பை, சிப்பல் தட்டு. 16. கடிகார முட்கள். 17. பிரசவ நோவு. 18. உரல், உலக்கை. 19. பட்டணங்களில் உள்ள தண்ணீர்க் குழாய். 20. துடைப்பம். 21. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு. 22. விசிறி. 23. புஸ்தகம்.

24. இறந்திறந்து பிழைப்பேன் யான் மாதந்தோறும், எண்ணில்லாத் தோழியர்கள் எனக்கே உண்டு, எண்ணில்லாத் தோழியரும் என்னைக் கண்டால், எங்கேனும் ஒளிந்தென்னைத் தனியே விடுவார். என் தலையின் விதிப்படியே யான் செத்திட்டால் எண்ணில்லாத் தோழியரும் ஒன்றாய்க்கூடி, இதமாகக்குலாவிட்டு மகிழ்வார் பெண்ணே. இவர்களைப்போல் தோழியரெங்கேனுமுண்டோ, என் கதைபோல் எங்கேனும் கேட்டுளாயோ.

25. பச்சைமேனி பாலிகை, பக்குவமானபின்பவள், மஞ்சள் பூசி மகிழ்ந்திடும் மங்களமான மங்கையாம், அவளுக்குப் புது வருஷமும் பொங்கல்களிலும், புவியிலெங்கும் கண்ணியம்.

26. வெளுத்து வெளுத்து விழுந்த பொடியைக் குழைத்துக் குழைத்துக் குவித்துச் சேர்த்து, மடக்கி மடக்கி இடித்துத்திரட்டி, உருட்டி உருட்டி ஒடுக்கி நீட்டிச், சருக்கு சருக்கென்றறுத்த துண்டை படக்குப் படக்கென்றழுத்திப் பரப்பி, உலர்த்தி எடுத்த தகட்டைத்துடைத்துத் துடைத்து அடுக்கியானதும், கொதித்துக் கொதித்துக் குமுறுங் குளத்திலே விடுத்து விறட்டிக் குச்சியில் கொறுத்துக் கொறுத்துக் கழற்றியானபின், நொறுக்கி நொறுக்கி நுழைப்பார் குகைக்குள்.

27. பெருங் கோடீஸ்வரனும் பிச்சை கேட்கும் பிரியமான பீடைவஸ்து என்ன வஸ்து?

28. இந்த லோகந் தன்னில் வாழும் எமலோகத்துத் தூதும் நான், ஈன்ற மக்களைத் திரும்ப வயிற்றில் இருத்தும் புண்யவதியும் நான், கந்தவாடை வாத்யவாடை காதலிக்கும் பெண்ணும் நான், காலுமில்லை, கழறுவாயென் பெயரையே.

29. பிளந்த நாக்குடையவனும் சர்ப்பமல்ல, பேசாமல் பேசுவனும் ஞானியல்ல, கரும்பாலும் செம்பாலும் குடித்துக் கக்கிக் கற்றவர்க்கும், வர்த்தகர்க்கும் தொண்டனாவான்.

30. மரகதமணியாய்ப் பிறந்து, பொன் மணியாய் வளர்ந்து, முத்துமணியாய் வெடித்துப், பால்மணியாய்ப் பக்குவமாய்த், தாணிகாக்கும் தாயானேன்.

31. நாலுகால் உண்டெனினும் நடக்க மாட்டேன், அந்தரத்தில் அங்குமிங்கும் அசைந்து செல்வேன், தாய்மார்க்குத் தோழியாய்த் தாணி தன்னில் குழந்தைகளைப் பேணுவேன் பெறவே மாட்டேன்.

32. கையினால் விதைக்கப்பட்டு வாயினால் பொறுக்கப் படும்.

33. காண்பதற்கு உருவமுண்டு, கையில் பிடிக்க உடலில்லை.

34. நட்டமாய் நிற்கிறவனுக்கு நறுக்கு நறுக்கென்று கடிக்கும் வேலை.

35. தந்தைக்கும் முன்னே தாணியில் நிற்பான். அவனைப் போற்றி இதனை முடிப்பாம்.

---

விடை :—24. சந்திரன். 25. எலுமிச்சம்பழம். 26. அப்பளம். 27. மூக்குப்பொடி. 28. பாம்பு. 29. பேனா. 30. நெல், அரிசி, சாதம். 31. மரத்தொட்டில். 32. எழுத்துக்கள். 33. நிழல் அல்லது பிரதிபிம்பம். 34. அருமாமணை. 35. விநாயகர். (தொந்திக் கணபதி)





ராணி லக்ஷ்மிபாய் ராஜவதி
அகில இந்திய மாதர் மஹாநாட்டுத் தலைவி.



ஸ்ரீமதி மேரி டிங்மன்
சர்வதேச மாதர் சமாதான சங்கத்தின் தலைவி. அகில இந்திய மாதர் மஹாநாட்டுக்குச் சென்று விட்டு இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்.



ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்யாயா
டென்மார்க்கில் நடைபெறப் போகும் அகில உலக மாதர் சமஉரிமைச் சங்க...



குமாரி டி. அன்னபூரணி
லாகூரில் நடைபெற்ற அகில பாஞ்சா... கல்லூரி மாணவிகள் சங்கீதப் போட்டியில் வாய்ப்பாட்டிலும், சிதார் வா... இயத்திலும் பரிசுகள் பெற்ற...



லக்ஷ்மீ பூஜை

# மாதவி, மனோன்மணி

"தாமரை"

(முன் தொடர்ச்சி)

பெற்றோர்களின் கவனிப்பு இல்லாமல் பையன் மிகுந்த முரடனாகி தன் மனம் போல் நடக்க ஆரம்பித்தான். மாதவி இவ்விதமாக கிரஹக்ருத்யத்தில் சிறிதும் பற்றுதல் காட்டாது கண்மூடித்தனமாக நடந்து கொள்வது எவ்வளவு அறிவீனம்! அதனால் வரும் தீமைகளை சற்றும் அறியாது அவள் காலங் கழிப்பது வெறுக்கத்தக்க தன்றோ! சுருக்கி சொன்னால் மாதவி டாம்பீகத்தில் இறங்கி தன் கணவன் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் காசுகளனைத்தையும் லக்ஷியமில்லாமல் வாரி இறைத்தாள். வரும் காலத்தை உத்தேசித்து அவள் ஒரு செப்புக் காசுகூட மீக்கவில்லை. இன்றைக்கு வாங்கிய புடவை அடுத்து வரும் பதினைந்து நாட்களில் நாகரீகத்திற்கு ஏற்றதல்ல (out of fashion) என்று அதை அப்படியே பெட்டியில் மடித்து வைத்துவிட்டு வேறு புதுமோஸ்தர் புடவை வாங்குவாள். நகைகள் விஷயத்திலும் இவ்விதமே. அவள் சுதேசி சாமான்களை கண்ணெடுத்தும் பாராள். காட்டுமிராண்டிகள் உபயோகிக்கும் பொருள்கள் என்று சுதேசி வஸ்துகளை இழிந்து பேசுவாள். அடிக்கடி தன் வீட்டில் தன் சிநேகிதிகளை எல்லாம் அழைத்து பெரிய விருந்து நடத்துவாள். அந்த சமயத்தில் அவர்களின் சீட்டாட்டமும், கூப்பாடும் ஒரே அமக்களமாக இருக்கும். இவ்விதமாக இவளுடைய அனாவச்ய செலவிற்கு தன் கணவனின் சம்பாத்தியமும் போதாமல், அனேக பெரிய துணிக்கடைகளிலும், நகைக்கடைகளிலும் பற்று வரவு புஸ்தகம் ஏற்படுத்திக் கொண்டு தனக்குத் தேவையான சாமான்களை எல்லாம் கடனாக எடுத்து வர ஆரம்பித்தாள். இவ்விஷயம் வெகு நாட்கள் வரைக்கும் சாந்தமூர்த்திக்குத் தெரியாது. முழுவதும் மாதவியின் மேல் குற்றஞ் சொல்வதிலும் பிரயோஜனமில்லை. அவளுடைய கணவன் கொடுத்த இடமும் தான். அவன் முதலிலிருந்தே சற்று கண்டிப்பாக இருந்து அவளுடைய விபரீதப் போக்கை அடக்கி வந்திருந்தால் அவள் நின்ற நிலை இவ்வளவு தலைகீழாக இருந்திருக்காது.

மாதவியும் மனோன்மணியும் பலவருஷங்களாக ஒரே ஊரில் வசித்து வந்துங்கூட இருவரும் சந்தித்துக் கொள்ளும் வழக்கமே கிடையாது. மனோன்மணி அனேக முறைகள் தன் தமக்கையை பார்ப்பதற்கு அவள் இல்லஞ் சென்று பிறகு ஏமாற்றத்துடன் திரும்பி வந்திருக்கிறாள். மாதவியோ தன் ஏழை சகோதரியை தன் வீட்டில் வரவேற்று தனக்கு சரிசமானமாக பாவித்து உரையாடுவது, தன் அந்தஸ்திற்கும் கௌரதைக்கும் தகுதி யல்ல என்ற மமதை கொண்டு; ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி மனோன்மணியைக் காண மறுத்து வந்தாள். மாதவியின் கருத்தை பிறகு அறிந்த மனோன்மணி, தன் உடன் பிறந்த சகோதரி அனியாயமாய் படாடோபத்திலீடுபட்டு தன் காலத்தையும், பணத்தையும் உபயோகமற்ற வழியில் விரயஞ் செய்வதை கண்டு அத்யந்த விசனமடைந்து அவளுக்கு நற்புத்தியை அளிக்கும்படி ஸர்வேச்வரனை வேண்டுவாள். சாந்தமூர்த்தி தன் மைத்துனியிடம் மிகுந்த மதிப்பும் விச்வாஸமும் வைத்திருந்தான். எப்பொழுதாவது ஒழிவு நேரம் கிடைக்கும் பொழுது அதை தன் ஷட்டகன் வீட்டில் கழிப்பான். "உங்கள் வீட்டிலிருக்கும்பொழுது எனக்கு உண்டாகும் அமைதியும் சந்தோஷமும், எனக்கு என்னுடைய க்ருஹத்

தில் கிடைப்பதில்லையே" என்று மனம் புண்பட்டு கூறுவான்.

நிற்க, ஒரு நாள் மத்தியானம் மாதவி ஒரு தேனீர்க் கச்சேரிக்கு போவதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். தன்னுடைய பெரிய பீரோவைத் திறந்து வைத்துக் கொண்டு, தன் விலை உயர்ந்த புடவைகள் முதலியவற்றை தன் முன்பு பரப்பி வைத்துக் கொண்டு அன்று தனக்கு வேண்டிய உடுப்பை பொறுக்குவதற்காக எல்லாவற்றையும் புரட்டிக்கொண்டிருந்தாள். ஒரு பக்கம் மேஜையின் மேல், திறந்து வைக்கப் பட்டிருந்த பெட்டிகளிலிருந்து, பலவித நிறக்கற்கள் பதிக்கப்பட்ட நெக்லேஸ்களும், வளைகளும் மாலைகளும் மோதிரங்களும் பிரகாசித்தன. இக்காக்ஷியை பார்க்குங்கால், உயர்தர உடைகளும் நகைகளும் விற்கப்படும் கடைகளே இவளுடைய வீட்டிற்கு சாய்ந்து விட்டனவோ என்று திகைக்கும்படி இருந்தது.

இச்சமயம் டாக்டர் சாந்தமூர்த்தி ஆஸ்பத்திரியிலிருந்து மிகவும் அவசரமாக வீட்டிற்குள் வந்து "யாரங்கே, மிகவும் தாகமாக இருக்கிறது. கொஞ்சம் டீ கொண்டு வாருங்கள்" என்று கூவினான். ஆனால் இவனுடைய கூக்குரலுக்கு ஒரு வித பதிலும் கிடைக்கவில்லை. வேலைக்காரர்களெல்லோரும் பின் புறத்து அறையில் சீட்டாடிக் கொண்டும் இறைந்து பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தனர். அவர்களுடைய அட்டகாசத்தில் சாந்தமூர்த்தி கூப்பிட்டது எங்கே காதில் விழப் போகிறது? வீட்டு எஜமானிக்கு தன் கணவன் டீ கொண்டு வரும்படி உத்திரவிட்டது காதில் விழுந்துங்கூட அவள் இருந்த இடத்தை விட்டு அசையாதது ஆச்சர்யப் படத்தக்கதல்ல. ஏனெனில் மாதவி தன் கணவனுக்கு ஒரு தீர்த்தம் கூட தன்கையால் கொடுத்த நாளே கிடையாது. இதுவும் ஒரு நாகரீகச் செயல் போலும்!

பத்து நிமிஷங்கள் காத்திருந்தும் ஒன்றும் பதில் வராது போகவே சாந்தமூர்த்தி வெறுப்புடனும், மனச்சோர்வுடனும் தன் மனைவியின் அறைக்குச் சென்றான். அங்கு கண்ணைப்பறிக்கத்தக்க ஒளியை உடைய ஆடையாபரணங்களுக்கிடையே நிற்கும் தன் மனைவியைக் கண்டு, ஒன்றும் விளங்காமல், "மாதவி, இவையெல்லாம் என்ன?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டான். ஏனெனில், அவன் தன் மனைவியிடம் இவ்வளவு நகைகளும் உடைகளும் இருப்பதை அன்றுதான் கண்ணாரக்கண்டான்.

மாதவியோ, இந்த சந்தர்ப்பத்தில் தன் கணவன் தன் அறைக்கு வருவதை எதிர்பார்த்திராதபடியால் முதலில் திடுக்கிட்டுப் போனாள். பிறகு சமாளித்துக்கொண்டு "இவைகள் எல்லாம் என்னுடையது தான். இவ்வளவு இருந்துங்கூட இன்று தேக்கச்சேரிக்கு அணிந்து கொள்ள பொருத்தமாக ஒரு உடையுமில்லை" என்று தன் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு உரைத்தாள்.

தன் மனைவியின் பதிலைக்கேட்டு சாந்தமூர்த்தி வழக்கத்திற்கு விரோதமாய் தன் பொருமையை இழந்தான். மாதவியைக் கடிந்து கொள்ளாமல் அவள் போனபடியெல்லாம் விட்டால் அவள் சீக்கிரம் அழிந்து போவாள் என்று டாக்டருக்கு அன்று தினம்தான் புலப்பட்டது போலும்!

"மாதவி, நீ பேசுவது கொஞ்சமும் நன்றாக இல்லை. இவ்வளவு விலை உயர்ந்த ஆடையாபரணங்களை வைத்துக்கொண்டும் நீ இன்னும் அதிருப்திபடுகிறாயே! நம் இந்தியாவில் ஒவ்வொரு நாளும் எவ்வளவு ஏழைமக்கள் குடிக்கக்கஞ்சியில்லாமல் தவிக்கிறார்கள்? பசிப்பிணியினால் உயிரை விடுபவர்களின் எண்ணிக்கை எத்தனை? இதையெல்லாம் நன்கு அறிந்து கொண்டும் நீ இவ்விதமாக அனாவச்யமாக செலவு செய்து உன்னத ஸ்திதியிலிருந்து, ஒரு பிரயோஜனமும் இல்லாமல் உன் வாழ்





நாட்களை கழிப்பது உனக்கு அவமானமாக இல்லையா? இது ஒரு பெரும் குற்றமாக உனக்குத் தோன்ற வில்லையா? அது போகட்டும், இவ்வளவு விலை உயர்ந்த சாமான்களை வாங்கி உன் பீரோவில் நிறைத்துக்கொள்ள உனக்குப் பணம் ஏது? உண்மையைச் சொல்" என்று பூமியை உதைத்து கொண்டு கடுமையாக வினவினான்.

தன் கணவன் ஒரு நாளும் தன்னிடம் இப்படிப் பேசியதை அறியாத மாதவி நடுங்கிப் போய் பல பல வென்று கண்ணீர் உகுத்தாள். அவளுடைய புடவைத் தலப்பை நிரடிக் கொண்டிருந்த அவளுடைய விரல்கள் நடுங்கின. இத்தருணத்தில் பீரோவில் ஒரு மெல்லிய கம்பியில் அடுக்கடுக்காய் கோர்த்து வைக்கப்பட்டிருந்த பலவித வர்ண மெல்லிய காகிதங்கள், அவளைக்காட்டிக் கொடுப்பதுபோல், காற்றில் படபட வென்று அடித்துக் கொண்டன. இக்காகிதங்களின் மேல் சாந்தமூர்த்தியின் கவனம் உடனே சென்றது. அவன் சட்டென்று பீரோவை அணுகி அக்கம்பியிலிருந்த சில காகிதங்களை கவனித்து பார்த்தான். சில விநாடிகளில் அவன் முகம் அடைந்த விகாரத் தோற்றத்தையும் மனக்கலக்கத்தையும் விவரிக்க இயலாது.

"அடிநீலி, இத்தகைய தகாத காரியத்தைச் செய்ய உனக்கு எப்படி தைரியம் வந்ததடி! நீ பெண்ணல்ல பேயே! உனக்கு கொஞ்சமும் உணர்ச்சி யில்லையா! என் மானம் போயிற்றே!" என்று உரக்க கூவிக்கொண்டு அங்கிருந்த நாற்காலியில் தொப்பென்று அமர்ந்து தன் நெற்றியை காதினால் அமுக்கிக் கொண்டான்.

சாந்தமூர்த்தியை இவ்வித அதிர்ச்சிக்கு ஆளாக்கிய அக்காகிதங்களில் உள்ள மர்மம் என்னவென்று நினைக்கிறீர்கள்! அவைகள் தான் மாதவியினால் அனேக துணிக்கடைகளுக்கும், நகைகள் மற்றும் இதர நாகரீக சாமான்கள் விற்கப்படும் கடைகளுக்கும் கொடுக்க வேண்டிய ஏராளமான பணத்தொகை சம்பந்தப்பட்ட கணக்கு தீர்க்கப்படாத பில்கள்! சுமார் பத்தாயிரம் ரூபாய்க்கு சிறுகச் சிறுக கடனாக சாமான்கள் வாங்கி இருக்கிறாள் மாதவி!

இத்தருணத்தில் வீட்டு வெளிப்புறத்தில் ஏதோ கலவரம் ஏற்பட்டது. ஒரு வேலைக்கார ஸ்த்ரீ உள்ளே தலைவிரி கோலமாய் ஓடி வந்து, "மேன்மாடியில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை கிருஷ்ணன் கைபிடிச்சுவரின் மேலிருந்து தவறி கீழே விழுந்து, மண்டையில் அடிபட்டு மூர்ச்சித்துப் போயிருக்கிறான்" என்று கூவினாள்.

இதைக்கேட்டதும் சாந்தமூர்த்தி "ஹா" வென்றலறிக் கொண்டு வீதிப்பக்கம் ஓடிச் சென்று ரத்த வெள்ளத்தின் நடுவே அசைவற்றுக் கிடந்த குழந்தையின் நாடியைப் பிடித்துப்பார்த்தான். இன்னும் உயிர் இருப்பதை அறிந்து அவனுக்குத் தோன்றிய பலவித சிகித்சைகளை எல்லாம் செய்தான். ஆனால் ஒன்றும் உபயோகமில்லாமல் போயிற்று. குழந்தையின் மண்டையில் ஏற்பட்ட காயம் மரணகாய மானபடியால் சிறிது நேரத்தில் இறந்தது.

"தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்" என்ற பெரியோர் வாக்கியம் பொய்யாகுமா? ரத்தப்பிரவாகத்தில் கிடந்த தன் புதல்வனையும் அவன் இறந்ததையும் கண்ணாரக்கண்ட மாதவியின் மனம் பட்ட துயரம் கொஞ்ச நஞ்சமன்று. தான் அக் குழந்தையை பெற்றது முதல், அதனிடம் அன்பு செலுத்தாமலிருந்ததும் அதைக் கண்ணெடுத்து பாரமலிருந்ததைப் பற்றிய நினைவுகளும் அச்சமயம் அவள் மனக்கண் முன் தோன்றி அவள் துயரத்தை அதிகரித்தன.

சாந்தமூர்த்தியோ, தன் மனைவியின் மடமையினால் தான் பெரிய கடனாளி ஆகிவிட்டதையும், தன் ஒரே புதல்வனை எதிர்பாரா விதமாய் இழந்ததையும் எண்ணி எண்ணி மூளைக்கலக்க

முற்று பித்தர் போலானான். வீட்டைச் சுற்றிச் சுற்றி ஒரு பைத்தியக்காரன் போல் அலைந்து, தூணையும் சுவற்றையும் உற்றுப்பார்த்து "கிருஷ்ணா ஓடிவாடா" என்று கூவுவான். ஆஸ்பத்திரியில் சாந்தமூர்த்தியினால் ஆபரேஷன் செய்யப்பட்ட ஒரு நோயாளி அத்தியாவஸ்தையி லிருப்பதாக அன்று மாலை தகவல் வந்தது. சாந்தமூர்த்தி தன் துயரத்தைப் பெரிதாகப் பாராட்டாமல், உடனே காரை எடுத்துக்கொண்டு அதிவேகமாக ஆஸ்பத்திரியை நோக்கி ஓட்டினார். ஆனால், அன்று எதிர்பாராதபடி ஒன்றின் மேலொன்றாக சம்பவித்த கொடிய கஷ்டங்கள் அவருடைய மூளையை அளவுக்கு மேல் தாக்கியபடியால், பாதி வழியில் அவர் திடீரென்று மூர்ச்சை அடையவும், அவருடைய கைகள் நடத்தும் சக்கரத்திலிருந்து (Steering Wheel) நழுவியது. தக்ஷணமே மோட்டார் எதிரிலிருந்த ஒரு விளக்குக் கம்பத்தில் வேகமாக தாக்கி அந்தக்கம்பம் முறிந்து போய், காரின் முன் பக்கத்திலுள்ள கண்ணாடிப் பலகையின் மேல் விழுந்தது. அக்கண்ணாடி பல சுக்கலாக உடைந்து, சில துண்டுகள் 'ஸ்டீரிங் வீலி'ன் மேல் பிரக்ஞையற்று விழுந்திருந்த சாந்தமூர்த்தியின் மண்டையிலும், உடம்பிலும் பொத்துக் கொண்டன. இப்பொழுது காரும் நின்று விட்டது. சில விநாடிகளில் ஜனத்திரள் கூடி விட்டது. காயமடைந்தவர் டாக்டர் சாந்தமூர்த்தி என்று தெரிந்தவுடன் உடனே ஒரு கார் ஏற்படுத்தி அவரை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்து, அவருக்கு வேண்டிய சிகித்சை செய்யப்பட்டது. ஆனால் அவர் பிழைப்பது துர்லபமென்று பெரிய டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.

மாதவிக்கு இத்துக்ககரமான செய்தி தெரிவிக்கப்பட்டதும், அவள் ஒரு நடைப்பிணம் போல் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தாள். சாந்தமூர்த்திக்கு பிரக்ஞை வந்ததும் ஆயாசத்துடன் கண்களைத்திறந்து, மாதவியை அன்புடன் தழுவிக்கொண்டு ஒரு சிறு குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுதார். தன் மனைவியின் புத்தியீனத்திற்கும் அவள் செய்த தகாத காரியத்திற்கும் சாந்தமூர்த்தி அவளிடம் கோபம் கொண்டாலுங் கூட அவளிடம் அவர் வைத்திருந்த அன்பு சிறிதும் நிலைகுலையவில்லை. மாதவி தன் தவறுதல்களை எல்லாம் உணர்ந்து மனம் நொந்து கல்லாய்ச் சமைந்து நின்றாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப்பெருகிக் கொண்டிருந்தது. அந்த சிலமணி நேரங்களில் அவள் அனுபவித்த ஹிருதய வேதனையை விவரிப்பது இயலாத காரியம்.

அன்றிரவே, இந்த சமாசாரங்களை எல்லாம் கேள்வியுற்ற நீலகண்டனும் மனோன்மணியும் பதை பதைத்து ஆஸ்பத்திரிக்கு வந்து சாந்தமூர்த்தியின் அபாயகரமான நிலைமையைக் கண்டு வியாகூலமடைந்தனர். மாதவி இவர்களைக் கண்டதும் ஒரு குற்றவாளியைப் போல் தலை குனிந்து கண்ணீர் பெருக்கினாள். சாந்தமூர்த்தி விஷயங்களை எல்லாம் தெளிவாகவும் சுருக்கமாகவும் நீலகண்டனுக்கு எடுத்துரைத்த பிறகு "சகோதரா, நான் என் அருமை மாதவியை உங்களிருவர் பாதுகாப்பிலும் ஒப்புவித்து உயிர் துறக்கிறேன். நீயும் உன் மனைவியும் அவளை அன்புடன் நடத்தி ரக்ஷிக்க வேண்டும். அவள் அறியாத பேதை" என்று துக்கம் தொண்டையை அடைக்கப் புகன்று மாதவியை வாத்ஸல்யத்துடன் பார்த்தான். மாதவி தன் கணவன் கரங்களை கெட்டியாகப் பற்றிக் கொண்டு "நாதா, என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தையைச் சொல்லமாட்டீர்களா? என் மனம் பிளந்து விடும் போலிருக்கிறதே!" என்று கல்லும் கரையும் படி கதறினாள்.

"என்னருமைக் கண்மணி, உன்னை மன்னிக்காமலா நான் உன் க்ஷேமத்தைக்கோரி இவ்வளவு ஏற்பாடு செய்கிறேன். நான் உன்னை மனப் பூர்வமாக மன்னிக்கிறேன். நீ இனி மேலாவது உன்னுடைய வாழ்நாட்களை விவேக





மாகவும் உபயோக முள்ள முறையிலும் கழிக்கும்படி கடவுள் உனக்கு அருள் புரிவாராக! இந்த விஷயத்தில் உன் சகோதரி உனக்கு வேண்டிய உதவி செய்வாள். பணசம்மந்தமான மற்ற ஏற்பாடுகளை எவ்வெப்படி செய்ய வேண்டுமென்பதை நீலகண்டனுக்கு சொல்லியிருக்கிறேன். அவன் எல்லாவற்றையும் திருப்திகரமாக முடித்து வைப்பான். நீ சிறிதும் மனம் கலங்க வேண்டாம்!" என்று மாதவிக்கு தைரியம் கூறி அவளை இன்னொருமுறை தன்னருகில் அழைத்துத் தழுவிக் கொண்டான். சாந்தமூர்த்தி அன்றிரவே மண்ணுலகை விட்டு விண்ணுலகுக் கேகினான்.

மனோன்மணியின் தேறுதல்களினாலும் அன்புகனியும் வார்த்தைகளினாலும் மாதவி கூடியவரையில் தைரியமும் பொறுமையும் கொண்டு தனக்கு சம்பவித்த கொடிய கஷ்டங்களை தாங்கும் சக்தியை அடைந்தாள்.

"மனோன்மணி! நான் அப்பொழுதெல்லாம் அத்யந்த மமதையினால், உன்னை என் வீட்டில் வரவேற்று, உன்னுடன் உரையாடவும் மறுத்தேனே! அப்படி இருந்தும், நீ இப்பொழுது என்னை உன் வீட்டில் வைத்து ஆதரிக்க இஷ்டப்படுகிறாயே! உனக்கு என்மேல் வெறுப்பு ஏற்பட வில்லையா?" என்று மாதவி தன் தங்கை மனோன்மணியை நோக்கி வினவினாள்.

"அக்கா, அதையெல்லாம் நான் அப்பொழுதே மறந்து விட்டேன். நீ என்னை அலக்ஷியம் செய்த காலத்திலுங் கூட நான் உன்னை கொஞ்சமும் வெறுக்க வில்லை. கடவுள் உனக்கு கூடிய சீக்கிரம் விவேகத்தை அளித்து நன்மார்க்கத்தைக் காண்பிக்கவேண்டுமென்று எப்பொழுதும் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். உனக்கு இப்பேற்பட்ட கஷ்டங்கள் ஒன்றின் மேலொன்று சம்பவித்ததை நினைக்க என்மனம் மிகவும் வேதனைப் படுகிறது" என்று சொல்லி தன் தமக்கையை தழுவிக்கொண்டு துக்கப்பட்டாள்.

நீலகண்டன் சாந்தமூர்த்தியின் வேண்டுகோளின்படி மாதவி யிடமிருந்த உயர்ந்த ஆடை யாபரணங்களையும் மோட்டாரையும், இன்னும் இதர சில்லரை சாமான்களையும் விற்று கடன்களை எல்லாம் ஒருவாறு அடைத்து முடித்தான். அந்த நகைகளும் துணிமணிகளும் வாங்கிய விலையில் பாதிக்கு விற்பனை யாகுவதே மிகுந்த கஷ்டமாகி விட்டது. கடனுக்குக் கொடுக்கப்பட்ட தொகை போக பாக்கி 2000 ரூபாய் தான் மிஞ்சியது. அதை அப்படியே மாதவியின் பேரில் சேமித நிதியில் போட்டு வைத்திருந்தான் நீலகண்டன்.

மேற் சொன்ன சம்பவங்கள் நடந்து நான்கு வருஷங்கள் ஆயின. நீலகண்டன் இப்பொழுது ஒரு துணி ஆலைக்கு சொந்தக்காரன். இதற்கு காரணம் அவனுடைய ஊக்கமும் விடா முயற்சியுமே.

நீலகண்டன் வீட்டில் பஞ்சப் போதிகளுக்கு நடுவில், மஞ்சள் கதர்புடவை உடுத்தி ஒரு ராட்டினத்தை வைத்துக்கொண்டு சுறுசுறுப்பாக நூல் நூற்றுக் கொண்டிருக்கும் அந்த ஸ்திரீ யார்? அம்மாதின் முகத்தில் துக்கம் கலந்த அமைதி குடி கொண்டிருப்பதை கவனியுங்கள். அவள் தான் முன்னொரு காலத்தில் டாம்பீகத்திலும் வீண் பெருமையிலும் உழன்று கொண்டிருந்த மாதவி! தன் தங்கை கிரஹலக்ஷ்மியாக வாழ்வதும் அன்றி தேசத்திற்கு செய்யும் ஒப்பற்ற தொண்டுகளைக் கண்டு தான் தன்னுடைய மிஞ்சிய வாழ்நாட்களையாவது உபயோக முள்ளதாக நடத்த வேண்டுமென்ற அவாவும் ஊக்கமும் கொண்டு, மாதவி இப்பொழுது ஹரிஜன சீர்திருத்தம், கைத்தொழில் அபிவ்ருத்தி, இன்னும் அனேக நற் கைங்கர்யங்களி லீடுபட்டு வாழ்ந்து வந்தாள். அவள் தன்னுடைய பழய வாழ் நாட்களை எல்லாம் அறவே மறந்து இது தன்னுடைய புனர் ஜன்மம் என்பதாக கருதினாள்.

இவ்விரு சகோதரிகளும் தேசத்திற்கு புரியும் இணையற்ற தொண்டுகளைப் பற்றி பாராட்டி பேசாதவரும் உண்டோ? ஏனைய சகோதரிகளாகிய நாமும் இவ்விருவரையும் உதாரணமாகக்கொண்டு நம்மாலியன்ற மட்டும் நம் வாழ்நாட்களை உபயோகமுள்ள வழியில் கழிக்க முயற்சிப்போமாக!

சுபம்! சுபம்!! சுபம்!!!

# ச்ருங்ககிரி ஸ்தலம்

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

இந்த திவ்ய ஸ்தலம் மைசூரிலிருந்து ஷீமோகா (Shimoga) விற்குச் செல்லும் இருப்புப்பாதை வழியில் தரிக்கரை என்ற ஸ்டேஷனுக்கு சுமார் 57 மைல்களுக்கு அப்பாலுள்ளது. தரிக்கரை ஸ்டேஷனிலிருந்து வண்டிகளும், மோட்டார் பஸ்ஸுகளும் அமர்த்திக் கொள்ளலாம். பங்களூரிலிருந்து மோட்டாரில் செல்லுகிறவர்கள் ரஸ்தா மார்க்கமாய் சுமார் 210 மைல்கள் செல்ல வேண்டும். தரிக்கரை யிலிருந்து ச்ருங்ககிரிக்குச் செல்லும் மார்க்கம் மிகவும் நேர்த்தியானது. எங்கு பார்த்தாலும் அழகிய குன்றுகளும், அடர்ந்த வளப்புமிக்க காடுகளும் கண்ணைக் கவரும். நாலா பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்ட இந்த ஸ்தலம் ஒரு ரத்தினம் போல் விளங்குகிறது. ச்ருங்ககிரி ஸ்தலத்தைப் பற்றிய விசேஷ கதைகள் அநேக மிருக்கின்றன. இங்கு விபண்டக முனிவர் ஆச்ரமத்தை அமைத்துக்கொண்டு தபஸ் செய்ததாக ஓர் கதை யுண்டு. ச்ருங்க கிரிக்கு ஆறு மைல்கள் தூரத்தில் கிக்கம் என்ற ஸ்தலமிருக்கிறது. இங்கு தான் விபண்டகரின் பிள்ளையும், ரோமபாதரின் மருமகனுமான ரிஷ்யச்ருங்க முனிவர் தபஸ் செய்ததாகக் கூறுகிறார்கள். கிக்கத்திலிருந்து ஏழு அல்லது எட்டு மைல்கள் தூரத்தில் துங்காநதி உற்பத்தியாகின்றது.

ஆதி சங்கரர் ச்ருங்ககிரி ஸ்தலத்தை தேர்ந்தெடுத்தது பற்றி ஒரு கதை யுண்டு. மண்டன மிச்ரர் என்ற வித்வானை சங்கரர் வாதத்தில் ஜெயித்தா ரென்றும் அப்பெரியார் பிரும்ம தேவரின் அவதார மென்றும், ஸரஸ்வதி தேவியே மண்டன மிச்ரரின் பார்யையாக அவதரித்தாள் என்றும், சங்கர விஜயத்திலிருந்து அறியலாம். மண்டன மிச்ரரையும் அவரது பாரியையையும் வாதத்தில் ஜெயித்து, இவ்விருவர்களையும் அழைத்துக்கொண்டு சங்கரர் தக்ஷிண தேசத்துக்குக் கிளம்பினார். பிரயாணம் செய்யுமுன் ஸரஸ்வதி தேவியார் சங்கரரைப் பார்த்து "நீ செல்லு மிடமெங்கும் நான் பின் தொடரத் தயாராயிருக்கிறேன். ஆனால் என்னை நீ திரும்பிப் பார்க்கவே கூடாது. எங்கு என்னைப் பார்க்கிறாயோ அங்கு நான் யந்திரா காரத்துடன் நின்று விடுவேன்" என்று நிபந்தனை செய்ய, சங்கரர் அதற்கு ஒப்புக்கொண்டு முன் செல்ல, தேவியும் சர்வாபரண பூஷிதையாய் பின் தொடர்ந்து சென்றாள். தேவி காலில் அணிந்துள்ள சிலம்பின் சப்தத்தினால் "லோக மாதா" பின் வருகிறாள் எனத் தெரிந்து கொண்டு சங்கரர் சென்றார். மைசூர் இராஜ்யத்தில் துங்கையும் பத்ரையும், ஸங்கமமாகு மிடத்தை அடைந்ததும் அந்த நதியைக் கடக்க நேரிட்டது. சங்கரர் நதியைக் கடக்க தேவியும் அவ்வாறே





செய்தாள். ஆனால் தேவியார் நதியைக் கடந்து செல்லுங்கால் காலின் சிலம்பு சப்தம் கேட்காமையால் சங்கரர் திரும்பிப் பார்த்தார். உடனே தேவியார் நிபந்தனைப் படி அங்கு யந்திர ரூபிணியாக மறைந்து விட்டாள்.

சங்கரர் மிகவும் மன வருத்த மடைந்தார். தாயை ஸ்தோத்ரம் செய்தார். "ஹே! தேவி, நான் அக்ஞானத்தினால் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். உன் கால் சிலம்பின் சப்தம் கேட்காததால் திரும்பிப் பார்க்க நேரிட்டது. என் பிழையை மன்னித்து மீண்டும் என்னுடன் வர வேண்டும்" என்று வெகு வாய் வேண்ட, தேவியார் மனமிரங்கி, தன்னுடைய கலைகளில் ஒன்றை "கூடலி" என்ற அந்த க்ஷேத்ரத்தில் வைத்து விட்டு சங்கரரைப் பின் தொடர்ந்தாள்.

அங்கிருந்து சுமார் 22 மைல்கள் சென்றதும் ஒரு வெகு அழகான பிரதேசம் தென்பட்டது. எங்கு பார்த்தாலும் மரங்கள், சோலைகள், மலையருவிகள், கண்ணைக் கவர்ந்தன. பக்ஷிகள் உல்லாஸமாய் கூவின. இதைக் கண்டதும் சங்கரர் "இது மஹரிஷிகள் வசிக்கத் தக்க பிரதேசம் போலிருக்கிறது. இங்கு வசிப்பவரின் மனது மிக அமைதி யுள்ளதாகவே இருக்கும்" என்று எண்ணி பிரமித்து நிற்குங்கால், கடோர கர்பிணியான ஒரு தவளை பிரசவிக்கும் தருவாயிலிருந்தது. வெப்பத்தினால் வருந்தும் அந்தத் தவளைக்கு ஒரு மஹா சர்ப்பம் தன் படத்தினால் குடை பிடித்தது. இந்த அபூர்வ காக்ஷியைக்கண்ட சங்கரர் "ஆஹா! ஸர்பத்திற்கும் தவளைக்கும் வைரம் ஸ்வபாவமாய் ஏற்பட்டது. இவ்வித மிருந்தும் ஒரு தவளைக்கு சர்ப்பம் உதவிபுரிய முன் வந்தால் இந்தப் பிரதேசத்தின் மஹிமை எவ்வித மிருக்க வேண்டும்," என்று எண்ணி பின் வரும் அம்பிகையைப் பார்த்தார். அம்பாள் அங்கு அந்தர் தான மானாள். இந்த அம்பாள்தான் இங்கு சாரதாம்பிகையாய் விளங்குகிறாள்.

யந்திர ரூபிணியாய் விளங்கிய சாரதாம்பிகையை விஜய நகர ராஜ்ஜியத்தை ஸ்தாபித்து, போஷித்து வந்த வித்யாரண்யர் சிலாரூபமாய் ஸ்தாபித்து அதில் அம்பிகையை ஆகர்ஷணம் செய்தார். சாரதாம்பிகையை ஒரு முறையாவது நம் வாழ் நாட்களுள் தரிசனம் செய்யவேண்டும். சிலையின் அழகும், அதிலிருந்து வெளியாகும் மேனியும் அம்பாளைப் பார்ப்பவர்கள் மனதில் தோன்றும் உத்ஸாஹமும் நாவால் வர்ணிக்க முடியாது. அம்பிகையை தரிசித்தவர்களே அந்த பாக்யத்தின் பெருமையை அறியமுடியும். ஸாதாரண சிவந்த புடவையினால் அலங்கரிக்கப் பட்டபோதிலும், அல்லது ஆண்டாண்டுகளாக பாதங்களில் பக்த கோடிகளால் அர்ப்பணம் செய்யப்பட்ட விலையற்ற ரத்தினங்களாலும், பட்டுகளாலும் அலங்கரிக்கப்பட்டாலும், ஈஸ்வரியின் அழகு ஒன்று போல் கண்ணைக்கவரும் ஸ்ரீ அம்பிகையின் முக காந்தி என் கண்முன் விளங்குகிறது.

துங்காநதி தெற்கிலிருந்து வடக்கு முகமாய் ஓடி சிருங்ககிரியின் சமீபத்தில் கிழக்கு முகமாய் ஓடுகிறது. வடகரையில் சிருங்ககிரி ஸ்தலம் இருக்கிறது. இங்குதான் மடமும் சாரதாம்பிகையின் கோயிலும், வித்யாசங்கரரின் ஆலயமுமுள்ளன. வித்யாசங்கரர் என்ற மகான் ஞாபகார்த்தமாக வித்யாரண்யர் ஒரு ஆலயம் கட்டி

யிருக்கிறார். அந்த ஆலயத்தில் ஓர் விசேஷ மிருக்கிறது. இது பன்னிரண்டு ஸ்தம்பங்களை உடையது. சித்திர ஸ்தம்பம், வைகாசி ஸ்தம்பம், ஆனி ஸ்தம்பம், ஆடி ஸ்தம்பம், ஆவணி ஸ்தம்பம், என்று இவைகளுக்குப் பெயர் வைத்திருக்கின்றனர். பெயரை அனுசரித்து சித்திரை மாதத்தில் சித்திரை ஸ்தம்பத்தில் தான் சூர்ய கிரணங்கள் விழும். வைகாசி மாதத்தில் வைகாசி ஸ்தம்பத்தில் தான் சூரிய கிரணம் விழும். ஆனி மாதத்தில் ஆனிஸ்தம்பத்தில் தான் சூர்ய கிரணம் விழும். இது போன்றே ஒவ்வொரு மாதத்திலும், அந்தந்த மாதப் பெயர்களையுடைய ஸ்தம்பதத்தில் மட்டும் தான் சூர்ய கிரணம் விழுகிறது. இதைப்போன்ற ஆச்சர்யத்தை வேறு எந்த விசேஷ ஸ்தலத்திலும் காணமுடியாது.

துங்கா நதியின் தென்கரையில், நரசிம்ஹ தபோவன மென்றதோர் ஆச்ரமம் இருக்கின்றது. அது மிக வனப்பு வாய்ந்ததாக இருக்கின்றது. பண்டைய நாட்களில் ரிஷீஸ்வரர்கள் வஸித்த ஆச்ரமங்களின் ரூபம் எவ்வித மிருக்குமென்று அறிய இந்த தபோவனத்தை சகோதரிகள் ஒரு முறை தரிசித்தால் போதுமானதாக இருக்கிறது.

இத்தகைய மகா விசேஷம் பொருந்திய சிருங்ககிரி ஸ்தலத்துக்கு எனது சகோதரிகள் யாவரும் சென்று, இயற்கை தேவியைக் கண்டு களித்து, துங்கா நதியில் ஸ்நானம் செய்து, ஸ்ரீ சாரதாம்பிகையை தரிசித்து, வித்யா சங்கரர் ஆலயத்தில் ஸ்தம்பங்களின் மகிமையைக் கண்டு, நரசிம்ஹ தபோவனத்தையும் கண்டு களித்து, ஸ்ரீ சாரதாம்பிகாவின் அனுக்ரஹம் பெற்று கிரஹலக்ஷ்மிகளாய் வாழ்வார்களாக!

வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்,
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்,
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்,
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.

—பாரதி.



பால் பருகும் பாம்புகள்



"பஜனை செய்வோம் ஸ்ரீகிருஷ்ணன் நாமம்!"



# மலையாள கூட்டான் வகையரு

"ஜனககுமாரி"

"மலையாள கூட்டான் வகையரு" என்றால் என்ன வென்று தமிழ் நாட்டார் வெகு ஆச்சரியத்துடன் கேட்பார்கள் என்பது நிச்சயம். ஏனென்றால் 'அந்த....ஓட்டலில் இன்னைக்கி மலையாள அவியல், ரொம்ப திவ்வியமாயிருக்கும்,' என்று ஓடுவதைப் பார்த்தால் கூட்டான் என்றால் என்ன வென்று ஏன் கேட்க மாட்டார்கள். ஏன் அவ்வளவு தூரம், இப்பொழுது உங்களையே எடுத்துக்கொள்வோம். 'கூட்டான்னு அவியல் மாதிரி இருக்குமோ!' என்று எண்ணுகிறீர்கள். உங்கள் நாக்கில் ஜலம் சொட்டுகிறது. அத்துடன் சப்புக் கொட்டுகிறீர்கள். மொத்தத்தில் மலையாள சமையல்களில் உங்களுக்கு பிரியம் அதிகம். அது தெரிந்து தான் மலையாளவாசிகள், புதிதாக விஜயம் செய்யும் தலைவர்களுக்கு நேந்திரங்காய் வறுவல் அவியல் கூட்டான் வகையருக்கள் முதலியன சேர்த்து சமையல் தயார் பண்ணி "ஈ பாரதீய நேதாக்கள் மார் எழுந்தள்ளி வளரே பாக்கியவானு! ஈ நேந்திரங்கா உப்பேரியும், மோர்க்கூட்டானும் கூட்டி ரஸிக்கணும் கிட்டே" என்று கூறி ரஸிப்பித்து புகழை எளிதில் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். இங்கே சில மலையாள சமையல்களைப் பற்றி சிறிது எழுதுகிறேன். நீங்களும் செய்து உங்கள் கணவன் மார்களை ரஸிப்பித்து மகிழ்ச்சி அடையுங்கள்.

## மோர்க் கூட்டான்

"மோர்க் கூட்டான்" செய்வதற்கு வெண்ணெய் எடுத்த புளித்த மோர், குழம்பாக ஒருபடி, முற்றின தேங்காய் ஒன்று, பச்சை மிளகாய் 20, நேந்திரங்காய் இரண்டு, சேனைக்கிழங்கு ஒரு சேர், உப்பு அரைப்பலம், கருவேப்பிலை கொஞ்சம், தாளிக்க கடுகு, மஞ்சபொடி தேவை. இவைகளை தயாராக எடுத்து வைத்துக் கொண்டு பதட்டமில்லாமல் செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

முற்றின தேங்காயை உடைத்து தேங்கா துருவியில் துருவி எடுத்துக்கொள். பிறகு தேங்கா பூவுடன் மிளகாய் சேர்த்து அம்மியில் அல்லது ஆட்டு உரலில் நன்றாக வெழுமுண அறைத்துக் கொள்ளவும். நேந்திரம் வாழைக்காயையும், சேனைக் கிழங்கையும், தோல் சீவி துண்டு துண்டாக நறுக்கி வைத்துக் கொள். நல்ல மரக்கல் கச்சட்டியை அலம்பி சுத்தமாக எடுத்து, நறுக்கி வைத்துக் கொண்டிருக்கும் தாண்களை அலம்பி அதில் போடு. இரண்டு டீஸ்பூன் மஞ்சள் பொடியை தாண்களின் மேல் போடு. பிறகு இரண்டு டீஸ்பூன் நல்ல மிளகு பொடியையும் அதில்

போட்டு, தாண்களுக்கு சரியாக, சரிசமமாக ஜலம் விட்டு, அடுப்பிலேற்றி வேக வைக்க வேண்டும். தாண்கள் நன்ருக வெந்ததும் உப்பு போடவும். ஆப்பையால் இரண்டு தடவை நன்ருக கிளறிவிடு. தாண்கள் வேகுவதற்கும், ஜலம் சரியாக சுண்டு வதற்கும் சரியாக இருக்கும். பிறகு முன் சொன்ன, தயாராய் வைத்துள்ள புளிச்சமோரை அதில் கொட்டவும். மேற்படி கூட்டான் அதிகமாகக் கொதிக்கக் கூடாது. கொதித்தால் ருசி கெட்டுப் போகுமாகையால், பொங்கி வரும் சமயம் அடுப்பிலிருந்து இறக்கி விடவேண்டும். கருவேப்பிலையையும், முன் தயாராய் வைத்துள்ள தேங்காய் மிளகா விழுதையும் கூட்டானில் போட்டு கடுகு, கருவேப்பிலையும் தாளித்து அதில் கொட்டவும். பிறகு அலுமினியக் கரண்டியினுலோ அல்லது மர ஆப்பையினுலோ நன்ருக கிளறி விடவும். இப்பொழுது மோர்க் கூட்டான் தயாராய் விட்டது. சாப்பிடலாம். வாசனை ஜம்மென்று இருக்கும். வாசலில் போவோர், வருவோர்களை, வாசனையால் வசீகரப்படுத்தும்!! "ஹும் இது தாளு! இவ்வளவு தூரம் சொன்னது. பூ! நம்மூர் குழம்புமாதிரி" என்று சொல்லக் கூடும். ஆனுல் சாப்பிட்டுப் பார்த்தால் தெரியும் அதன் அருமை! பிறகு விடவே மாட்டீர்கள். வேணுமானுல் கேளுங்கள்!

என் சிநேகிதி மிஸஸ். அம்மு கிருஷ்ணஸ்வாமியை பாலகாட்டுக்கு கூட்டிப்போயிருந்தேன். அன்றிரவு நாங்கள் வந்திருந்ததை முன்னிட்டு, மோர்க்கூட்டானும், நேந்திரங்காய் வறுவலும், கூர்க்கங் கிழங்கு மெழுக்கு பரட்டி உப்பேரியும், பால் பிரதமனும் செய்திருந்தார்கள். என் சிநேகிதி அம்மு கிருஷ்ணஸ்வாமி மோர்க்கூட்டானை ஒரு மொக்கு மொக்கிளுள். அவளுக்கு மிகப்பிடித்தமான பால் பிரதமன் கூட அவ்வளவு அவள் மொக்கவில்லை. பிறகு உங்களைக் கேட்பானேன்!

## குறுக்கின காளன்

"குறுக்கின காளன்" செய்வதற்கு வெண்ணெய் எடுத்த புளித்தமோர், குழம்பாக ஒருபடி, ஒரு பலம் மிளகு பொடி, 2 மஞ்சள் துண்டு, போதுமான உப்பு, முற்றின தேங்காய் ஒன்று, கடுகு, கருவேப்பிலை கொஞ்சம், பச்சமிளகாய், தேவை. இவைகளை தயாராய் எடுத்து வைத்துக்கொண்டு அவசரமில்லாமல், மெதுவாக செய்ய ஆரம்பிக்க வேண்டியது.

நல்ல மாக்கல்கச்சட்டி அல்லது கசக்காத மலபார் வெங்கல உருளியை அலம்பி, அடுப்பில் வை. கச்சட்டியில், மஞ்சபொடி ஒரு பலம், மிளகுபொடி, உப்பு, இந்த மூன்றையும் போட்டு அரை சேர் சுத்த ஜலம் விடு. நன்ருக கொதித்து சுண்டும். ஒரு படி புளித்த மோரையும் அதில் கொட்டி விடு. அடிக்கொரு தடவை நன்ருக கிளறிவிடு. பொங்கி அடுப்பிலும் கீழேயும் விழாதவாறு கிளறி விடு. அரைப்படி மோரு குறுக வேண்டும். சாதாரணமாக 35 நிமிடங்களில் இறுகி விடும். உடனே அடுப்பிலிருந்து இறக்கி கருவப்பலையைப் போடு. நல்ல ஈயப்பாத்திரத்திலாவது, ஜாடியிலாவது கொட்டி, மூடி பத்திரமாக வைத்து விடு.

பிறகு தேவைக்கு தகுந்தாற்போல் குழம்பை ஜாடியிலிருந்து எடுத்து, கடுகும், கருவேப்பிலையும் எண்ணையை விட்டு தாளித்து அதில் கொட்டு. குழம்புக்கு





தகுந்தாற்போல் தேங்காயை துருவிக் கொண்டு, அதற்கு வேண்டிய பச்சை மிளகாயையும் எடுத்துக் கொண்டு, இரண்டையும் அம்மியில் வைத்து நன்ருக வெழுமூணுக அறைத்து எடுத்து, மேற்படி மோர் குழம்பில் போடு. நன்ருக ஆப்பையால் கிளறிவிடு. இப்பொழுது மேற்படி குறுக்கினகாளன் சந்தனம் போலும், மஞ்சள் நிறமாக, கண்ணுக்கு லக்ஷணமாக இருக்கும். ருசி ரொம்பவும் ஜாஸ்தி. இந்த மோர் குழம்பு பதினைந்து நாட்கள் வரை இருக்கும். இந்த குறுக்கின காளன் கூட்டானுக்கு கூர்க்கங் கிழங்கு மெழுக்கு பரட்டின உப்பேரியும், சேனைக்கிழங்கு மெழுக்கு பரட்டின உப்பேரியும் செய்து தொட்டுக்கலாம். இந்த மோர் குழம்பும், சேனை மெழுக்கு பரட்டின உப்பேரியும் பிரசவித்த ஸ்திரீ சாப்பிடலாம். பத்தியக்காரரும் சாப்பிடலாம். உப்பேரிகளும் கீழே எழுதியிருக்கிறேன்.

## கூர்க்கங் கிழங்கு மெழுக்கு பரட்டின உப்பேரி

இதற்கு "கூர்க்கங் கிழங்கு," உப்பு, நல்ல தேங்காயெண்ணை மட்டும் வேண்டும்.

கூர்க்கங் கிழங்கை நன்ருக அலம்பி, தோலை எடுத்து விடவும். பிறகு ஒரு நல்ல பாத்திரத்தில் ஜலம் விட்டு, கிழங்குகளை போட்டு, அடுப்பின் மேலேற்றி வேகவை. பாதி வெந்ததும் உப்புபோடு. உப்பு, தாண்களுக்கு தகுந்தவிதம் போடு. ஜலமும் குறுகி, கிழங்கும் உப்புடன் கலந்து நன்ருக வெந்து போகும். (வேக ஜலம் மட்டாக போதுமானதாக, சமமாக இருத்தல் அவசியம்) உடனே அடுப்பிலிருந்து இறக்கி விட்டு பாணலியை போடு. தேங்கா யெண்ணையும் நெய்யும் கலந்து சரி சமமாக பாணலியில் விடு. மேற்படி வெந்த கிழங்கை பாணலியில் போட்டு நன்ருக கரண்டியினுல் கிளறி விடவும். இந்த சமயத்தில் அடுப்பு தணிவாக எரிய வேண்டும். அதிகப்படியாக எரிய விடாதே. நன்ருக கிளறிக்கொண்டே யிருந்தால், கிழங்குகள் பதினைந்து நிமிடங்களில் செவ, செவ, என்று ஒரே தினுசாக பெரண்டு வரும். உடனே இறக்கி விடு. இலையை போட்டு குறுக்கின காளனையும், கூர்க்கங் கிழங்கு உப்பேரியையும் போட்டுக்கிண்டு சாப்பிட உட்கார்ந்தால் திருப்தியே ஆகாது. இந்த குறுக்கின காளனையும், கூர்க்கங் கிழங்கு மெழுக்கு பரட்டின உப்பேரியையும் தமிழ் நாட்டார் 100க்கு தொண்ணூற்ருன்பது பேர் விரும்புவார்கள். ஏதோ சாதாரணமாக நினைக்கலாம். செய்து சாப்பிட்டால் தெரியும். பிறகு சொல்லுவீர்கள்.

என் சிநேகிதி மிஸஸ். அம்மு கிருஷ்ணஸ்வாமி, "மத்தியானம் டிபன் வேண்டாம். எனக்கு குறுக்கின காளனும், கூர்க்கங் கிழங்கு மெழுக்குப்பேரியும் போதும்," என்று சொல்லி, "மத்தியான டிபன்" என்ற முறையில் ஒரு கை பார்த்து விடுவாள்.

## சேனைக்கிழங்கு மெழுக்குப் பரட்டின உப்பேரி

சேனைக்கிழங்கு மெழுக்குப் பரட்டின உப்பேரி செய்வதற்கு, நல்ல சேனைக் கிழங்கு, உப்பு, நல்ல நெய், மட்டும் போது மானது.

சேனைக்கிழங்கை, சதுரமாய் "சாக்லெட்" போல நறுக்கிக் கொள். அடுப்பில், கிழங்கு தாண்களுக்கு சரியான ஜலம் விட்டு, வேகவை. பாதி வெந்ததும் உப்பு போடு. ஜலம் குறுகி, உப்புசேர்ந்து, நன்ருக மை போல வெந்து விடும். உடனே அடுப்பிலிருந்து இறக்கிவிட்டு, பாணலியை வைத்து, நல்ல நெய்யை விட்டு, அதில் மேற்படி வெந்த கிழங்கு தாண்களை கொட்டி நன்ருக கிளறி விடு. அடுப்பு அதிகமாக எரிய கூடாது. தணிவாக எரிய வேண்டும். செவ, செவ, என்று பதினைந்து நிமிடங்களிலாகி விடும். இந்த உப்பேரி ரொம்ப ருசி ஜாஸ்தி. உடம்புக்கும் நல்லது. செய்வதும் சுலபம். தமிழ் நாட்டார் "ஹூம்! இதுக்கென்ன, உளுத்தம் பருப்பா, கடுகா, புளியா, முளகாயா, ஒன்று மில்லை, சப்பென்றிருக்கும்" என்று சொல்லக்கூடும். செய்து சாப்பிட்ட பின்பு அதன் ருசி தெரியும். நூற்றுக்கு நூறுபேர் விரும்பும் உப்பேரிகளில் இது ஒன்று. இதே முறையில் எல்லாத் தாண்களும் சேர்த்து, அல்லது தனித்தனியாகவும் உப்பேரி செய்யலாம். அது அதற்கு, நன்ருக வேகவைத்து, சரியாக உப்பு போட்டு, நிறைய எண்ணெய் அல்லது நெய் விட்டு, சிவக்க, பிரட்ட வேண்டும். அதுதான் ருசி.

## ஓளன்

"ஓளன்" என்ருல் "என்ன ஓலம்" என்று பரிகாசமாக புகல்பவர்கள் தமிழ் நாட்டார். செய்து சாப்பிட்டு சொட்டாங் கொட்டுவதும் அவர்களே.

"ஓளன்" செய்வதற்கு, பிஞ்சு பரங்கிக் கொட்டை, பூஷிணிகொட்டை, பிலாக் கொட்டை, தட்டப் பயிறு, தேங்காய் பால், கொஞ்சம் உப்பு, பச்சை தேங்காயெண்ணை இவ்வளவே தேவை.

பரங்கிக்கொட்டை, பூஷணிக் கொட்டை, இரண்டையும் ரூபாய் கனத்தில் தட்டையாக நறுக்கிக்கொள். பிலாக் கொட்டையை நன்ருக நசுக்கி, உரித்துப் போடு. தட்டப் பயிறை உரித்து மணியை எடுத்துக்கொள். அடுப்பில், தாணுக்குச் சரியாக, ஜலம்விட்டு, தாண்களைப்போட்டு, உப்பை போட்டுவிடு. நன்ருக வேகும். இரண்டொருதரம் கிளறிவிடு. அடுப்பிலேயே வெந்துகொண்டிருக்கட்டும். ஒரு மூடி தேங்காயை துருவி, அந்த பாலை பிழிந்து வெந்துகொண்டிருக்கும் தாண்களில் விட்டுவிடு. நான்கு டீஸ்பூன் பச்சை தேங்காயெண்ணெயை அதில் விட்டு நன்ருக கிளறிவிடு. அடுப்பிலிருந்து இறக்கிவிடாதே. ஆறிப்போய்விடும். இதைச் சூட்டுடன் உபயோகப்படுத்த வேண்டும். அதிகமாக ருசியாக இருக்கும். மலபாரில் எந்தக் கலியாணத்திலும், ஓளன் ஒரு அடுப்பில் சூட்டுடன் இருந்து கொண்டேயிருக்கும். ரொம்ப சுலபத்தில், விரைவில், ருசி மிகுந்ததாக செய்து சாப்பிட இதை விட எளியதானது கேரள சமையல்களிலே இல்லை.

## முளகூஷியம்

"முளகூஷியம்" செய்வதற்கு, பரங்கிக் கொட்டை, புடலங்காய், பூஷணிக்காய், நேந்திரங்காய், சிறு வாழைக்காய்கள், கொத்தவரங்காய், உருளைக்கிழங்கு, மற்றும் நமக்கு பிடித்தமான சகல பிஞ்சு கறிகாய்கள், பாவக்காய் தவிர்த்து போடலாம்.





உப்பு, மிளகு பொடி, தேங்கா யெண்ணை கருவப்பிலை இவை தேவை.

கறிகாய்களை, வில்லை, வில்லையாக நறுக்கிக்கொள். அடுப்பில் தாணுக்குமேல் ஜலம்விட்டு வேகவை. வெந்ததும் உப்பு, மிளகு, மஞ்சபொடி, போடு. நன்ருக வெந்ததும், தேங்காயெண்ணை நிறைய ஆறு டீஸ்பூன் விடலாம். கருவேப்பிலையையும் போடு. ஐந்து நிமிஷம் ஆனதும் சாப்பிட ஆரம்பிக்கலாம். முன் சொன்னபடி ஓளன் மாதிரி அடுப்பிலேயே வெந்து கொண்டு இருக்கவேண்டும். சூட்டுடன் உண்பது அதிக ருசி. பத்தியத்துக்கும் உபயோகப்படும். நல்ல ருசியும், தமிழ் நாட்டார் பெரிதும் விரும்பி சாப்பிடத் தக்கதுமானது முளகூஷியம்.

## கத்திரிப்பிஞ்சு சார்

"கத்திரிப்பிஞ்சு சாரை" தமிழ் நாட்டார் கத்திரி பிஞ்சு ரசம் என்று சொல்லுவார்கள். கத்திரிப்பிஞ்சில் சாதம், எண்ணைக்கத்தரிக்காய், முதலியவைகள் செய்யலாம்.

இதற்கு நல்ல கத்திரிப்பிஞ்சு, துவரம் பருப்பு, புளி, உப்பு, ரசப்பொடி, பெருங்காயம், பச்சை கொத்தமல்லி, கருவேப்பிலை, கொத்தமல்லி விரை (தனியா) மட்டும் போதுமானது.

துவரம் பருப்பு சற்று அதிகமாக போட்டு நன்ருக வேகவைத்து, எடுத்துக் கொள். ஒரு பாத்திரத்தில் ஜலம் போதுமானதை விட்டு, கத்திரிக்காயை அலம்பி போடு. புளியை கரைத்துக் கொட்டு. உப்பையும், மிளகாய் பொடியையும் போட்டு அடுப்பில்வை. கத்திரிப் பிஞ்சை பாவாடையுடன் நாலாகக் கீறி போட்டிருக்க வேண்டும். பிறகு பருப்பை அதில் போட்டு விளாவிவிடு. தாளித்துப் பெருங்காயம் பச்ச கொத்தமல்லி, இவைகளை போடு. உப்பு சற்று ஜாஸ்தியாக. புளிப்பு காரமும் சற்று ஜாஸ்தியாகவும் இருக்க வேண்டும். இல்லாவிடில் ரசம் சற்று சப்பென்றிருக்கும். இறக்குவதற்கு முன் கொஞ்சம் கொத்தமல்லி விரையை (தனியா) நெய்விட்டு வறுத்து, பொடி செய்து அதில் போட்டுவிட வேண்டியது. இந்த கத்திரிப் பிஞ்சு சார் வாசனையாக ருசியாக இருக்கும். இதே முறையில் சீமைத்தக்காளி ரசம் செய்யலாம். பருப்பு உருண்டை போட்டு ரசம் செய்யலாம். ருசி மிகுந்து நன்ருக இருக்கும்.

சுபம்!

# வாழ்க்கையின் ஏக்கம்

திரு. ஸி. சண்முகம்

இளவேனிற் காலம். அக்காலத்தை மன்மதன் களிக்கும் மாசிலாக் காலம் என்று சொல்வது பண்டையோர் மரபு. பூச்சொரிந்து மலர்வதும் அக்காலத்தில் தான். தென்றற் காற்று தெளிந்து இயங்குவது அக்காலமே. குயிலினங்கள் கூவி மகிழ்ந்திருப்பதும் அந்த காலத்தில் தான். காதலர்கள் இன்பம் நுகர அவாவிக் கரைவதும் அக்காலத்தில் தான்!

அத்தகைய வசந்த காலத்தில் ஒரு நாள் இரவு சுமார் மணி 11 இருக்கும். பூர்ண சந்திரன் வான் முகட்டின் நடுவில் நிற்க உலக ஜீவன்கள் பூநிலவில் 'சொக்கி' நித்திரை யின்பம் அனுபவித்துக் கொண்டிருந்தன. எவ்வுயிரும் வெளியில் காணப்படவில்லை. ஏகச் சக்ராதிபத்யம் நடாத்தும் ஏந்தல் ஒருவன் உறங்கும் தன் படையைக் காவல் கார்த்து நிற்பது போல் மதியம் ஒன்றுமே வானுச்சியில் காணப்பட்டது.

அவ்வேளையில் திருநெல்வேலியின் ஒரு விடுதியில், ஒரு வீட்டின் மேன்மாடியில் ஒரு ஆன்மா மட்டிலும் உறங்காது நரக லோகம் புகும் நிலையில் தவித்துக் கொண்டிருந்தது. அவ்வான்மா மிருகமல்ல, பக்ஷியுமல்ல; ஆனால் மிருகத்தினும் கேவலமாக மதிக்கப்படுகிறது. பக்ஷி போல் தொல்லைகளினூடு பறந்து திரிகின்றது. சமூகக்கட்டு என்னும் கொந்தளிக்கும் நீரில் தவழ்ந்து செல்கின்றது.

அப்படிப்பட்ட ஆன்மா எது? அது தான் ஒரு பெண். அவளுக்குத் தோற்ற அளவில் எத்தகைய குறைப்பாடும் இருக்கக்காணோம். நல்ல நிறம்; நல்ல உடலழகு; நல்ல தோற்றம்; நல்ல பருவம், ஆயினும் அகப்பொலி வற்றுக் காணப்பட்டாள். கண்களில் நீர் வடியாவிட்டாலும் அழுகை புரண்டுக் கொண்டிருந்தது. முகம் கனத்து நிலத்தை நோக்கிக்கொண்டிருந்தது. அவள் வலது கையை மடக்கி முழங்கையை தொடையில் ஊன்றி, விரலை கன்னத்தில் வைத்து ஆழ்ந்து யோசித்தவாறிருந்தாள். கரிய நீண்ட கூந்தல் தரையில் மோதிப் புரண்டு கொண்டிருந்தது. அவள் கணவனை யிழந்தக் கைம்பெண். 'விதவை' என்று யாவராலும் இகழப்படும் ஓர் அனாதைப்பெண்.

ஜனகம் என்ற அம்மங்கை இயற்கையிலேயே அழகி. எவ்வளவு நேரம் வருணித்தாலும் தீராது என்று சொல்லும் படியான அவ்வளவு அழகு. ஒவ்வொரு அங்கமும் தனித்தனியாக பிரத்தியோக ஜாக்கிரதையுடன் கடைந்தெடுக்கப் பட்டுப் பொருத்தி வைக்கப் பட்டதனால் ஏற்பட்ட ஒரு முழுமை அவள். அத்தகைய அழகிய வடிவத்தின் சுபாவமான கம்பீரம்; சோபை, ஒயில் ஆகிய வற்றிற்கு அழகூட்டி விளையாடினாள் இயற்கைத்தாய். ஜனகத்துக்கு அப்பொழுது வயது பதினேழு. பருவத்தின் மெருகு, அந்த விசேஷப் பிரகாசம் அவளைச் சூழ்ந்தது





போலவும் அவளிடமிருந்து பிறந்து நாற்புறமும் பரவுவது போலவு மிருந்தது. அவளை ஒரு தரம் பார்த்த வுடனேயே அவளுக்கும் மற்றப் பெண்களுக்கும் வித்தியாசம் இருக்கிறதென்று சொல்லிவிடலாம்.

சாதாரண மனித பாஷையில் ஜனகம் ஒரு விதவை, அதாவது மனிதனது சிந்தனை சக்தியில் சுழலும் வார்த்தைகள், மனிதனது சமூக அமைப்பில் ஏற்பட்ட அளவுகள், குறிப்புகள் முதலிய வற்றால் பேசும்போது கன்னி கழிந்தவுடன் தன் கணவனை இழந்தக் கைம்பெண்ணாகி விட்டாள். ஆகையால் ஹிந்துமத வியவகார ஒழுங்கின்படி அவளுக்கு இனி இந்த வாழ்வில் அலங்காரம், இன்பங்கள் ஒன்றும் கிடையாது. மற்றப் பெண்கள் சாதாரணமாக வாழ்க்கையில் காதலர்களுடன் கூடி மகிழும் இன்பம் அவளுக்கு கிடையாது. ஆனால் துன்பம் உண்டு. சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். அவனுடைய குளிர்ந்த கிரணங்கள் உலகைத் தழுவிக் கொண்டிருந்தது. அவளுடைய வாழ்க்கையில் ஏக்கம் வந்துக் குவிந்திருந்தன. ஜனகம் வெகு நேரம் வரையில் ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். காமன் தனியாக வீற்றிருந்த ஜனகத்தின் மீது பாணத்தைத் தொடுத்தான். அவளால் அந்த வெம்மையைத் தாங்காது, அவள் உள்ளம் தத்தளித்தது. நித்திரை வந்து அவள் கண்களைச் சொக்கியது.

இது நடந்து ஒரு மாதமாயிற்று. ஒரு நாள் ஜனகம் ஜன்னலருகில் நின்றுக் கொண்டிருந்தாள். ஆண்களும் பெண்களும், குழந்தைகளும், நீராடிப் புது வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு வீதியில் சென்று கொண்டிருந்தார்கள். ஜனகாவுக்கு அன்று என்ன பண்டிகை என்பது விளங்க வில்லை. பின்பு தாயின் உதவியால் அன்று தீபாவளி எனத்தெரிந்தாள். ஜனகத்தின் கண்கள் எதிர்வீட்டினுள் பாய்ந்தன. ஒரு பெண் தன் காதலனுடன் சந்தோஷமாகப் பேசி மகிழ்ந்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது விளையாட்டாக காதலன் தன் காதலியின் தாடையில் தட்டினான்; அவ்வளவுதான் அப்பெண் மிக முடுக்காக கட்டிலின் மேல் போய் படுத்துக் கொண்டாள். "சரஸா! சரஸா!!" வென அழைத்தான் காதலன். அவள் எழுந்திருந்து வரவில்லை. காதலன் அவளை இருகரங்களாலும் ஏந்திக்கொண்டு முத்தங்களால் அவளை சமாதானம் செய்தான். இருவரும் ஆலிங்கனத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களுடைய குழந்தை மழலைச் சொற்களால் அவர்களை ஏதோ கேட்டுக்கொண்டே ஓடி வந்தது. காதலர்கள் இருவரும் அக்குழந்தையை எடுத்து உச்சிமோந்து முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவினார்கள். இத்தகைய இன்ப சம்பவங்கள் ஜனகத்தின் எதிர் வீட்டில் நடந்தன.

அழகான ரூபத்தினாலும் முத்து முத்தான பேச்சுகளினாலும், புன்சிரிப்பினாலும், குறும்புப் பார்வையினாலும் இன்னும் பலவிதமான காதல் லீலைகளினாலும் வஸந்தா தன் காதலனுடன் பேசி மகிழ்ந்து முத்தமிட்டு ஆனந்த சாகரத்தில் தம்பதிகளிருவரும் ஆழ்ந்திருந்தார்கள். இவ்வின்பப்பேற்றைக் கண்ட ஜனகம் ஏதோ ஒரு மின்சாரம் போன்ற உணர்ச்சியால் தாக்

கப்பட்டாள். மேலும் அங்கு நிற்க மனமில்லாது உள்ளே ஓடி தன் படுக்கையில் படுத்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

அவள் விதவை யானாலும் சரி, அல்லது வேறு எந்தப்பெயரால் குறிக்கப்பட்டாலும் சரி, அவளுக்குரிய பருவகால உணர்ச்சிகளை யாரும் தடுத்து நிறுத்தி விட முடியாது என்று சொல்வது போலிருந்தது. அந்தக் காதல் சம்பவங்கள், அந்தக் காதல் சக்தி அவள் மீது தனது மந்திரக்கோலைச் சுழற்றி அற்புதங்களை அள்ளி வீசிக் கொண்டேயிருந்தது. கழுத்தில் கட்டிய தாலி இருந்தாலும் அறுந்தாலும், காலாகாலத்தில் ஏற்படும் பருவத்தின் சேரபையை யாராலும் தடுத்து விட முடியாது என்பது போல இருந்தது அந்தக் காதல் விளையாட்டு.

இளமங்கை தன் உள்ளத்தே இயற்கையாகத் தோன்றும் இன்ப ஊற்றை எவ்வளவு நாளைக்கு அடக்கியாள முடியும். பெரும்பாலோர் காதல் உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டு நடக்க இயலாது கற்பழிந்து வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டு எல்லோராலும் இகழப்பட்டுச் சாகின்றனர். சில மங்கைகள் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், பயந்தும், சமூகம் நம்மைப் புறக்கணிக்கும் என்பதற்கஞ்சியும், துர்நடத்தைக்குச் செல்லாது, மனதை அடக்கி, அதனால் பலவித மனோ வியாதிகளுக்குள்ளாகி அவஸ்தைப்பட்டு இறக்கின்றார்கள். லக்ஷக்கணக்கான இளமங்கைகள் இக்கதிக்குள்ளாகிச் சாகின்றார்கள். அந்தோ எவ்வளவு கொடுமை?

ஜனகத்திற்குக் காதல் ஏக்கம் வந்து பிடித்து அவளுயிரை மொண்டுக் கொண்டது. அந்த ஏக்கத்தால் துரும்புத் துரும்பாக இளைத்து வந்தாள்; மௌனமாக நடந்து, நடந்து நாளைக் கழித்துக் கொண்டிருந்தாள். அவள் விதவைதான். ஆனால் வயதிலோ இளமை. இன்ப வாழ்க்கையின் எல்லையைக்காண அவளுடைய இந்திரியங்கள் துடித்துடித்தன. அவளுடைய அங்கங்கள் ஒவ்வொன்றும் பதறின. "இனி அவள் கதி என்ன?" அவள் உலகில் நடைப்பிணத்திற் கொப்பாக வாழ விரும்பவில்லை. 'விதவை' என்று பலரும் இகழ சுதந்தர மில்லாத இந்து சமூகத்தில் அவள் வாழ விரும்பாமல், சிலநாளில் மண்ணுலகை விட்டு விண்ணுலகை யடைந்தாள். ஆனால் அவள் வாழ்வில் கண்டதென்ன? இன்பப்பேற்றை அனுபவிக்க வியலாத ஜனகம் மரணத்தைக் கண்டாள். இவளுடைய கதிக்கு யார் ஜவாப்தாரி?

———:o:———



# கற்பின் மாட்சி

ஸ்ரீமதி அன்னுள்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை யுண்டாகப் பெறின்"

—என்பது தமிழ் மறை.

ஆடவர் மாட்சி நிறையால் நிறைவுறு மாப்போல் அரிவையர் தம் அரிய மாட்சி கற்பெனுந் திண்மை பெறுதலாற் பீடுறும் பெற்றியுடைத்து. அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடியெனு நான்கும் ஆடவர் அணிகலனுமாகும்போல் மகளிர்தம் மாண் பெரு நன்கலம் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பேயாகும். (இந்நாற்பெரு நன் மலராற் நிகழ்வதே கற்பெனும் நற் கோவை) இந்நாற்பெரு நன்மணிகளோடு அன்பு, அருள், பொறுமை, அடக்கம், இன்சொல், ஈகை, இரக்கம் முதலிய நன் மக்கட் பண்புகளெனும் முத்துக்களையும் நிரல்படத் தொகுத்துவிடின் கருத்தின் கவின் மணங்கமழ திருவருட்செம்மை ஊனுவாய் உருப்புக்களினூடுந் திகழும். இதுவே பெண்மை. காண்பார் நேரிய காட்சியும், கருத்தும் கவருமியல்பினதாய், புல்லியோர்க்கும் புனித நல்லுணர்வு புகச் செய்வதாய், அகம்போற்புறமும் அமைதி ஒளிகான்று மிளிர்வது பெண்மை. இப் பெண்மையிற் பிறந்த பெருமிதச் செறிவே கற்பெனும் பொற்பு. அகம் புறம் ஆகிய இரண்டினும் இயற்கையாய்ப் படிந்துள்ள மாசினைக் கற்பினுற் கழுவித் தூய்மை நிலையுறுவித்து வாழ்தலே மக்கள் வாழ்வு. அகம், புறம் எனவே உளம், மொழி, மெய் ஆகிய கரணம் மூன்றுமாகின்றது. இம்மூன்றனுள்ளும் முழுத்தூய்மை மணங்கமழ்தலே கற்பின் முழுமைக் காட்சியாம். இவற்றுள் ஓரோவொன்று பெற்ருர் அவ்வம்மட்டிற் சிறந்தோரே. மேற் கூறிய மூன்று காரணங்களின் தொழில்களாவன கருதல், சொல்லுதல், செய்தல் என முத்திறத்தன. இம்முத்தொழிலும் ஒத்து நிகழ்தலே மேதகு சிறப்பிற்குரித்து. பெண்மையெனு மலரிற் பிறக்குமொரு மணமே கற்பெனக் (கழறலாம்) கருதற் பாற்று.

மெய்மைக் கற்பின் மேதகு சிறப்பியற் பான்மை இன்னணமாக இதுகாலை இச் சொல் எவ்வெப்பொருளோடு புணர்ந்து வழங்கப்படுகிறது என்பது பற்றியும் ஒரு சிறிதாராய்வாம்.

வன்சொலள், கொடிய நெஞ்சினள் ஆயினுமவள் கற்புநெறியிற்றிறம்பாதவள் என பல்லிடத்தும் கூறக் கேட்கின்ருேம். சிறியன மறந்தும் சிந்தியா செம்மை சேருளத்தின் திண்மைசால் கற்பின் பொற்புடை நம் பண்டைத் தமிழ்மாதர் இப்பொருளில்லா வெற்றுரை கேட்கவே நாணுவர். மலடி மைந்தனை யான் மணந்தேன் என்பன போன்ற தன்ருே இச்சொற்ருெடர்ப் பொருள். ஒன்றை மற்ருென்ருகக் கருதிய பிறழவுணர்வினுற் பிறந்த இழுக்காகு

மிது. வடவர் தமிழகம் புகுந்ததற் பின் நேர்ந்த திரிபு இது. 'பதிவிரதா தர்மம்' என்ற வடசொற்றொடரமைப்பினை நோக்கவே அவ்வுண்மை இனிது புலனாகும். அச்சொற்றொடர் பெண்மையுட்பிறங்கும் கற்பின் பல கூறுகளுள் ஒன்றாகிய கொழுநற்பேணல் (எதிர்மறையாகக் கூறின் பரத்தமை பயிலாமை) எனும் ஒரு பொருளையே உள்ளடக்கி (நிலவுவதாதல் காண்க) நிற்றல் காண்க. கற்பெனும் ஆழ்ந்து நுணுகி விழுமிய அருஞ்சொல்லின் பெரும் பொருள் யாவும் நாளடைவில் குறைந்து பதிவிரதாதர்மம் மட்டுமேதான் கற்பு, இருசொற்கும் பொருள் ஒன்றே (என்று எண்ணும் இரங்கத்தகுநிலைக்கு வந்து விட்டது நம் நாடு) என்ற கொள்கை நம் நாட்டில் இடம்பெறுவதாயிற்று. இக்குறுகிய பொருள்கொள்முறை நந்தமிழகத்துப் புகுந்தமையால் விளைந்த தீங்குகள் எண்ணில. மகள் ஒருத்தி தன்னை மணந்த மணாளனோடு மட்டுமே உடலுறவு வைத்துக் கொள்ளும் ஓர் ஒழுக்கியல் வரம்பினை உடைத்தாயிருப்பதற்குள்ளேயே பெண்மையினிலக்கணமனைத்தும் முற்றுப்பெற்று விட்டதாகக் கருதி விடுகின்றனள். எனவே இஃதொழிந்த பெண்மை நலன்கள் யாவும் பெறுதற்கியலாததாய் விடுகின்றது. தான் அடைதற்குரியன இன்னும் பலவுள என்னும் மெய்நிலையை உணருமறிவின்றி பெற்ற ஒன்றிற்குள்ளேயே யாவும் அடங்கிவிட்டதாகக் கருதிவிடுதல் வாழ்க்கைச் சீர்மையின் மேல் வளர்ச்சியைத் தகைவ (தடைசெய்வ) தாகவே (ஆகுமன்றோ?) முடியுமன்றோ?

பெற்றது சிறுக பெருமை பெரிதாகக் கருதிக் கலுழ்ந்துகொண்டிருக்க வேண்டுமென்பதன்றோது கருத்து. பெற்ற ஒன்றினை வைத்துக்கொண்டே பெறு யாவும் இப்பெற்றதிற்குள்ளேயே அடங்கிவிட்டதென நினைந்து விடுதலே பெரும் பேதைமைத்து. பெறுதற்கினியொன்றுதானுளதோ என்றாராய்ந்து தானும் பாராதமைவர் பலர்.

"கேளுங்கள் கொடுக்கப்படும்
தட்டுங்கள் திறக்கப்படும்"

எனும் விவிலிய நூற்கருத்தின்படி எதனையும் தேடினால்தானே அடைய முடியும். கரவொழுக்கம் ஒன்றும் இன்றிய காரணத்தானேயே கற்பின் நற்பாங்குகளனைத்தும் தம்பாற் கைவந்துவிட்டதாக தருக்கிக் களித்துவிடல் தகுவிலதோர் பெருந்தவறுவென்பதுவே எமது துணிபு. அறிவு நூலாராய்ச்சியால் எவற்றுள்ளும் மெய்ப்பொருள் காணுமறிவுடையாரனைவரது துணிபுமிதுவே. கரவொழுக்கமாவது பிற ஆடவர் இணைவிழைச்சி. விழைவாவது வேட்கை. அஃதான்றுவிருப்பம். அஃதெழுமிடம் உளம். போகம் நுகரவிழையும் உளமுடை உயிர்கள் எதிர்ப்பட்டவற்றுள் தனக்கினிதெனக் கருதுவதை உண்பதும் புணர்வதும் இயல்பே.

"போகமாருயிர் கண்டதை உண்பதும்
புணர்வதும் இயல்பே காண்"

(கைவல்யம்)

இத்தன்மை பொதுவாக ஐயறிவுயிர்களனைத்திற்கு முடன்பாடே. ஆனால் நாம் இங்கு ஐயறிவுடைய மாக்களினியற்கையொடு மாறுபடும் ஆறறிவுடை மக்களினத்திற்குச் சிறப்பாக உரிய ஒன்றையே பேசுகின்றனமாயினும் ஐயறிவே உடைய மக்களுடம்பு பெற்றாருமுளரெனு முண்மையைத் தொல்காப்பிய மரபிய சூத்திரங்களாலும் நினைவிற் பதித்துக் கோடலின்றியமையாது. அவையாவன :—

"மாவும் மாக்களும் ஐயறிவினவே
பிறவுமுளவே அக்கிளைப் பிறப்பே
மக்கள் தாமே ஆறறிவுயிரே
பிறவுமுளவே அக்கிளைப் பிறப்பே"

இவ்வழகிய அறிவுரைப்பொருள் நம்மகத்து ஓவாதுறையின் நாம் ஐயறிவினதாம் விலங்குத் தன்மையினின்று விடுபட்டு மக்களேயாகும் மேம்படு நிலைக்கு உயர்வோம் என்பது திண்ணம். அமைதித் தன்மையை இயல்பாகவுடைய பெண்மையிற்பிறங்கும் மெய்மைக் கற்புடைமகளிறை, அறிஞர்கள் ஆறறிவுடைய மக்களோடுமட்டுமேயன்றி தெய்வத்தோடு ஒப்பவைத்தும் புகழ்ந்தும் போற்றியுமுளார். அவற்றுளொன்றினை அடியில் தருகின்றோம்.

"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை"

பெண்மைசால் கற்பின் பெருமையே உருவாய்த் திகழ்ந்த நம் மங்கையர்க்கரசியாரைச் சேக்கிழார்பிரான் தெய்வமாகக் கொண்டு வழிபாடாற்றியபோழ்தெழுந்த திருமந்திரங்களே இச்சொற்றொடர்கள். இன்னணம் தெய்வமாகலும் வல்ல திருவருட்பெற்றமை கருதித்தான்போலும் நந்தம் பெருந்தகை வள்ளுவர் "பெண்ணிற் பெருந்தகை யாவுள?" எனும் வினாவால் எதுவுமே இல்லையென இயம்பிவிட்டதும் காண்க.

களவு - கற்பு எனும் கைக்கோளிரண்டினுள் முற்பட நின்ற களவு எனும் சொல்லைப்புணராது கற்பு எனும் இரண்டாஞ்சொல் (உளதாதல்) இன்மையின் களவின் வழித்தாதலே (சிறந்த) கற்பு ஆதல் காண்க.

"முற்படப்புணராத சொல் இன்மையின்
கற்பெனப்படுவது களவின் வழித்தே"

கற்புக் களவின் வழித்தென்றாது எனப்படுவதென்றதெதற்கோவெனின், களவின் வழி நிகழாதேயும் உண்டு உலகக் கற்பு. அஃது இத்துணைச் சிறப்பின்றென்றதற்குச் சொல்லப்பட்டது. எனவே இச்சூத்திரப்பொருள் களவினையும் கற்பினையும் தழீஇற்றென்பது (இறையனார் களவியலுரை) தொல்காப்பியக் கற்பியல் முதல் சூத்திரத்திற்குப் பொருள் கண்ட ஆசிரியர் நச்சினார்க்கினியர், இருமுதுகுரவரும் தலைமகனும் கற்பித்தவழி (அது கொண்டானிற் சிறந்த தெய்வமின்றென) ஒழுகுதல் கற்பாயிற்று என்பர். அம்முதற்சூத்திரத்தைக் கற்பிற்கெல்லாம் பொதுவிலக்கணம் கூறியதாகவும் துணிவர்.

கற்பு—மகளிர் நிறை. கற்புடைமை—ஒருமையுடைமை. பல்வழி சுழலுமியல்புடைய மனதினில் இயல்பாகப் படிந்துள்ள அவா—வெகுளி—மயக்கம் முதலிய மாசுகளைக் கல்வியாவாகிய அறிவெனுங் கருவியால் (துடைத்துக்) கல்விச் செவ்விய ஒருமை இன்ப வாழ்வுக்கு உரியதாக்குதலே கற்பொழுக்கமெனப்படும்.

கல்வியை அடிப்படையாகக் கொண்டு அதன் மூலம் பெறும் மெய்யுணர்வு வாயிலாக நிலைபெற்ற ஒருமையுணர்வின் ஒழுக்கமே கற்பொழுக்கம். மனதின் பல்வகைத் தொடர்பில் துன்பமும், ஒருமை புணர்வினில் இன்பமும் முகிழ்த்தலியல்பு.

அங்ஙனம் செவ்விய இன்பம் சிந்தையில் தேக்குமாறு செய்யவல்ல அறிவினை முதன் முதல் மகளிற் பெறல்வேண்டும். "அவ்வறிவுதானியாதோவெனில்,

"சென்றவிடத்தாற் செலவிடாதீது ஒரீஇ
நன்றின்பாலுய்ப்பதாமறிவு"

எனுந் தமிழ்மறை வாக்கால் நனிபுலனாகும். மகளிர் மனதினைத் தீயனவற்றுட் செல்லவிடாது நல்லன செய்யுமாறு தூண்டுவதே அறிவு. இவ்வறிவு பெற்றோர் தீயன மறந்தும் செய்திட ஒருப்படார். இதுவே ஒழுக்கம். இவ்வொழுக்கம் கல்வியைக் காரணமாகக் கொண்டே பெற்றதாகலின் கற்பொழுக்கமெனப்படுவதாயிற்று. தற்காலம் கல்வியிற் சிறந்தாற் பலரை ஒழுக்கத்திற்றிறம்பியோராகக் காண்கின்றோமேயெனின், அவர் கற்ற கல்வி கல்வியெனும் சொல்லின் பொருளினைக் கொண்டே கல்வியல்ல என்பதே துணிபு. கல்=பண்படுத்து. அதாவது அறியாமையை அகழ்ந்தெடுத்து உளப்புலத்தைப் பண்படுத்துதலே கல்வி. தீதினை ஒருவி நன்றின்பாலுய்க்கவல்ல அறிவினைத் தராத கல்வி கல்வியாகா என்பதே தேற்றம். நன்றின்பாலுய்க்குமொரு மெய்யறிவின் வழியொழுகும் ஒழுக்கமே கற்பொழுக்கம். நன்னெறி இன்னதென அறிவுணர்த்தியும் அதன்வழி நில்லார் கற்புடையராகார்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

இவ்வருமைத் திருக்குறளால் கற்றபின் கற்றதற்குத் தக ஒழுகாவிடின் அக்கல்வியாற் பெற்ற பயன் எதுவுமிலதாதலும் எதிர்மறை வகையால் இனிது துணியப்படும். கற்பதற்குரிய அறிவு நூற்களைக் கசடறக் கற்பின் கற்றதின் பயன் அதன் வழியொழுகலேயென்பது மனதில் பதிந்து விடும்.

"ஓதலிற் சிறந்தன்றொழுக்க முடைமை"

எனுமறிவுரையும் இங்ககத்திற் பதிக்கத் தகும்.

அநாதி அமல அன்புமயனாகிய அண்ணலும் இயற்கையெனுந் தண்ணருளன்னையொடொருமையுற்று நின்றே அகில புவன சராசரங்களையும் ஆக்கி அளித்து அழித்து மறைத்து உய்விப்பதாக அறிவு நூல் பகரும். அஃதொப்பவே சிற்றுயிரும் தம்மை மூடியுள்ள மலக்கறையைத் துமித்து இறை நீர்மையை எய்துதற்கெளிதாயமைந்துள்ள நெறிமையின் வகைமையே ஆண், பெண் ஆகிய இருபால் வேற்றுமைத் தோற்றமுமாமென்க. ஒன்றுமுதல் ஆறு ஈறாகப்பெற்ற அறிவுடை உயிர்த்தொகுதிகளும் இவ்விருபாற் பகுதியுடனேயே படைக்கப்பட்டுள. இன்னணமாய படைப்பின் அமைப்பினைப் பகுத்துணரு மாற்றானும் கற்பின்மாட்சியைக் காணக்கூடும்.

"ஊண் நடை எச்சம் உயிர்க்கெல்லாம்
வேறல்ல
நாண் உடைமை மாந்தர் சிறப்பு"

இருபால் பகுப்பின் நோக்கம் எச்ச உயிர்ப்பு என எவரும் இயம்பிவிடுவர். எல்லாவுயிர்க்கும் ஒன்றுபோலவே உடைய ஊன் உவப்பு முதலியனவே தான் ஆறுமறிவுமடைந்த மக்களது நோக்கமும் செயலுமாக இருப்பின் ஐயறிவிற்கப்பாற்பட்ட அறிவினை அடைந்ததாகக் கருத வழி





யில்லாது போய்விடும். போகவே "மாவு மாக்களும் ஐயறிவினவே" என்பதற்கிலக்காகிவிட நேரும். அதுபற்றியேதான் வள்ளுவப்பெருந்தகை நாணுடைமை மாந்தர் சிறப்பு எனவும், அந்நாண்தான் எத்தகையது எனின்,

"கருமத்தால் நாணுதல் நாண் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற"

என்றருளுவாராயினர் கருமம்—வினை. எவ்வித வினையைப்புரிதல் மக்கட்கு சிறப்பினைத் தரும் என்பதை அறிய அறிவு வேண்டும். அவ்வறிவையே முன்னர் "தீதொரீஇ நன்றின்பாலியப்பதறிவு" எனும் இலக்கணமாகக்கொண்டு கூறினர். இங்கு கூறிய அறிவே மெய்யுணர்வினை நல்குவிப்பதாகும். எல்லாவுயிர்க்கும் பொதுவாக உள்ள ஐம்புல உணர்வினை வேறுபடுத்திக் காட்டுதற்கே நம் அருள்நிலை அந்தணர்,

"ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர் விலாதவர்க்கு"

என அழகு திகழ அறைகின்றார். இது காறுங்கூறியவாற்றால் விலங்கொடு மக்களை வேறுபடுத்திக் கருத வைக்கின்ற இலங்கு நூல் கற்பதால், தீதொரீஇ நன்றின்பாலுய்க்கும் அறிவினைப்பெற்று அவ்வறிவின் முதிர்ச்சியாலாகின்ற மெய்யுணர்வு கைவரப் பெறுதலே கற்பு—அல்லது நிறையென்னும் செவ்விய தீந்தமிழ்ச் சொல்லின் மெய்ப்பொருளாதல் இனிது புலப்படும். கற்புநெறி கடைப்பிடித்தொழுகும் மகளிரின் குறிக்கோள் உள்ளமிரண்டொன்றுபடுவதாலுளதாமுயரிய உணர்வு சாலுவகையேயாம். இதனாலேயே கற்பெனும் சொற்கு ஒருமையுடைமை எனப்பொருள் கூறினேம். செவ்விய ஒருமையாற் சிறப்பதே திண்மைசால் கற்பு. பண்மை நெறி படர்ந்துழன்று திரியும் நெஞ்சம் யாங்ஙனம் ஒருமைப்பாடுறும்

"ஆசையெனும் பெருங்காற்றூடிலவம்
பஞ்செனவு
மனதலையுங் காலம் மோசம் வரும்"

இஃது மனமெனும் பெரிய மதயானையை உரன் எனும் தோட்டியால் ஒரு நிலைப்படுத்திய வித்தகப்பெரியார் திருவாக்கு. வாழ்க்கையின் பண்பும், பயனுமாகிய அன்பும் அறனையும் அடிப்படையாகக் கொண்டே செம்மை சேரொருமையைச் சேரல் இயலும். முதலாவது மடவரல் தன் மனமொழி மெய்மூன்றிலும் தூய்மை நிலவப் பயிறல்வேண்டும். நல்லன தவிர்ந்து அல்லன அணுவும் அணுகவொட்டாது காத்தல் வேண்டும். அகத்தில் அன்பின் பெருமித உணர்வே பிறங்க வேண்டும். அன்பகத்தில் பிறந்து வெளியாகும் செயல்களனைத்தும் அறவினையாகவே இருக்க இயலும். சொற்களனைத்தும் பிறர்க்கு ஊறுவிளைவியா பெருந்தகை நலஞ்செறியும் இனிய மெல்லிய நல்லனவாகவே இருக்கும்.

பெண்மையின் மேதகு சிறப்பு அனைத்தும் பிறங்கித் திகழ்வது ஒருமை நிலையிலேயாகும். அவ்வொருமையுணர்வின் மறு பெயரே கற்பு எனப்படும். அப்பண்பு மகளிரின் தலைசிறந்த உரிமையாய் நிலவுதல் இயல்பிற்றாதலின் "ஒருமை மகளிரே போல" என உவமை நலத்திற்கெடுத்தாளவும் படலாயிற்று. எனின் மகளிர் தம் மாண்புடை ஒருமை நிலையின் உயர்வினை என்னென்பேம். மாந்தரும் மக

ளிரைப்போல் பெருமையினுறையுளாய்ப் பிறங்கவேண்டுமெனின் மகளிர்பால் மன்னும் ஒருநிலைத் திட்பம் எனும் உயர்வைத் தாமும் பின்பற்றி ஒழுகின் மகளிர்க்குரிய பெருமை ஆடவர்க்குமுண்டு எனவும், அன்றேல் இன்று எனவும் எத்துணை அழகு பெற இயம்புகின்றார் நம் தமிழ்மறை நாயனார் என்பதைப் பார்ப்போம்.

> "ஒருமை மகளிரே போல பெருமையும்
> தன்னைத் தான் கொண்டொழுகின்
> உண்டு"

இவ்வருமைத் திருக்குறட்பாவினுள் மகளிர்தம் இயற்கைத் தனிமாட்சி யனைத்தும் ஒருங்குதொகுத்து வைக்கப்பட்டுள்ளதென்பது எமது கருத்து. இம்மகளிர் மாட்சிப் பேழையைப் பரிமேலழகியர் உரையெனும் சாவி கொண்டு திறந்து அதனுளடங்கியுள்ள அரும்பொருளினை நுகர்வோம். பரிமேலழகமாவது :—

கவராத மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டு ஒழுகுமாறுபோல பெருமைக் குணமும் ஒருவன் நிறையின் வழுவாமல் தன்னைத் தான் காத்துக்கொண்டொழுகுவானாயின் அவன்கண் உண்டாம். இதனால் ஆடவரும் மகளியர்க்கியல்பாகவுடைய பெருமை பெற விரும்புவாராயின் மகளிரைப் போலத்தாமும் தம்மைத் தாம் காத்து ஒழுகலில் (உடையாராயின்) பெறலாம் என்பது பெற்றாம். பெறவே நிறையுடைமை மகளிரளவு மாத்தரியல்பிலின்மை "ஒழுகின் உண்டு" எனும் சொற்போக்கின் குறிப்பானுணரப்படும். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று முன்னர் வெளிப்படையாகக் கூறிவிட்டமையின் ஈண்டு குறிப்பாலுணர்த்துதலே போதுவதாயிற்று.

ஆகவே பெண்ணின் பெருமை கற்பெனுந் திண்மையுடையராகப் பெறுதலுளடங்கி நிற்றல்போலவே, ஆடவர்தம் அரியமாட்சியும் நிறையெனும் நீர்மையுளடங்கி நிற்றல் காண்குதும். அவ்விதம் நிறையால் திட்பமுற்ற நெஞ்சகம் இரண்டு (ஒன்று மற்றொன்றனைப் பல்லாற்றானும் கவர்ந்து தன்வசமாக்கி விடுதலே நிறையின் நிலைபேற்றினறிகுறியாகும்) ஒன்றுபட்டொழுகுதலே செவ்விய நல்வாழ்வு. இங்ஙனம் நிறைதிறம்பா நீர்மையிலென்றும் ஒன்றுபட்டு ஒருவனும் ஒருத்தியும் பேரின்பப் பேறுபெறுதற்கு அடிப்படையாக நம் பண்டை மூதறிஞர் கண்ட இயற்கை அறச்செந்நெறிச் செல்வமே களவியல் அல்லது காதல் என்பது. இது போழ்து நம் அருமைத் தமிழகம் அவ்வியற்கை அறநெறியைக் கைவிட்டுத் தவிக்கின்றது. களவியல் வழிபற்றிப்பெறும் அசையாத் திண்ணிய அன்பு கற்புடைமை அரிதாகி, சிறையினாற் காக்கும் சிறுமைக் கற்பினையே செந்நெறியெனச் சேர்வதாயிற்று. புதுவர் புகுந்த பின்னர் விளைந்த தீமை இது.

ஒளவையார், ஆண்டாள், மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் முதலிய கடவுற்கற்புடை அந்தணிகளின் வழிப்பிறந்த நாம் இற்றைநாள் அவர்களின் மாட்சியும் நோக்கமும் ஒருமைக் காதலுணர்வும் இத்தகையது என்று உணர்தற்குத் தானும் போதிய அறிவு யிலராய் இருத்தல் எத்துணை இழிவுடைத்தென்பதனை இனியேனும் சிந்தித்து அவர்களதும், அவர்களைப் பற்றியுள்ளதும் ஆகிய





அருள்நூற்களைப் பயின்றுணர்ந்தொழுகி உய்திபெறுவோமாக.

"கற்பெனப்படுவது களவின் வழித்தே" யாமாகலின் கற்பகத்தின் பிறப்பகமாகிய களவியல், இன்ப இயல்த் துறையின் பெருமையையும் பயனையும் உற்றுணர்ந்து கற்றுத் தெரிந்து ஒழுகாக் காரணத்தாலேயே நம் நாடு நிறைகாக்கும் காப்பாகிய திண்ணிய அறநெறியின் சீர்மைசால் திகழொளி குன்றி, சிறையாற் காக்கப்பெறுவதே 'கற்பு' என்னும் இழிந்த புல்லிய குறுகிய கொள்கைக்குறைவிடமாயிற்று. பெண்மையின் உயிர்ப்பண்பாகிய 'நிறை' யெனும் செல்வம் அன்பு, அருள், அறிவு அனைய தெய்வீகப்பண்புகளால் நிலைபெறவேண்டியிருக்க அச்சம் காரணமாகவும் கட்டுப்பாட்டின் காரணமாகவும் நிலைபெறுத்தவேண்டிய ஒன்றாக நிகழ்வது மிகக்கொடுமை. இக்கொடுமைக்கு மூலகாரணமாவது நம் சிறுவர் சிறுமியர்க்கு செந்தமிழறிவு நூற்கல்வியினை செவ்விய முறையிற்பயிற்றுவித்து அவ்வழி கடைப்பிடித்தொழுகலே இணையற்ற இன்பமும் புகழும் நல்கும் வாழ்க்கை என உணரும் அறிவினை ஊட்டாதிருப்பதேயாகும். எதிரும் தமிழகத்தையேனும் (அன்புக் கற்பின் அருட்பான்மை சிறக்கவும், அறத்தான் வருவதே யின்பம், எனும் திருமறையின் செவ்வி தேரவும் உரியதான தகுதியுடையதாக்க வேண்டுவது நமது கடன்) இன்ப அன்பின் இயற்கை அறநெறிக் கற்பும் நிறையும் கலந்து களிநடம் புரியும் கழகமாகக் காணமுயலவேண்டுவது நமது தலைமைசால் கடமையாகும். நமது நன்முயற்சி செவ்விதின் நிறைவு பெற அன்பறிவின்ப அமைதியாய் யாண்டும் நீக்கமற நிறைந்து நிலவும் செம்பொருள் இறைதன் திருவருள்புரியுமென்பது திண்ணம்.



# இன்புளூயன்ஸா

திரு. டி. கே. கோவிந்தய்யர்

"இன்புளூயன்ஸா" என்ற ஜுரத்துக்கு தமிழில் வாத-கப-ஜ்வரம் என்றும், சாஸ்த்ரீய பரிபாஷைப்படி வாத-பலாஸகம் என்றும் சிலேஷ்ம ஜ்வரம் என்றும் சாதாரணமாக கூறப்படும். வாதம், கபம் என்கிற தாதுக்களை, விசேஷமாக கபத்தின் ஒருவிதமான தாக்குதலால் கோளாறு உண்டாகி, அதனால் அவ்விரு தாதுக்களும் விகாரமடைந்த நிலைமையிற் சரீரமெங்கும் பரவி வாதகபஜ்வரம் என்கிற சிலேஷ்மம் மிக்க அதிகரிப்பதை உத்தேசித்தே இதை சிலேஷ்மஜ்வரம் என்றும் கூறப்படுகிறது. இந்த வியாதியில் நரம்பைப்பற்றிய கோளாறுகளும், உபத்திரவங்களும் காண்பதை யறிந்தும், சிலேஷ்ம சம்பந்தமானவைகள் முக்கியமாக தோன்றுவதைக் கருதியும் இந்த வியாதியை வாத-கப-ஜ்வரம் என்றும் கூறப்படுகிறது.

## பழமையானது!


"இன்புளூயன்ஸா" ஜ்வரம் மற்ற ஜ்வரங்களைப்போலவே பழமையானது. ஆங்கிலத்தில் இதைப்பற்றிச் சிறிது காலம் முன்பு, முக்கியமாக சென்ற மஹாயுத்தத்திற்குப் பிறகு பெரிதும் வழங்கி வந்ததேயாயினும், பண்டைக்கால முதலே வேறு பல பெயர்களால் இந்த ஜ்வரம் விவரிக்கப்பட்டு மனித ஸமூஹத்துக்கு மட்டில்லாத துன்பம் இழைத்து வந்திருக்கிறது. ஜலதோஷத்துடன் ஒரு விதமான மந்த ஜ்வரம் கண்டு முற்காலங்களில் வருந்தியவர்களுக்கு உண்மையில் இன்ப்ளூயன்ஸாவே என்று கூறலாம்.

## தோன்றும் வகை


"இன்ப்ளூயன்ஸா" என்னும் வாத கபஜ்வரம் வெகு கடுமையான கப தோஷத்தின் விருத்தியினால் உண்டாகும் ஒரு ஒட்டுவாரொட்டி. இதன் லக்ஷணங்களின் தீவிரத் தன்மைகளைக் கொண்டு சர்வ சாதாரணமான ஜலதோஷத்தினும் இது வேறுபட்டதென்பதைத் தெரிந்து கொள்ளலாம். இது திடீரென்று தோன்றும். பலரை ஒருமிக்கதாக்கக் கூடியது. இந்த ஜ்வரத்தின் லக்ஷணங்கள் பலருக்கும் கவலை தரக்கூடிய வகையில் அதி உக்கிரமாக உண்டான போதிலும் பிராணாபத்து உண்டு பண்ணுவது அரிதேயாகும். ஆனால் மிகக்ஷீணித்து, துர்பல மடைந்தவர்களும் அதிகமாக விருத்தர்களும் எளிதில் இதற்கு ஆளாவதும், முக்கியமாக அதற்கு இரையாவதும் சாதாரணம்.

இன்ப்ளூயன்ஸா ஜ்வரம் மனிதரது சக்தியை சீரழிப்பதில் மிக்க பெயர் போனது. இது மனித சரீரத்து சிறிது வேரூன்றியவுடனே, தொண்டை, மூக்கு, முதலிய அவயவங்கள் அனுபவிக்கும் சொல்லொண்ணா துன்பத்தை மற்ற சகோதர





அகில மஹாராஷ்டிர தேகப்பயிற்சி மகாநாட்டில் யுவதிகள் 'உடல் வனப்பு' ட்ரில் செய்யும் காட்சி.



அகில மஹாராஷ்டிர தேகப்பயிற்சி மஹாநாடு
பலபாகங்களிலிருந்து வந்திருந்த யுவதிகள் 'லாஸிம் ட்ரில்'
(Lazim drill) செய்யும் காட்சி.





அவயவங்களும் அனுதாபம் கொண்டு பகிர்ந்து அனுபவிப்பது போல் மார்பும், சிரசும், முதுகும், இடுப்பும், கைகால்களும் தாங்க முடியாத கடுகடுப்பும் வலியும் கொண்டு தாங்கொண்ணு துன்பத்தை அடைய ஏதுவாகிறது.

இந்த ஜ்வரம் ஆரம்பிக்கையில் மந்தமான குளிர் (சீத பாதை) உண்டாகும். தலை பாரமும், புருவங்களுக்கு அருகில் தாங்கமுடியாத வேதனையும், மிகுதியாகத் தோன்றும். தேகம் மிகவும் சோர்வடையும். பசி பெரிதும் மந்தப்பட்டு பசியேயிருக்காது. மூக்கிலிருந்து நீர் (மூக்குச் சளி) ஜலத்தைப்போன்று வடிந்த வாறிருக்கும். தும்மலும், தொண்டையில் கரகரப்பும், வலியும் காணும். இருமலுடன் மார்பு வலியும் ஏற்படும்.

## கடுமையான உபத்திரவங்கள்

தொண்டை, மூக்கு, முதலிய அவயவங்களின் அழற்சியும், கைகால்களில் மிகவும் கடுமையான கடு கடுப்பு வலியும் ஏற்பட்டு மிக உபத்திரவிக்கும். இந்த ஜ்வரத்தின் கடுமையான உபத்திரவ அபாயக்குறி கடுப்புவலி அதிகமாவது தான் எனச்சிலர் கருதுகிறார்கள். அது தவறுதலாகும். கலவரப் படுவதற்கான அபாயக் குறிகள், மந்தஜ்வரமானது விடாது தொடர்ந்தடிக்கும். மார்புக்குள் வீக்கம் தோன்றி மிக வருத்தும். சரீரமெல்லாம் திமிர்த்திருக்கும். கபம் அதிவிருத்தியாய் விடும். இது தான் அபாயக்குறி. "நித்யம் மந்த ஜ்வரோ வக்ஷ்ச்சூ நகஸ்தே நஸீததி, ஸ்தப்த தாங்கச் ச்லேஷ்ம பூயிஷ்டோ நரோவாத பலாஸகீ" என்ற சுலோகம் அதை நன்கு விளக்குகிறது. மேலும் அபாயக்குறி பற்றி "பிரலிம்பந நிவ காத ராணி கர்மேணகௌர வேணச மந்தஜ்வரவிலே பீசஸசிதஸ் ஸ்தாயத் பிரலேபக" அதாவது தாங்கமுடியாத தலைபாரத்தினாலும், வியர்வையாலும் அவயவங்கள் வியாபிக்கப்பட்டுக் கசிவடைந்தும், மந்தஜ்வரம் தொடர்ந்து வருத்தியும், குளிர் நடுக்கம் அடிக்கடி ஏற்படுவதும் என்று கூறப்பட்டிருக்கிறபடியால், இவ்வித அபாயங்களுக்கிடங் கொடாது, ஜலதோஷம் ஆரம்ப காலத்திலேயே அலக்ஷியம் செய்யாது தகுந்த பரிகாரங்களினால் அதற்கு உடனே சிகித்சை செய்து கொள்வதும், பலஹீனமான தேக நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ள ஏற்ற ஔஷதாதிகளாலும், தேஹப்பயிற்சி முறைகளாலும் ஸாத்யமான வரையில் செய்து கொள்ள வேண்டுவ தவசியமாகும்.

இந்த ஜ்வரம், பலநாட்கள் அல்லது பல வாரங்கள் கூடத் தொடர்ந்து தொந்தரவளிக்கும். அர்புதமாக மூன்று நாட்களிருந்து தானே நிவ்ருத்தி யடைவதுமுண்டு. தகுந்த சிகித்சையினால் ஜ்வரம் நின்று விட்டால் கூட, தேகம் பலம் பெறுவிட்டால் மீண்டும் திரும்பிக் கொள்வது முண்டு. ஆகவே பலத்துக்காக, ஔஷதமும், தேகப் பயிற்சியும் செய்வது நலம்.

## சுலப சிகித்சை

இன்ப்ளுயன்ஸா ஜ்வரம் கண்ட நோயாளியை, வாயுவும், தரை ஈரமுமில்லாத ஓர் இடத்தில் படுத்திருக்கச் செய்ய வேண்டும். சுத்தவாயு அவசியமானாலும், பெருங்காற்று நோயாளியின் முகத்திலோ, சரீரத்திலோ படும்படி விடக்கூடாது. முதலில் கபதோஷத்தையும், ஆமதோஷத்தையும் வெளிப்படுத்த முயலுவதே

முக்கியமாகச் செய்ய வேண்டிய சிகித்ஸை. உஷ்ண ஜலம் பருகுவது இந்த ஜ்வரத்தில் சர்வ சாதாரணமாகக் குணம் தருவதாகத் தெரிந்து கொண்டிருக்கலாம். வாத-கப-ஜ்வரத்திற்கு உஷ்ண ஜலபானம் பருகுவது மிகச் சிரேஷ்டமானதென்று வியக்தமாக வாக்படர் கூறுகிறார். தாங்கக் கூடிய உஷ்ணத்தில் ஜலத்தை அடிக்கடி பருகுவதால் உறைந்துள்ள கபமானது கரைந்துவிடும். நாவரட்சி நிவர்த்தியாவதோடு தொண்டை முதலியவற்றில் வாத கபங்களால் ஏற்பட்டவலி வீக்கம் முதலியவைகளுக்கும் உபசாந்தி ஏற்படும். ஜடராக்கினியும் அதனால் சந்தீபநமாகும். மேலும் நொச்சித்தழை சேர்த்துக் காய்ச்சிய நல்ல சூடான ஜலத்தில் நல்ல தூய வெள்ளைத்துணியைத் தோய்த்து தலையிலும், மூக்கின்மேலும், தொண்டையின் மேலும், மார்பிலும் ஒத்தடம் இடுவது சிரேஷ்டமானது. அதே உஷ்ண ஜலத்தை ஒரு வாயகன்ற பாத்திரத்தில் விட்டு, நோயாளியை நாற்காலியிலோ, அல்லது சிறிது உயரமான ஆஸனத்தில் அல்லது படுக்கையில் சௌகரியமாய் இருக்கச் செய்து அவன் பாதங்களை அவ்வுஷ்ண நீரில் சில நேரம் நீட்டிக்கொண்டிருக்கச் செய்வதாலும் சீதபாதை முதலியன தணிவடையும். இன்ப்ளுயன்ஸா ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்ட நோயாளி எக்காரணம் கொண்டும் அதைரியமடையக் கூடாது. தைரியத்துடன் இருக்கவேண்டும். நோயாளி கலவரப்படும்படி மற்றவர்கள் வார்த்தையாடுதல் கூடாது. எப்பொழுது பார்த்தாலும் நோயாளியின் உறவினர்கள் நோயாளியுடன் பேசிக்கொண்டும், அவன் எதிரில் வருந்துவதும், அழுவதும், நெருங்கியிருப்பதும் மகா கெடுதலானது. அதனால் நோய் அதிகரித்து ஆபத்தாக முடியும். நோயாளியிடம் கூட்டம் போடுதல் கூடாது. அவனுக்கு வேண்டிய சிகித்ஸை செய்பவர்கள் தைரியசாலியாயும், நோயாளிக்கு தைரியம் சொல்பவர்களாயுமிருத்தல் அவசியம்.

ஏனென்றால் நோயால் இறப்பதைவிட அதைர்யத்தால் இறப்பவர்கள் அதிகமாகும். ஜஸ்டிஸ் ஸ்டீபன், டாக்டர் பேக்கர், ஸர். ஆஸ்பீலிகூப்பர் முதலியோர் "நோய் மிகுந்து மரிப்பதை விட அதைர்யத்தால் கலவரப்பட்டு இறப்பவர் அதிகம்" எனக் கூறியுள்ளார்கள். இதை முன்னிட்டே, மகாத்மா காந்திஜியும் "நோயாளி தைர்யமாயிருக்கவேண்டும். மற்றவர்கள் அவனை தைரியப்படுத்தவேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

## வாய் கொப்பளிக்க ஒரு ஔஷதம்

இந்த ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்ட நோயாளி, கீழே விவரித்துள்ளபடி வாய் கொப்பளித்தல் குணம் தரக்கூடியது. கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய், இவற்றை சம எடையாக இடித்து, அச்சூர்ணத்தை இரண்டு பலம் எடுத்து, இரண்டு அல்லது மூன்று ஆழாக்குக் கொதிக்கும் ஜலத்தில் சேர்த்துச் சிறிது நேரம் மூடி வைத்து வடிகட்டி அதில் சிறிது தேன் கூட்டி அதனால் வாயைத் தொண்டையிலும் படும்படி கொப்புளித்து அலம்பலாம். இந்தப்படி தினம் ஒன்றுக்கு இரண்டு மூன்று முறை செய்யலாம். அதினால் நன்மையுண்டு.





## மிகப் பிரஸித்தி பெற்ற விசேஷ ஔஷதங்கள்.

இன்ப்ளுயன்ஸா ஜுரத்தை கண்டிப்பதற்கு டாக்டர் கே. என். கேஸரி அவர்களது மிகப்பிரஸித்தி பெற்ற கேசரி குடீரத்தில் அர்க்கா (Arka) என்ற மருந்துளது. அதன் அபார குணம் அனுபோகஸ்தர்கள் அறிந்ததே. அர்க்கா எத்தகைய கடுமையான இன்ப்ளுயன்ஸாவையும் குணப்படுத்துகிறது. மற்றொரு மருந்து அமிருதா (Amrita) ரத்தத்தைச் சுத்தி செய்து பலத்தை விருத்தித்து திடகாத்திரமளிக்கக் கூடியது. இம்மருந்துகள் கேரளத்தில் உள்ள அரும் பெரும் மூலிகைகளினால் செய்யப் படுவதால் அபாரகுணம் வாய்ந்திருக்கின்றன. நம் கரிசல் நிலத்திலும், உவர் பூமியிலும் கிடைக்கக்கூடிய மூலிகைகளைவிட மலையாள தேசத்தில் அகப்படக் கூடிய வன மூலிகைகள் சிரேஷ்டமானதும் அபார குணமளிப்பதுமாகும் என்று நீங்கள் யாவரும் அறிந்திருப்பீர்கள்.

## ஆகாரம்

இன்ப்ளுயன்ஸா ஜுரத்தினால் பீடித்துள்ள பிணியாளிக்கு லாஜமண்டமும், யவமந்தமும் ஏற்ற உணவுகளாகும். இவ்விரண்டில் ஒன்றோ, இரண்டோ, மாற்றி மாற்றி யாவது அடிக்கடி, உட்கொள்ளுதல் சிறந்தது.

## லாஜமண்டம்

நெற்பொரி தேவையான அளவு எடுத்து மூன்று மடங்கு ஜலம் சேர்த்துச் சமையல் செய்யக் கூழ்மாதிரி பக்குவ நிலைமைக்கு வரும். பிறகு இறக்கிச் சிறிது பாலும் சக்கரையும் கூட்டிக் கொள்ளவும்.

## யவமந்தம்

வாற்கோதுமையை உடைத்து ஒன்றுக்கு 4 பங்கு ஜலம் சேர்த்துக் கிளறிக் கொண்டே சமையல் செய். குழம்பாக பக்குவமானபின், சிறிது பனங்கற்கண்டாவது சர்க்கரையாவது அவசியமானால் சிறிது பால் கூட்டிக்கொள்ளவும். வெறும் பால் மட்டும் உபயோகிக்கக்கூடாது, சிலேஷ்மத்தை அது அதிகரிக்கும். திராக்ஷை, கமலா, கிச்சிலிபழங்கள் உட்கொள்ளலாம்.

## பிறகு சிகித்ஸை

இந்த ஜ்வரத்தினால் கடுமையாக வருந்தியவர், நிவர்த்தியானவுடன் அதிக துர்ப்பலமடைவது சகஜம். அந்த நிலைமையில் தேகத்தைப் பலப் படுத்தாவிடில் மீண்டும் அந்த ஜ்வரம் பற்ற நேரிட்டாலும் நேரிடும். ஆகவே, புஷ்டி தரக்கூடிய ஆகாரங்களையும், அமிருதாவையும், உபயோகிப்பதும், அதிக ஆயாச முண்டு பண்ணாத தேகப் பயிற்சியும் ஆரோக்கியத்தை செய்து நல்ல புதிய பலமும், உற்சாகமும், உண்டாக்கும்.

# மாங்கல்யத்தின் மகத்துவம்

"கோன்"

மாங்கல்ய மென்பது மணம் கொண்ட மங்கையர் சாடுடன் சேர்த்து அணிந்து கொண்டிருக்கும் ஓர் மங்கல அணியாம். "நாணுள்ளிட்டுச் சுடர்வீசு நன் மாணிக்க நகு தாலி" எனப்புகன்றார் திருத்தக்கதேவர். மகளிர் எத்துணை அழகுடன் பொலிந்து விளங்கினும் மங்கல நாண் இல்லையாயின் அவையனைத்தும் பயன்படா. கம்பர் அயோத்திமா நகரின் அழகினை வருணிக்கு மிடத்து "நிலமகள் முகமோ திலகமோ, கண்ணோ நிறைநெடு மங்கல நாணோ" என்று கூறியுள்ளார். "தந்திகளில்லா வீணை தாலியில்லா மங்கை போலாம்" என்று ஒரு உத்தம பெரியார் உவமித்துக் கூறியுள்ளார். தாலிகட்டும் வழக்கம் தமிழ் நாட்டில் அந்தணர் முதல் ஆதி திராவிடர் வரையில் பலவாறாக அநுஷ்டிக்கப்பட்டு வருதல் யாவரும் அறிந்ததே. இவ்வழக்கம் சற்றேறக் குறைய 2000 வருடங்களாகத் தமிழ் நாட்டில் நிலவி வருகின்றது என்பது இளங்கோ வடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் மனையறம் படுத்த காதையில்

> "நறுமலர்க் கோதை நின் நலம்பா ராட்டுநர்
> மறுவின் மங்கலணியே யன்றியும்
> பிறிதணி யணியப் பெற்றதை யெவன்
> கொல்"

என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது "நல்ல மணமுள்ள புஷ்பங்களாலான மாலையை அணிந்து கொண்டிருக்கும் ஆரணங்கே! உன்னை அலங்கரிப்பவர் தூயமான மங்கல அணியாகிய மாங்கல்யமிருக்க வேறு சில அணிகளை புனைந்ததாலே அடையும் பயன்யாது?" என்பதாகும். இதனால் மாங்கல்யம் அணிதல் மக்களால் தொன்று தொட்டு கைக்கொள்ளப்பட்ட வழக்க மென்று அறிய முடிகிறது. சாதாரணமாக வனப்பு வாய்ந்த மகளிருக்கு ஆபரணங்கள் அவசியமில்லையே; மாங்கல்யத்தை மட்டும் ஏன் அணிந்து கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு கேள்வி கேட்கலாம். இயற்கை வனப்புடையாளுக்கு வேறு அழகு தேவையில்லை. அவளுக்கு செயற்கை அழகாகிய ஆபரணங்கள் அணிந்து அழகு படுத்திக் கொள்வது அவளது அழகினை குன்றச் செய்யுமே யன்றி பொலிவுறாது. மங்கல அணியான மாங்கல்யம் அவ்வாறன்று. அவளது அழகை பொலிவுறச் செய்வதற்காக அணியப்பட்ட ஆபரணமுமன்று. அது மங்கல நன்னாளன்று தூய அன்பின் அறிகுறியாக காதலனால் கழுத்தில் கட்டப்பட்டதாகும். அது அவளுடைய பரிசுத்தமான கற்பினையும் காதலனிடம் (புருஷனிடம்) அவளுக்குள்ள காதலை காக்கும் காப்புத்தாலியே யாகும். இதனால் மாங்கல்யமணிதல் மக்களால் தொன்று தொட்டு கைக்கொள்ளப்பட்ட வழக்கம் என்று அறிகிறோம்.

## ஆராய்ச்சி

பண்டைத் தமிழ் நாட்டிலே தமிழ் மக்கள் குறிஞ்சி நிலத்திலே வசித்து, வேட்டையாடி ஜீவித்து வந்தனர். அவர்க





ளுடைய வாழ்க்கையில் சமூக உணர்ச்சி இல்லை. கண்டதும் காதல் கூர்வதும், உடன் மணப்பதும் வெகு சகஜமாக இருந்தது. வெகு காலத்திற்குப் பின்பே மணந்த ஸ்திரீ-புருஷர்கள் தங்களுடைய மணத்தை பகிரங்கமாக்கி ஊர் விருந்து அளிப்பாராயினர். மண விருந்துக்கு முன்பேயே காதல் கொண்ட இளைஞர்கள் தங்கள் காதலிகளோடு ஆடிப்பாடி, ஊடி, கூடி, இன்புற்று களிப்பதுண்டு. மேலும் மலைநாட்டு வாசிகள் சங்கு, சிப்பி, பாசி மணி, இவைகளாலான கோவைகளாலும், பூமாலைகளாலும், இலைகளாலும் தைத்துச் சேர்த்த உடைகளாலும் தங்கள் தேகங்களை மறைத்து கொள்வர். இன்றும், மலைக் குறவர்கள் மலை நாட்டு மூலை முடுக்குகளிலே இவ்வாறான உடைகளைத் தரித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். இந்த குறவர்கள் வேட்டையிலே தங்களுடைய வீரத்தையும் காதலையும் காட்டித் தரும் புலிப்பற்களை அவர்களுடைய காதலிகள் கோவையாகக் கோர்த்து புலிப்பல் தாலியாக, அணிந்து வந்தனர். இதுவே பிற்காலத்து மணப் பெண்டிரின் பொன் தாலியாக மாறியது என்று பழங்கால ஆராய்ச்சி நூல் அல்லது ஆதிகால முதல் கி. பி. 600 வரையுள்ள தமிழர் சரித்திரம் என்ற நூலில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இந்த ஆராய்ச்சியைக் கொண்டும், நமது பண்டைப் பனுவல்களை ஆழ்ந்து ஆராய்ந்த போது, பலவகையான, மாங்கல்யங்களை பெற்றோர் அன்பின் மேலீட்டால் காப்பாக தமது குழந்தைகளுக்கு கட்டினர் என்றும் மணமகள் மண மகனுக்கும் அளித்து வந்தனர் என்றும் அறிகிறேன். முக்கியமாக, புலிப்பல் தாலி, இடபதாலி, ஆமைத்தாலி, ஐம்படைத்தாலி, தங்கத் தாலி, முதலியவை விசேஷமாக குறிப்பிடத் தக்கன வாகும்.

> "புலிப்பற்றலிப் புன்றலைச் சிறார்"
> "யாப்பு எயிற்றன்ன பன்னிரைத்தாலி"
> —(பெருங்கதை)

> "தாலி ஐம்படை தழுவு மார்பிடை"
> —(கம்பர்)

> "செங்கை நிரை விளையும் புலிப்பல்லால் நிறை
> திகழ் மங்கலப் பூணும் நிலவரி"
> "போதிற் பொலியுந் தொழிற் புலிப்பற்
> தூரல் பொற்றேடியே"
> "அங்கணன் மலை மகள் மிடற்றில் ஆரருள்
> மங்கல நாணினை வயங்கச் சாத்தினன்"
> (காஞ்சி)

ஐம்படைத்தாலி யென்றால் சங்கு, சக்ரம், வில், வாள், தண்டு முதலிய உருவமமைந்த (திருமாலின் பஞ்சாயுதம்) தாயிருக்கும்.

> "பூண்டவை எறியா வாளும் ஏற்றை மழுவும்
> செறிய கட்டி ஈரிடைத் தாழ்ந்த
> பெய் புலமூ தாய்ப்புகர் நிறத்துகிரின்
> மையற விளங்கிய ஆனேற்று அவிர் பூண்"
> (கலி)

இந்த செய்யுளில் "ஆனேற்று அவிர் பூண்" எனக் கூறப்பட்டுளது ரிஷப தாலி பற்றியே யாகும். அதாவது ரிஷபத்தின் உருவமும் அமைந்த மாங்கல்ய மாகும்.

தங்கத் தாலியை பற்றி "கோதின் மங்கல நூல் தாலி பொன் தாலியோடு புனைத்தான்" "நல்லோன் புனைந்த நெற் சிறு பொன் தாலி" "மங்கல நாண் கண்டிறைவன் மறித்துஞ் சொல்வான்" என்று பலவாறாக சூசிப்பிக்கப் பட்டிருக்கிறது. "தாலியில்லாது கலியாணமில்லை" என்ற பழமொழி பழமையானது.

இத்தகைய மாண்பு வாய்ந்தது பொற்றாலி. அதன் மகத்துவத்தை எவ்வளவு வேண்டுமாயினும் கூறலாம். மாங்கலியம் தரித்துள்ள மங்கையின் திருமுகம் கண்டமாத்திரத்தில் பாவம் தொலையும். அவர்களிருப்பிடத்தில் லக்ஷ்மி வாசம் புரிவாள். அவர்கள் கிரஹலக்ஷ்மிகளாக விளங்குவர். கிரஹலக்ஷ்மிகள் கிரஹலக்ஷ்மியைப் போற்றிப் புகழ் பெற்று சீரும் சிறப்புமாய் பல்லாண்டு வாழ்வார்களாக!

# செய்தித்திரட்டு

## ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்!

பல்கேரிய மன்னன் புத்திரி ஐந்துவயது மேரி லூஸி பசியில்லாமல் எதையும் சாப்பிடாமலிருந்து வந்தாள். குழந்தை லூஸியைச் சாப்பிடும்படி செய்ய மன்னர் ஒரு உபாயம் செய்தார். எட்டு ஏழைக் குழந்தைகளை அரண்மனைக்கு அழைத்து லூசியையும் அவைகளுடன் உட்கார வைத்து ஒருவாரம் சேர்ந்தாப்போல் அறுசுவை உண்டிகளுடன் விருந்து போஜனம் கொடுத்தார். முதல் இரண்டு நாட்களில் இளவரசி ஒன்றையும் தொடாது மற்றச் சிசுக்கள் உண்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். மூன்றாம் நாள் முதல் லூஸி மற்றக் குழந்தைகளைப் போல் ஆவலாய் உண்ண ஆரம்பித்து இப்பொழுது தானே வேளாவேளை நல்ல பசியுடன் ஆகாரம் சாப்பிட்டு வருகிறாள். "ஊரார் குழந்தையை ஊட்டிவளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்" என்ற பழமொழி பொய்யாகுமோ?

... ... ...

## பணத்துக்கு பாரியை பலி

கான்பூர் செஷன்ஸ் நீதிபதி மிஸ்டர் டி. ஸி. ஹண்டர் ஐ. ஸி. எஸ். பைரன் பிரஸாத் என்ற 30 வயது வாலிபனுக்குத் தன் மனைவியைக் கொன்ற குற்றத்திற்காக தூக்கு தண்டனை விதித்தார். வழக்கின் விபரம்:—பைரன் பிரஸாத் ஏற்கனவே தன் முதல் மனைவியின் பேரில் 5000 ரூபாய் இன்ஷூர் செய்திருந்தான். அவள் இறந்து போய் அப்பணத்தை அடைந்தான். இரண்டாவது மனைவியாகிய சுந்தரா தேவிமீதும் 1937ம் வருஷம் இரண்டு கம்பெனிகளில் 20,000ரூபாய்க்கு ஆகஸ்ட் மாதம் இன்ஷூர் செய்தான். சில பிரீமியமே கட்டினான். 1938ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30உ மனைவியை விஷமிட்டுக் கொன்று விட்டான். கொலைக்குக்காரணம் பண ஆசையே என்று கூறப்படுகிறது. கொலை செய்யப்பட்ட தினம் மாலை வரையில் சுந்தராதேவி திடகாத்திரமாயிருந்தாளாம். பிரேதத்தையும் அவசர அவசரமாக பிரஸாத் தகனம் செய்து விட்டானாம். காசாசை பேய்பிடித்த கணவனின் கொடுமைதான் எவ்வளவு! வரதட்சிணைக்காக முன் மனைவிகளைத் தள்ளிவைத்துப் புதுப்பெண்களை மணக்கும் உத்தமர்களுக்கு அண்ணன் போலும் பிரஸாத்!

... ... ...

## வரதக்ஷிணைக்கு வனிதை பலி

உஜ்ஜைனியைச் சேர்ந்த காலஞ்சென்ற பிரின்ஸ்பால் தாட்கேயின் பதினேழுவயது குமாரி தன் விவாகத்துக்கு தேவையாயிருந்த பெருந்தொகையான வரதக்ஷிணைப் பணத்தைக் கொடுக்க தன் தாய் தந்தையரால் முடியாமையினால் விவாகமாகாத கவலையினால் கெரோஸீன் எண்ணையை ஊற்றிக்கொண்டு தீவைத்து தான் வரதக்ஷிணைக் கொடுமைக்கு பலியாகின்ற





தாகக் கூறிக்கொண்டே பரிதாப மரணமடைந்தாள். இன்னும் சமூகம் எவ்வளவு காலம் இந்த அநீதியை பார்த்துக் கொண்டிருக்கப் போகிறது?

... ... ...

## முத்தப்போட்டி

சிகாகோ நகரில் முத்தப்போட்டி நடந்தது. அதில் சேர்ந்தாப்போல விடாமல் $6\frac{1}{2}$ மணி நேரம் முத்தமிட்டுக் கொண்ட மிஸ் பாலட்டேயும், ஸ்ரீ வீனைட் என்பவரும் முதன்மையானவர்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள்.

... ... ...

## நாரீமணிகள் சிற்பசாலை

மீரட் ஸ்திரீகள் சங்கத்தார் ஏழைப் பெண்கள் தங்கள் ஒழிவு நேரங்களில் செய்வதற்கான சில கைத்தொழில்களை அவர்களுக்கு இலவசமாகக் கற்றுக் கொடுக்க 'சிற்பசாலை' ஒன்றை ஏற்படுத்தப்போகின்றனர். அதில் ஏழை மங்கையர்கட்கு தையல், நூல் நூற்றல், நெய்தல், சாயங்காய்ச்சுதல், எம்ப்ராய்டரி, 'ட்ரைக்ளீனிங்,' ஷர்பத், மிட்டாய்கள் செய்தல் முதலிய பல தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படும். ஐக்கிய மாகாண கல்வி மந்திரி மீரத் ஸ்திரீகள் சங்கத்தாரின் திட்டத்துக்கு பூரண ஆதரவு அளித்துள்ளார். பல கைத்தொழில் நிபுணர்கள் கௌரவ சேவை செய்ய முன் வந்துள்ளனர். அந்த ஸ்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை உடனுக்குடன் செய்வதற்கும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மற்ற ஸ்திரீ சங்கங்களும் மீரத் சங்கத்தைப் பின் பற்றுமா?

... ... ...

## லண்டன் கவுன்ஸிலுக்கு ஸ்திரீ தலைவர்

லண்டன் கவுண்டி கவுன்ஸில் (முனிஸிபாலிடி) தலைமை பதவி மிகவும் கௌரவம் வாய்ந்த ஒரு ஸ்தானம். அதற்கு இது வரையில் ஒரு ஸ்திரீயாவது தேர்ந்தெடுக்கப்பட்டது கிடையாது. ஆனால் இவ்வருஷம் அந்த ஸ்தானத்துக்கு மிஸஸ் ஈவலின் எம். லோ என்ற தொழிலாளர் பிரதிநிதி நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். பல வருஷங்களாக சமூக சேவையில் ஈடுபட்டவர். 1922ம் வருஷம் முதல் லண்டன் கௌண்டி கௌன்ஸில் மெம்பராக இருந்து வருகிறார். அவர் அந்த பதவியிலிருக்குமளவும் அவருக்கு ஒரு ரோல்ஸ் ராய்ஸ் கார், ட்ரைவர், பியூன் இலவசமாக கிடைக்கும். ஆனால் அவர் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை நடத்துபவர்.

... ... ...

## சீனமங்கையரும், போரும்

சீனஜப்பான் போரில் சீனயுவதிகள் பட்டாளங்களுடன் சேர்ந்து நேரடியாகப் பலவிடங்களில் ஜப்பானியருடன் போர்முனைகளில் முன்னின்று போராடுவதாக ஐரோப்பிய பத்திரிகா நிருபர்கள் அடிக்கடி செய்திகள் அனுப்பி வருகின்றனர். சீன மங்கையரின் வீரமும் தேசாபிமானமும், அளவிட முடியாததென்று மேல் நாட்டுப் பெரியோர்கள் அறிவிக்கின்றனர். அவர்கள் தியாகம் போற்றற் பாலது!

# கதம்பம்

## பார்லிமெண்டு மெம்பர்களுக்கு ஊறுகாய்

பிரிட்டனில் கன்சர்வெடிவ் கட்சியைச் சேர்ந்த பல பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்கு வேறு ஒரு பார்லிமெண்டு மெம்பர் ஒவ்வொரு ஜாடி இஞ்சி ஊறுகாய் அனுப்பியிருக்கிறார். சர்க்கார் கட்சி மெம்பர்கள் பார்லிமெண்டு நடவடிக்கைகளில் அதிகமான உற்சாகமும், சுறுசுறுப்பும் காட்டவேண்டுமென்பதற்கு அடையாளமாகவே அவர் அவ்வாறு அனுப்பிவைத்தாராம்!

... ... ...

## உருளைக்கிழங்கு ரப்பர்

உலகத்தில் உற்பத்தி செய்யப்படும் ரப்பரில் பத்தில் ஒருபங்கு உருளைக்கிழங்கிலிருந்தும், சாராயத்திலிருந்துமே தயார் செய்யப்படுகிறதென்று ஸ்ரீ ரிச்சார்டு பால்மர் என்ற விஞ்ஞான நூலாசிரியர் கூறுகின்றார். இந்த செயற்கை ரப்பர் இயற்கை ரப்பரைவிட உயர்ந்த ரகமாக இருந்தாலும் விலை அதிகமாக இருக்கிறது.

... ... ...

## ஒரே தடவையில் 4 குழந்தை!

தலைச்சேரிக்குச் சமீபத்திலுள்ள வடக்கம்பாதம் என்ற இடத்தில் ஜனவரி மாதம் 5உ 35 வயது ஸ்திரீ ஒருவள் நான்கு குழந்தைகளைப் பெற்றாள். மூன்று பெண் குழந்தைகள்; ஒன்று ஆண். அவளது பிரசவத்தின்போது வைத்திய உதவிபுரிந்த டாக்டர், தாயும், குழந்தைகளும் சௌக்கியமாய் இருக்கிறார்களென்று தெரிவிக்கிறார்.

... ... ...

## நெட்டையும், குட்டையும்

உலகத்திலேயே அதிக உயரமானவன் ஓலாப் பீட்டர்ஸன் என்ற 25 வயது வாலிபன். இவன் $8\frac{1}{2}$ அடி உயர மிருக்கின்றான். ப்ரின்ஸ் டாம்லிங் என்பவனுக்கு வயது 33; ஆனால் அவனது உயரம் 18 அங்குலம் தான். இவன்தான் உலகிலேயே மிகவும் குட்டையானவன் என்று சொல்லப்படுகிறது. 29 வயது ஹெல்கா என்பவள் $4\frac{1}{2}$ அடி உயரமே இருக்கின்றாள். இம் மூவரும் ஒலிம்பியா ஸர்க்கஸ் ஸ்தாபனத்தில் வேலை செய்து வருகிறார்கள்.

... ... ...

## குழந்தை விதவைகள்

நமது தேசத்தில் ஐந்து வயதிலிருந்து பத்து வயது வரையுள்ள சிசு விதவைகள் 1000க்கு ஐந்து பேர்கள் இருக்கின்றனர் என்று ஒரு செய்தி கூறுகிறது. என்னே பால்ய விவாகத்தின் படுபழி! இளம் பால் மணம் மாறாச்சிறுமியர் விதவைகளாம்!

... ... ...

## மாதர்க்கு ஓட்டுரிமை

உலகத்தில் 24 நாடுகளில் பெண்களுக்கு பார்லிமெண்டு முதலிய சட்ட நிரூபண சபைகளுக்கு வாக்குரிமை இருக்கின்றது. முக்கியமான 14 தேசங்களில் இல்லை. இப்படி ஓட்டுரிமை வழங்காத தேசங்களில் 9 ஐரோப்பாவிலிருக்கின்றன.



# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## உருவத்தை மறைக்கும் கிரணங்கள்

ஸ்டீபன் ப்ரிபில் என்ற ஹங்கேரிய எஞ்சினியர் ஒரு நூதன யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார். அக்கருவி ஒருவிதமான வெளிச்ச கிரணங்களை வெளியிடுகிறது. அந்த கிரணங்கள் மனிதர்களின் மேல் ஒரு நிமிஷம் தாக்கினால் அவர்களின் உருவம் மற்றவர்களுக்குத் தெரியாதபடி அக்கிரணங்களுக்குள் மறைந்து விடுகின்றன.

... ... ...

## 5 வருஷம் தூங்காதவர்

ஐஸக்வில்பர் என்ற 69 வயதுள்ள ஆர்லியான்ஸைச் சேர்ந்த வயோதிகர் சென்ற ஐந்து வருஷங்களாக தூங்காமலே இருந்து வருகிறார். அவர் இளவயதில் அதிகமாகச் சம்பாதிக்கும் ஆசையுடன் இரவில் தூங்காமலேயே வேலை செய்வார். அப்பழக்கம் இப்பொழுது அவர் தூங்க முயற்சி செய்தாலும் தூக்கம் வரக்காணோம்.

... ... ...

## சிங்கம் வளர்க்கும் ‘ராணி’

ஜெக்கோவின் ‘அழகுராணி’ என்று புகழ் பெற்ற மிலா ரே மோனவா ஒரு சிங்கக்குட்டியை வளர்த்து வருகிறாள். அதற்கு இப்போது வயது முக்கால். மிலா அச்சிங்கக் குட்டியை சதா தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் சர்க்கார் அதைக் கூண்டில் அடைத்து வைக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள்.

... ... ...

## குழந்தைகளைக் கொன்ற தாய்

தான் இரண்டாந்தரம் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசையால் தன் சொந்தக் குழந்தைகளையே கொன்ற ஒரு ஸ்திரீயை கராச்சி போலீசார் சமீபத்தில் கைது செய்திருக்கின்றனர். இவள் விவாகம் செய்து கொள்ள ஆசைப்பட்ட புருஷன் “உனக்கு ஏற்கனவே மூன்று பெண்கள் இருக்கின்றன. நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது” என்று கூறியதனால் தன் குழந்தைகளை ஒரு வாய்க்காலில் தள்ளிக் கொன்றாளாம். இரண்டு மாண்டு போயின. மூன்றாம் குழந்தை அவள் குரூரச் செய்கையைக் கண்டு அஞ்சி ஓடி விஷயத்தைப் பிறருக்குச்சொல்லி அவள் கைது செய்யப்பட்டிருக்கிறாள்.

# சினிமா செய்திகள்

### சித்ரா

தீபம் பிலிம்ஸ் லிமிடெட் "சித்ரா" என்ற மகோன்னத சமூகப்படத்தை நியூ டோன் ஸ்டியோவில் தயாரித்து வருகின்றனர். பிரதம நடிகர்கள் சுந்தரேசன், நந்தராம், சுப்புலக்ஷ்மி முதலியோர். டைரக்டர் திரு. வ. நடராஜன்.

### செளபாக்கியவதி

கோவை பிரீமியர் ஸினிடோன் "செளபாக்கியவதி" என்ற உருக்கமான படத்தை தயார் செய்து வருகின்றனர். ஆயிரம் முகம் படைத்த ராமகுமார், எஸ். பி. எல். தனலக்ஷ்மி முதலியோர் நடிக்கின்றனர்.

### குமார குலோத்துங்கன்

டெக்கான் ஸினிடோன் கம்பெனியார் "குமார குலோத்துங்கன்" என்னும் சரித்திரத்தைத் தழுவிய ஒரு கதையை தமிழ் பேசும்படமாக எடுக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். மிஸ். ராஜகுமாரி, மகாலக்ஷ்மி, மீனாட்சி முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

### மோக்ஷம்

யுனைட்டெட் புரொடக்ஷன்ஸ் 'மோக்ஷம்' என்ற மகத்தான படத்தை தீவிரமாக தயாரித்து வருகின்றனர். இது ஜீ. எஸ். கோவிந்தராம் மேற்பார்வையில் தயாரிக்கப்படுகிறது.

### சுகுணசரஸா

ஓரியண்டல் பிலிம்ஸ் "சுகுணசரஸா அல்லது நிரபராதி" என்ற உன்னத சமூகத் தமிழ் பேசும் படத்தை பம்பாய் பிரபல ஸ்டுடியோவில் தயாரித்திருக்கிறார்கள். ஸ்ரீமதிகள் எம். எஸ். விஜயாள், டி. பி. ராஜலக்ஷ்மி, திரு. டி. பி. கைலாஸம் முதலியோர் முக்கிய நடிகர்கள். விரைவில் இப்படம் வெளிவரும்.

### கவிகாளமேகம்

சென்னை கலாமணி பிலிம்ஸாரின் "கவிகாளமேகம்" என்ற படத்தில் வித்வான் டி. என். ராஜரத்னம் கதாநாயகனாக நடிப்பாரென்று தெரிகிறது. இதர பொருத்தமான நடிகர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாக அறிகிறோம்.

### வீர ஜகதீஷ்

மதுரை வி. எஸ். டாக்கீஸார் "வீர ஜகதீஷ் அல்லது மங்களவதி" என்னும் படம் தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். ஸ்ரீ வி. எஸ். எம். ராஜாராம் அய்யர், மிஸ் கே. ரங்கநாயகி, எஸ். எஸ். ராஜாமணி முதலியோர் இதில் நடிக்கின்றனர். இத்துடன் டி. எஸ். கிருஷ்ணவேணி நடிக்கும் "நவீன புருஷ சாகஸம்" என்னும் காமிக்கும் காட்டப்படும்.



# இலங்கையின் பாராட்டு

**திரு. கே. டி. சிற்றம்பலம்**

செங்கமல மின்னார்க்கு நன்மொழியைப்
புகட்டுவித்து திருத்தமூட்டி
மங்கலமாய் வாழ்வதற்கும் மனையறமாய்
யோங்குதற்கும் மகிழ்ச்சியோடு
இங்கிதமுமெழில் நடையா யாவருக்கும்
பயன்படவு மிலங்கா நின்ற
பொங்குவளர் கிரகலக்ஷ்மியே புகழ்கின்றாய்
நின்னுமம் புகழ்வதாமே.

ஆத்திகரும்னாத்தி கருமரிவையுடன்
பெரியோர்கள் சிறியோர் போற்ற
சாத்திரமும் பெண்சமூக முன்னேற்ற க்ஷேத்திரமும்
வைத்தியமும் தானிலங்க
சூத்திரமாயுரை செய்து அவரவரின்மன
மதனைத் துலங்கவைக்குமு
பாத்தியெனத் திகழ்கின்ற கிரகலக்ஷ்மியே
நின்னை யுளுயர்வதாமே.

ஆண்டிரண் டோடியபின் மூன்றாண்டு
வளர்கின்ற அன்னாய் நின்னை
மீண்டொரு திங்களடைவதனை யிருமலராய்ப்
பெருவதற்கு இறையோன் றன்னை
வேண்டுகின்றோ மீடேரிலார்வமதாய் சகலமதத்
தொண்டும் விளங்காய் நின்று
பூண்டுகொண்டு வந்திடுவாய் கிரகலக்ஷ்மியே
நின்னையுள் புகழு மோங்க.

சுபம்

## ஆசிரியர் குறிப்புகள்

# மாதர் பிரச்சினைகள்

மாதர் சமூக முன்னேற்ற சம்பந்தமான பல பிரச்சினைகளைப் பற்றியும் சென்ற டிசம்பர் மாத இறுதியில் கூடிய 13வது அகில இந்திய மாதர் மகாநாட்டில் நன்கு விவாதிக்கப் பட்டு பல முக்கிய தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்ட விவரங்களை தினசரிப் பத்திரிகைகள் மூலம் நம் சகோதரிகள் அறிந்திருக்கலாம். (மகாநாட்டிற்குத் தலைமை வகித்த ராணிலக்ஷ்மி பாய் ராஜவதியின் தலைமைப் பிரசங்கம் அரிய கருத்துக்கள் செறிந்ததொரு சொற்பொழிவாகும். மகாநாட்டுக்கு காந்தியடிகள் அனுப்பிய செய்தியும் ஒவ்வொரு ஸ்திரீயும் கவனிக்க வேண்டிய தாகும். "விடுதலை கொண்டு வருபவர்கள் ஸ்திரீகளே; புருஷர்களல்ல. அஹிம்சா தர்மத்தை ஸ்திரீகள் மனது வைத்தால் வெற்றிகரமானதாகச் செய்து விடலாம். சர்க்காவின் மூலம் அவர்கள் கோடிக் கணக்கான தங்கள் ஏழைச் சகோதரிகளுக்கு உதவி புரியலாம். கதராணிவதால் ஏழைக் குடும்பங்களை காப்பாற்றலாம். அவர்கள் ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை உண்டாக்கலாம். பர்தாவை ஒழிக்கலாம்; தீண்டாமைப் பேயை விரட்டலாம். டில்லி மகாநாடு இந்த விஷயங்களைச் செய்ய உதவி புரியுமா?" என்று காந்திஜி கூறுகிறார்.) இது பற்றிச்சகல சகோதரிகளும் தங்களாலான சேவையைச் செய்ய வேண்டியது அவர்களது புனித கடமையாகும். இன்னும் லேடி ஹாலிபாக்ஸ், பரோடா மகாராணி, திருவாங்கூர் மகாராணி, லேடி இஸ்மேல், பேகம் ஷாநவாஸ் முதலியோரும் ஆசிச் செய்தி அனுப்பியிருந்தனர். ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், கமலாதேவி, ராணி அமிருத கௌரி, மிஸ் டிங்மன் முதலிய பிரபல ஸ்திரீ தலைவர்களும் மகாநாட்டு நடவடிக்கைகளில் கலந்து பல பிரச்சினைகளையும் சர்ச்சை செய்து முக்கியமான தீர்மானங்களும் செய்தனர்.

அரசியலை அடியோடு ஒதுக்கு வைத்திருந்த முறை மாற்றப்பட்டு மாதர் சிசுக்கள் சம்பந்தப் பட்டதும், இதர அகில இந்தியப் பிரச்சினைகளையும் அகில இந்திய மாதர் மகாநாடு ஆராய்ந்து தன் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டும் என்ற தீர்மானம் குறிப்பிடத்தக்கது. அடிமை இந்தியாவில் அரசியல் இல்லாத சங்கமோ ஸ்தாபனமோ உப்புச்சப்பற்று உணர்ச்சி குறைந்ததாகத் தானிருக்கும். எனவே இந்த சீர்திருத்தம் யாவராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதே. யுத்தத்துக்கு விரோதமாகச் செய்துள்ள தீர்மானமும் போற்றத்தக்கது. யுத்தம் செய்யும் தேசங்களுக்கு யாதொரு உதவியும் புரியக் கூடாது என்று ஸ்திரீகள் கூறியிருப்பதும், தீர்மானித் திருப்பதும் அவசியந்தான். தொழிலாளர் முன்னேற்றத்துக்கும் மாதர்கள் பாடுபட வேண்டுமென்ற முடிவும் அவசியமாக அமுலுக்கு வரவேண்டியதொரு விஷயமாகும். இன்னும் இது போன்ற பல விஷயங்களைப் பற்றியும் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களை கிரியாம்சையில் நடத்திக்காட்ட சகல ஸ்திரீகளும் முன் வந்து ராணி லக்ஷ்மிபாயின் தலைமையில் பல வெற்றிகரமான செயல்களைச் செய்வார்களாக! தீர்மானங்கள் வெறும் காகிதத் தீர்மானங்களாக நின்றுவிடாமல் பார்த்துக் கொள்ளுவது நம் பாரத மணிகளின் வேலையாகுமென்று நாம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## விபசார விஷம்

விபசாரம் மஹா பாபம் என்றும் இந்த விஷம் சமூகத்தைப் பற்றிக் கொண்டிருப்பதை நீக்கவேண்டுமென்றும் நாம் பல தடவைகள் வற்புறுத்தி வந்திருக்கிறோம். விபசாரத்தைத் தடைசெய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு சிறந்தவேலை செய்து வரும் "உஷார் சங்கத்தின்" (Vigilance Association) வருஷாந்திர விழா கனம் மந்திரி எஸ். ராமனுதன் தலைமையில் சென்ற ஜனவரி மாதம் 13ந் தேதி நடை பெற்றது. சங்கத்தின் அக்கிராசனர் சர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் சங்கம் செய்து வரும் ஆக்கவேலைகளைப் பற்றி விஸ்தாரமாகப் பேசிவிட்டு இன்னும் கெட்டழிந்த ஸ்திரீகளுக்காக விடுதிகள் அமைத்து நடத்த பொது ஜனங்களும் சர்க்காரும் பணஉதவிசெய்ய முன்வர வேண்டும் என்று கோரினர். திரு. ராமனுதன் சர்க்கார் இப்பிரச்சினையில் போதிய கவனம் செலுத்துவதாகவும் ஆனால் இந்த தீய வழக்கம் மானிட சமூகம் ஏற்பட்ட நாள் முதல் இருந்து வரும் ஒரு தீர்க்க முடியாத சமூகக் கேடென்றும், சர்க்கார் இதை ஒழிக்கத் தங்களாலான சட்டதிட்டங்கள் இது வரையில் செய்துள்ளார்கள் என்றும், இனியும் திருமதி அம்மண்ண ராஜாவின் "பொட்டுக் கட்டுதல் ஒழிப்பு சட்டத்தை" யும் சர்க்கார் நிறைவேற்றுவார்களென்றும் கூறி இந்த தீய முறையை ஒழிக்க வெறும் சட்டம் மட்டும் செய்வதால் உண்மையான பலன் விளையாது என்றும் கூறினர். அவர் கூறியவைகள் யாவும் வாஸ்தவம். ஆனால் அம்முறையில் ஈடுபட்டிருப்பவர்களை டாக்டர் பரீட்சைக் குட்படுத்துவது என்ற திரு. ராமனுதன் யோசனையை ஒப்புக் கொண்டால் இத் தீயதொழில் அபிவிருத்தியே ஆகும்; அடங்காதென்று நாம் அபிப்பிராயப் படுகிறோம். பொது ஜனங்களும், சமூக முன்னேற்ற ஸ்தாபனங்களும், போலீஸ் அதிகாரிகளும் இது வரையில் நிறைவேற்றப் பட்டிருக்கும் விபசாரத்தடைச் சட்டங்களை உண்மையான ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் அமுல் செய்ய தீவிரமாக முற்படின் இந்த கூடா ஒழுக்க முறை ஏறக் குறைய ஒழியும் என்று நாம் உறுதி கூறுவோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விபசார விடுதிகளையும், விபசாரத்திலீடுபடுவோர்களையும் பார்த்தும் பாராமலும் தெரிந்தும் தெரியாதது போல் விட்டு வைப்பதே இந்த ஒழுக்கமற்ற வழக்கம் இன்று சமூகத்தில் இன்னும் இருந்து வருவதற்கு முக்கியமான காரணமென்று நாம் கூறுகிறோம்.

இத் தொழிலிலிருந்து விடுவிக்கப்பட்ட பெண்களை விபசார விடுதி என்ற சிறைக் கூடத்தினின்றும் விடுவித்து ரக்ஷகாலயம் என்ற கூண்டில் அடைப்பது சரியல்ல. ரக்ஷகாலயத் திட்டம் அவர்கள் தங்கள் குற்றத்தை மறந்து சுதந்திர உணர்ச்சி பெற்று சமூகத்தில் தாங்களும் கௌரவ ஸ்தானம் பெற்று சுயேச்சை வாழ்வு பெறும் வழியில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் நிர்பயமாய் சீர்திருத்தம் அடையும்படி செய்தல் அவசியம். இந்த சேவையில், தங்கள் சமூகத்துக்கே ஒரு அழுக்காக இருக்கும் விபசாரத்தை அகற்றும் பணியில், சகோதரிகள் யாவரும் முனைந்து நின்று தம் கடனாற்றுவார்களென்று நம்புகிறோம்.

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளி லிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரிமீ 1௳ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்மீ 8௳ குழந்தை பெறுவாள் என்று முதவில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | :; | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜுன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜுன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜுலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜுலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜுன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜுன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜுலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜுலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. S. Seshagiri Rao at the Lodhra Press, Royapettah, Madras.


## க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்யப்பட்டது)

**பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி**

எல்லாவித வாத நோய்களேயும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. தேசமெங்கும் புகழ்பெற்றது.

அவுன்ஸ் 1க்கு 3 8 0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ், 107, பிராட்வே, சென்னை.**

## சாஸ்திரி ஹோட்டல்

தம்பதிகள் தங்குவதற்கு தகுந்த இடம்—சுவை மிகுந்த உண்டிகள் இன்பமான பானங்கள்—இணையற்ற தயாரிப்பு—வகையான உபசாரம்—நல்ல காற்றோட்டமுள்ள உல்லாச பவனம்—முதல்தரமான வசதிகள் கிடைப்பது

**எங்கே?**

# சாஸ்திரி ஹோட்டல்

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**

## குந்தலகாந்தி தைலம்

ஸ்திரீகளுக்கு மிகவும் விலையுள்ள ஆபரணங்களைக் காட்டிலும் மயிர் அதிசயமாக இருக்கிறது. இம்மயிர்கள் கறுத்தநிறம் உடையதாகி, நீண்டும் இருப்பது அபூர்வமாக இருக்கிறது. இத்தைலத்தை தினத்திற் கொருமுறை மயிர்களுக்குத் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிர்கள் கறுத்து நீண்டு வளர்ந்து பார்வைக்கு அழகு தரும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

**கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - மதராஸ்**

# நவமணிமாலை

(இனிய கதைக்கோத்து)

ஸ்திரீகளுக்கு அழகை அதிகரிக்க ஆபரணங்கள் அவசியம்; அதற்காக காசுமாலை, மாங்காமாலை, முத்துமாலை முதலியவற்றை அவர்கள் அணிகிறார்கள். அதேபோல் ஸ்திரீகளின் அறிவுக்கு ஆக்கம் தேடிக்கொடுக்கூடியது ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயலக்ஷ்மி அவர்களால் எழுதப்பட்ட “நவமணிமாலை” என்ற ஒன்பது கதைகளடங்கிய இனிய கதைக்கொத்தாகும். ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி பல தினசரிகளிலும், மாதாந்த, வாரப் பத்திரிகைகளிலும் அருமையான கதைகள் எழுதிவந்திருக்கும் உயரிய ஆசிரியை யாவார். இக்கதைகள் வாசிப்போருக்கு ஆனந்தமாயிருப்பதன்றி சமூக சீர்திருத்தத்தின் போக்கையும் உணரச் செய்வனவாகும். இந்நூலுக்கு சர். பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்களும், திரு. சத்தியமூர்த்தி, எம். எல். ஏ., அவர்களும் அரிய சிறப்புரைகள் எழுதியிருப்பதே இதன் உயர்வைக் காட்டுகிறது. புஸ்தகம் உயர்ந்த காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஆசிரியையின் உருவப்படத்துடன் சுமார் 280 பக்கங்கள் கொண்ட இப்புஸ்தகத்தை கட்டாயம் சகல ஆண், பெண்களும் வாங்கி வாசிக்க வேண்டி விலை குறைவாகவே வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சத்தியமூர்த்தி:—கௌரவமிக்க என் நண்பரின் சாதுர்யமும், புத்திவன்மையுமுள்ள குமாரி சௌ. எஸ். ஆர். ஜயலக்ஷ்மியின் இந்தக் கதைக் கொத்துக்கு சிறப்புரை அளிப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கின்றது................தமிழர்கள், தமிழ் மாதர்கள், பாலர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் இக்கதைகள் வாசிக்கப்பட வேண்டுமென்று நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன்.

சர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர்:—நான் இதில் பல கதைகளையும் படித்தேன். எளிய இனிய நடையில் கதைகள் வெகு நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. கதைகள் வாசிக்க இன்பமாக இருக்கின்றன. அவைகள் ஓரோர் நீதியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கின்றன.

புஸ்தகம் விலை அணா 12. (தபால் சார்ஜ் வேறு).

கிடைக்குமிடம்:

**“கிரஹலக்ஷ்மி” காரியாலயம்**

தபால் பெட்டி நெ. 655,

ராயப்பேட்டை, :: மதராஸ்.



# ஆயுர்வேத வைத்யர்களுக்கும், வைத்யசாலைகளுக்கும் எச்சரிக்கை

பூரண குணமளித்து நோய்களை நீக்கும் ஔஷதங்கள் தயாரிப்பதற்கு தூய்மையானதும், உயர்ந்ததுமான மூலிகைகள் அத்யாவசியம். போலி மருந்துகளை உற்பத்தி செய்வது வைத்திய சாஸ்திரத்துக்கும், வைத்தியர்களுக்குமே கௌரவக்குறைவாகும்.

ஆகையால்தான் சிறந்த வன மூலிகைகள் கிடைக்கக்கூடிய திருச்சூரில் எங்கள் ஔஷத சாலையின் கிளை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் சாதாரணமானதும், சாமான்யமான மூலிகைகள் மட்டுமின்றி, அபூர்வமான மூலிகைகளையும் மொத்தமாகவும், சில்லரையாகவும் தேவையானவர்களுக்கு அனுப்பிக் கொடுக்க தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். எந்த மூலிகை தேவையோ அதில் உயர்தர சுத்தமான ரகம் அனுப்பப்படும் என்று நாங்கள் உத்தரவாதம் தருகிறோம். கரிசல் நிலங்களிலும், உவர் பூமியிலும் அகப்படக்கூடிய மூலிகைகளைவிட மலையாள தேசத்தில் கிடைக்கும் ஔஷத மூலிகைகள் மிகச் சிறந்தவை யென்பது எல்லா வைத்யர்களுக்கும் தெரிந்த விஷயமே. மூலிகைகள் தேவையானவர்கள் அவற்றின் சமஸ்கிருத அல்லது தமிழ்ப் பெயரைக் குறித்து எழுதவேண்டும்.

**கேஸரி குடீரம்,**

ஆயுர்வேத ஔஷதசாலை,

திருச்சூர்.

(கொச்சி சமஸ்தானம்)

# "கிரஹலக்ஷ்மி"

**பைண்ட் வால்யூம் 2. : : வெளிவந்து விட்டது**

1938ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் முடிய வெளிவந்த பன்னிரண்டு இதழ்களும் வெகு நேர்த்தியாகவும் அழகாகவும் பைண்ட் செய்யப்பட்ட "கிரஹலக்ஷ்மி" பைண்ட் வால்யூம் 2. ஒவ்வொரு கிரஹ தலைவியின் கையிலும் இருக்கவேண்டியது. தமிழ் நாட்டு ஸ்திரீகள் அனைவரும் படித்து பயனடையத்தக்கது. சொற்ப பிரதிகளேயுள்ளன.

விலை ரூ. **5—0—0.**

**"கிரஹலக்ஷ்மி" காரியாலயம்**

தபால் பெட்டி நெ. **655,**

**ராயப்பேட்டை, : : மதராஸ்.**

---

**கிரஹலக்ஷ்மியாய்**

இன்று ஒவ்வொரு குடும்பங்களிலும் விளங்குவது

# பாரத் கபே சிற்றுண்டிகளே

உங்கள் மனதிற்கேற்ற சாப்பாடு

உங்கள் ருசிக்கேற்ற—தின்பண்டங்கள்

## பாரத் கபே

**மவுண்ட் ரோடு, : : மாம்பலம்.**

**மதராஸ்.**

---

KESARI KUTEERAM * INDIAN CHEMISTS & DRUGGISTS, MADRAS * Kesari T. Mark

**கேஸரியின்**

# ஔஷதங்கள்

●


# கேஸரி குடீரம்

ஆயுர்வேத ஔஷதசாலை

**ராயப்பேட்டை, சென்னை**

# லோத்ரா

## கர்ப்பாசய ரோக நிவாரணி




கர்ப்பாசய ரோகங்களுக்கு மூலகாரணம் ருதுசிராவ தோஷமே. இவற்றுள் முக்கியமானவை ருது சூலை, அகால பஹிஷ்டை, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, சூதக வலி, குசும வியாதி, வாதோன்மாதம், வயிற்றுவலி, அஸ்திசிராவம், மலடு, சோமரோகம், சர்மவியாதி, பஹிஷ்டை தடைப்படுவது, வெண்ரக்தப்போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுவி விடுதல், மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தானமில்லாமை, மலபந்தகம், இருமல், உப்பசம், ஆயாசம் முதலிய சகலவிதமான வியாதிகளை போக்கி ஸ்திரீகளுக்கு புத்திர சந்தான பாக்கியம் கொடுக்கும் ஔஷதம் இது ஒன்றே.

மூர்ச்சை அல்லது வாதோன்மாதம் (ஹிஸ்டிரியா) என்னும் வியாதியை நிவர்த்திப்பதில் லோத்ரா பிரசித்தி பெற்றிருக்கிறது. இந்த லோத்ரா ஔஷதத்தில் வியாதிகளை நிவர்த்திக்கக்கூடிய சரக்குகளுடன் வனமூலிகைகளும் சேர்ந்திருக்கின்றன.

12 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 3

6 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1-10-0

"நான் நெடுநாட்களாகப் பலவிதமான கர்ப்பாசயரோகத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். அநேக விதமான வைத்தியங்கள் செய்தும் குணம் கொடுக்கவில்லை. கடைசியாக உங்களது லோத்ராவை உபயோகித்த ஒரு வார தினத்திற்குள் காரடி வித்தையைப்போல் குணம் அடைந்தேன். அதன் மகிமையை சொல்லமுடியாது."

ஸ்ரீமதி மிஸ் அம்மாகுட்டி அம்மாள்.

"என் சகோதரி மாதவிடாய் காலங்களில் வயிற்றுவலியால் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். எத்தனையோ மருந்துகள் கொடுத்தும் பயனில்லை. பிறகு தங்கள் லோத்ராவின் கீர்த்தியை கேள்விப்பட்டு இரண்டு புட்டிகள் வரவழைத்து சாப்பிட்டதில் அதியற்புதமான பலனை யடைந்தாள். ஒரு குழந்தையும் ஈன்றாள்."

டி. ராஜராஜேஸ்வரம்மா.

# பட்டாணியரின் திட பராக்கிரமம்—



## காஷ்மீரத்து செழுமையும், வசீகரமும் உங்களுக்கு வேண்டாமா?

மனிதர்கள் எல்லோரும் பலசாலிகளாகவும், திடமுள்ளவர்களாகவும் பிறக்கமாட்டார்கள். ஆனால் உடம்பை உருக்கும் பலஹீனத்தை நாசம்செய்து—பள பளவென்று மின்னும் சரீர தேஜஸுடனும், உற்சாகத்துடனும், புஷ்டியான அவயவங்களுடனும் ஆனந்த வாழ்க்கை அநுபவிக்க வேண்டியது அவசியம். இது மனிதனுடைய பிறப்புரிமை. அதற்காக ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.

உடம்பிலுள்ள ரத்தம்—களங்கமற்ற உஷ்ண ரத்தமாக ஓடிக் கொண்டிருந்தால் சரீரத்திற்கு ஆரோக்கியமும், உயிருக்கு இன்பமும், வாழ்க்கையில் உற்சாகமும் உண்டாகும். ஜீவாதாரமான உஷ்ண ரத்தத்தை விருத்திசெய்யும் சாதனம் "அமிருதா" வைக் காட்டிலும் வேறு இல்லை என்பது நிச்சயம். இளைத்துப் போய் எலும்புக் கூடாக இருக்கும் மனிதனை மன்மதன் ஆக்கும். கோழையைப் பராக்கிரம சாலி ஆக்கும். மந்தபுத்தி படைத்தவனைப் புத்திமான் ஆக்கும்.

# அமிருதா

## ரத்தசுத்தி திராவகம்

பலஹீனம், அஜீரணம், மலபந்தம், மந்தபுத்தி, பித்தரோகம், கால் கை கண் எரிச்சல், தலைவலி, சுவப்பன ஸ்கலிதம், மனோவியாகூலம், க்ஷயம் முதலிய சகலவிதமான வியாதிகளை போக்கி மனிதருக்கு தேக ஆரோக்கியத்தைக் கொடுக்கும் திவ்விய ஔஷதம்.

12 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 3. 6 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 1-10.

"சரீரத்திற்குப் பலம் வருவதற்கு உம்முடைய 'அமிருதா'வே மேலான டானிக். அதன் மேலான குணத்தை என் சிநேகிதர்களுக்கு தெரிவித்திருக்கிறேன்."

பேருரி சூரியநாராயணா,

அருவாக்கம் ஜமீன்தார்.

"ஜட்ப்ரோல் மகாராஜா அவர்கள் அனுமதியின் பேரில் உங்கள் அமிருதா திராவகம் நன்றாக வேலை செய்ததென்று எழுதுகின்றேன்."

கெ. வி. நாயகர், ஐ.எஸ்.ஓய்.டி.,

ஜட்ப்ரோல் எஸ்டேட்.




# அர்க்கா

## சர்வ ஜ்வர நிவாரணி

ரோகங்களெல்லாவற்றிலும் முதன்மையானது ஜ்வரம். ஆஹார, விஹார, ருதுதோஷங்களினால் அன்னகோசத்தில் கிருமி கூட்டங்கள் சேர்ந்து பலவிதமான ஜ்வரங்களை மனிதருக்கு உண்டு பண்ணுகிறது. முறைக் காச்சல், குளிர்க் காச்சல், மலை ஜ்வரம், விஷ ஜ்வரம், நீடித்த காலமாயுள்ள புராண ஜ்வரம், விஷபடிசம் என்கிற இன்புளூயன்ஸா ஜ்வரம், மலேரியா ஜ்வரம், சன்னிபாத ஜ்வரம், கபஜ்வரம், பித்த ஜ்வரம், வாத ஜ்வரம் முதலிய சமஸ்த ஜ்வரங்களையும் கண்டிக்க இது ஓர் வஜ்ராயுதம் போன்றது.

6 அவுன்ஸ் ரூ. 2-8-0. 3 அவுன்ஸ் ரூ. 1-8-0. 1 அவுன்ஸ் ரூ. 0-8-0.

"தங்களுடைய 'அர்க்கா' ஜ்வரத்தை மிகவும் நம்பிக்கையாய் நிவர்த்திப்பதைப் பற்றி மிகவும் சந்தோஷித்து இக்கடிதம் எழுதலானேன்."

ஜி. எம். கிருஷ்ணய்யர்,
திருச்சினாப்பள்ளி.

"இன்புளூயன்சா ஜுரத்திற்கு உம்முடைய 'அர்க்கா' வெகு நல்ல ஔஷதம். அதைக் கொடுத்த ஒவ்வொரு கேசும் பிழைத்தது."

கே. கே. ராமய்யா அவர்கள்,
சென்னப்பட்டணா, மைசூர்.

# மதீபல ரசாயனம்

## பித்த நிவாரணி

இது பித்த சம்பந்தமான அருசி, வாந்தி, வாயில் நீரூறல், வயிறுப்புதல், சோறு செரியாமை, புளியேப்பம், வயிற்றில் எரிச்சல் முதலிய வியாதிகளை நீக்கி நல்ல சடராக்னியை விருத்திபண்ணி தேகத்திற்கு மிகவும் ஆரோக்கியமும் உண்டாக்கும். கர்பிணிகளுக்கு உண்டாகும் வாந்தி, அன்ன துவேஷம், நித்திராபங்கம் முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12

# சௌபாக்ய சொண்டி

## பிரசவித்த ஸ்திரீகளுக்கு ஓர் லேகியம்

பிரசவித்த ஸ்திரீகளுக்கு காயமருந்தைக் கொடுக்கும் வழக்கம் நமது தேசத்தில் இருந்து வருகிறது. ஆனால் இந்த காய மருந்தானது கணக்கில்லா கடை சாமான்களினால் பிரமாணம் தெரியாமல் ஒவ்வொருவரும் சொல்லுகிறபடியோ அல்லது கடைக்காரன் கொடுக்கும் வஸ்துக்களைக் கொண்டோ தயார் செய்து கொடுக்கப்படுகிறது. இந்த காய மருந்து பிரதி தினம் 40 நாள் வரையில் கொடுக்கப்படுகிறது. அது அவர்களுக்கு உஷ்ணம் செய்து அநேக வியாதிகளை உற்பத்தி செய்கிறது. பிரசவித்த ஸ்திரீயின் சரீரம் ரொம்பவும் பலஹீனமாக இருக்கிறதை தெரிந்துகூட இந்த முரட்டு வைத்தியம் செய்து அவர்களை பல கஷ்டங்களுக்கு பாத்திரர்களாக்கிறீர்கள்.

இந்த "சௌபாக்ய சொண்டி" யை பிரசவித்த ஸ்திரீகளுக்கு கொடுப்பதினால் அவர்களின் சரீர ஆரோக்யம் கெடாமல், தாயும் சிசுவும் சுகமாக இருப்பார்கள். தாய்க்கு நல்ல பால் சுரக்கும். சாதாரணமாக பிரசவத்தினால் உண்டாகும் வியாதிகளை வராது தடுக்கும்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூபா. 1.

# கர்பரக்ஷக

## சுகபிரசவ திராவகம்

ஸ்திரீகள் கர்ப்பந்தரித்த பிறகு அவர்களிட சரீராரோக்கியத்தை முக்கியமாய் கவனித்தல்வேண்டும். கர்ப்பம் தரித்தபின் சரீராரோக்கியத்தை உடையவர்கள் நல்ல புத்திர, புத்திரிகா ரத்னங்களைப் பெற்று தீர்காயுளுடையவர்களாய் இருப்பார்கள். ஸ்திரீகள் பலஹீனமாயிருப்பதால் கர்ப்பம் தரித்த பின் அநேக வியாதிகளுக்காளாகிறார்கள். முக்கியமாய் இவர்கள் கர்ப்ப ஸ்ராவம், அகால பிரசவம், அடிக்கடி வயிற்றுவலி, ரக்தக்ஷீணம், சரீரத்தில் நீரேற்றம், பலஹீனம், ஆயாசம், அஜீரணம், மலக்கட்டு முதலிய வியாதிகளுக்குட்படுகிறார்கள். இந்த "கர்ப்பரக்ஷக" என்கிற திவ்விய ஔஷதத்தை கர்ப்பம் தரித்தது முதல் சிலநாள் உபயோகித்தால் மேற்கூறிய வியாதிகளை அணுகவிடாமல் இருக்கச் செய்வதேயன்றி பிரசவ காலம் வரையில் சரீரத்தை நல்ல ஆரோக்கிய ஸ்திதியில் வைத்து பூர்ண மாதமான பிறகு சுகப் பிரசவம் சம்பவிக்கச் செய்யும். பிரசவமான பிறகு சாதாரணமாய் வரக்கூடிய கிரஹணி, சூதகவாய்வு முதலியவை சம்பவித்தல் நேரிடாது. இத்த திவ்ய ஔஷதத்தின் மற்றோர் முக்கிய குணம் என்னவெனில் தாய் தந்தையர்கள் எவ்வளவு கருநிற முடையவராயிருப்பினும் இவ்வவுஷதத்தை உபயோகித்த பெண்மணிகளுக்கு தங்கத்தைப் போன்ற சரீர காந்தியும், நல்ல முகவசீகரமுமுடைய குழந்தைகள் உற்பத்தியாகும்.

☞ அருமை குழந்தையை ஈன்றெடுக்க இச்சைகொண்ட ஒவ்வொரு ஸ்திரீமணியும் "கர்ப்பரக்ஷக" மென்கிற ஔஷத ராஜத்தை உபயோகித்து பரீக்ஷிக்கலாம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2.

## பிருங்காமலக தைலம்

கண் குளிர்ச்சிக்கு

இதால் ஸ்நானம் செய்துவந்தால் சிரசு சம்பந்தமான எல்லா வியாதிகளையும் தீர்த்து மூளைக்கு மிகவும் குளிர்ச்சி உண்டாக்கி ஞாபக சக்தியை அதிகப்படுத்தும்.

6 அவுன்ஸ் புட்டி விலை ரூபா. 1.

## நாராயண தைலம்

சமஸ்தவாத ரோக நிவாரணி

அண்டவாதம், பக்ஷவாதம், கதிபங்க வாதம், சர்வாங்கவாதம், பார்சுவநோய், குத்தல் குடைச்சல், கண் எறிவு, பீனசம், முதலிய வியாதிகள் தீரும்.

6 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூபா. 2

## லாக்ஷா தைலம்

ஜ்வர வியாதியஸ்தருக்கு ஸ்நான தைலம்

அஸ்திகத ஜ்வரம், விஷஜ்வரம், காச வியாதி, பித்தரோகம் முதலிய வியாதிகளுக்கு சிரேஷ்டமானது.

6 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா. 2.

## க்ஷீரபல தைலம்

கர்ப்பவாதங்களுக்கு

இது நல்ல காந்தியும், நரம்புகளுக்கு வலுவும் கொடுப்பதே யன்றி கீல்நோய், தலை உஷ்ணம், தலைவலி, கண் எரிச்சல் முதலியவை நிவர்த்தியாய் சரீரம் நல்ல ஆரோக்கிய ஸ்திதியிலிருக்கும். இது கர்ப்பிணிகளுக்கு மிகவும் சிரேஷ்டமானது.

6 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூபா. 2.

## வசந்தமாலதி தைலம்

சரீரத்திலுள்ள அதிக உஷ்ணத்தைக் குறைத்து கண்களுக்கு குளிர்ச்சி கொடுத்து மயிர்களை கருமேகம்போல் கருப்பாக்கும். இளமையில் செம்பட்டைமயிர், நரைமயிர் முதலியவைகளைப் போக்கும்.

புட்டி 1-க்கு விலை ரூபா. 1.

## சந்திரோதய மகரத்வஜ

ஆயுர்வேதமணி

இம்மருந்தை ஒரு மண்டலம் சாப்பிட்டால் ரக்த விருத்தியடைந்து தேகபுஷ்டியும் முககாந்தியும் பெற்று புத்திகூர்மையுடன், அதிகமான மனோற்சாகத்தை அடைவார்கள். தவிர இந்திரிய புஷ்டியும் அடைந்து சமஸ்த சுகங்களை அனுபவிக்கச் சக்தியுள்ளவர்களாகிறார்கள்.

40 மாத்திரை புட்டி 1-க்கு ரூபா. 5.

## தாதுவிருத்தி சூரணம்

இந்திரிய புஷ்டிக்கு

அநேக தாப்பியாசத்தால் சரீர பலம் குறைந்து, ஞாபகசக்தியற்று சம்போக சக்தி கொஞ்சமாகிலும் இல்லாமல் கஷ்டப்படுவோருக்கு நல்ல பலனைக் கொடுக்கும்.

புட்டி 1-க்கு விலை ரூபா. 2.

## ரதிவல்லப ரசாயனம்

புஷ்டிக்கும், சம்போக சக்திக்கும்

இவ்வவுஷதத்தை உபயோகித்து வந்தால் வாக்குறுதி, ஊக்கம், தீர்க்காயுசு முதலியவைகள் அளிக்கும்.

40 மாத்திரை புட்டி 1-க்கு ரூபா. 2.

## பாலசஞ்சீவினிவடி

மாந்தக் குளிகை

குழந்தைகளுக்கு உண்டாகும் ஜ்வரம், சுரக்கட்டி, ஈரல்கட்டி, கபம், நெஞ்சில் கொரு கொருக்கு, இருமல், வாந்தி, பல் லைக்கடிப்பது, பால் குடியாமலிருப்பது முதலிய வியாதிகளுக்கு இந்த ஔஷதத்தை கொடுத்தால் உடனே நீங்கும்.

100 மாத்திரையுள்ள புட்டி 1-க்கு அணு 4.

## கஸ்தூரிவடி

குழந்தைகளுக்கு

இந்த மாத்திரை ஜன்னி, இருமல், ஜ்வரம், இழுப்பு, வாயுவு, முதலிய வியாதிகளை கண்டிக்கும். விலை 0-4-0

## ஆதித்யலவணம்

அஜீர்ண வியாதிக்கு

அன்னத்துவேஷம், வயிறுபெறுமன், வாந்தி, வாயில் ஜலம் ஊறுதல், பேதி, மார்பில் எரிச்சல், புளியேப்பம், பசி குறைவு, மலக்கட்டு, குன்மவியாதிகள் முதலியன தீரும். புட்டி 1-க்கு விலை ரூபா 1-4-0.

## மதுமேகவடி

அதிமூத்திர வியாதிக்கு

இன்னும் சகலவிதமான மேக வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து.

40 மாத்திரை புட்டி 1-க்கு விலை ரூபா. 3.

## "ச்யவனப்பிராஷ" லேகியம்

க்ஷய வியாதி நிவாரணி

இதை உபயோகித்தால் உப்பஸம், க்ஷயம், சுவாஸ சம்பந்தமான வியாதிகள், இருமல், சீதளம், ஹிருத்ரோகம், நரம்புத் தளர்ச்சி, மூளைக்குறிய வியாதிகள், அஜீர்ணம், மலபந்தகம் முதலியவை நிவர்த்தியாவதே அல்லாமல் சரீரத்திற்கு பலமும், உண்டாகும். விலை புட்டி 1-க்கு ரூபா 1.

## த்ராக்ஷாரிஷ்டம்

திரேக புஷ்டிக்கு

இது சாஸ்திர சம்பந்தமான மருந்து. க்ஷீணம், காசம், ஜ்வரம், அஜீரணம் முதலியவைகளை போக்கி திரேகத்திற்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். விலை ரூபா. 1.

## லோஹாரிஷ்டம்

சோபை, மஞ்சட்காமாலை நிவாரணி

ஜீரண சக்தி க்ஷீணித்து, பிழைப்பது துர்லபமென்று பயப்படுகிறவர்களுக்கு இந்த திவ்விய ஔஷதத்தை 2, 3 வேளை கொடுத்த மாத்திரத்தில் நீர் தாராளமாய் இறங்கி சரீரத்திலுள்ள பாண்டு, காமாலை, ரக்தக்ஷீணம், இருமல், (க்ஷயம்) முதலிய வியாதிகள் நிவர்த்தியாய்விடும்.

12 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 3.

## சரிபா

வெள்ளை வெட்டை நிவாரணி

வெள்ளை, மதுமேகம், இந்திரியம் அடிக்கடி வெளிப்படுதல் முதலிய வியாதிகளைப் போக்கும். ஜலத்துவாரத்தில் உண்டாகும் அநேக கோளாறுகளையும் போக்கும்.

12 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூபா. 3.

## மாருதி தைலம்

வெள்ளை ரோக நிவாரணி

மூத்திரம் விடும்போது குத்தல், எரிச்சல், மூத்திர வழியாய் வெள்ளை, சிகப்பு, பச்சையாகப் போவது, அடிவயிறு நரம்புகள் இழுத்துப் பிடிப்பது, சொட்டு மூத்திரம், முதலிய வியாதிகளுக்கு மாருதி தைலமே சிரேஷ்டமானது. விலை ரூ.1.

## பிரமேகாந்தக சூரணம்

அஸ்திசிராவம் அல்லது வெள்ளைக் கசிவு:—கர்பாசயத்திலிருந்து வெண்ணிறமான திரவம் கழிவதுண்டு. இந்த வெண் ரக்தக்கழிவு சிலகாலம் வரையில் விடாமலிருந்தால் கர்பாசயம் புண்பட்டு ருதுஸ்ராவம் கஷ்டத்துடன் மிகப் போகும்.

இந்த "பிரமேகாந்தக சூரணம்" ஓர் வஜ்ஜிராயுதம் போன்றது. விலை ரூ. 2.

## ஸ்ரீபாலாதி பானகம்

சீதபேதி மருந்து

மேஹ வியாதியினாலாவது, மற்றெவ்வித காரணங்களினாலாவது கர்பவிரணத்தினால் வாயிற் புண்ணுண்டாகுதல், அஜீரணபேதி, சீதபேதி, ரக்த பேதி முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும். 3 அவுன்ஸ் ரூ. 1.

## சித்தாமிருத சூரணம்

ஆயுர்வேத காப்பித்தூள்

காப்பி குடியால் உண்டாகும் வியாதிகள் அநேகம். அதனால் இதை உபயோகித்தால் நல்ல ஜடராக்கினியை உண்டாக்கி தேகாரோக்கியமும் கொடுக்கும்.

டப்பி 1-க்கு அணு 8.

34088

## குந்தலகாந்தி தைலம்

ஸ்திரீகளுக்கு மிகவும் விலையுள்ள ஆபரணங்களைக் காட்டிலும் மயிர் அதிசயமாகச் இருக்கிறது. இம்மயிர்கள் கறுத்த நிறமுடையதாகி, நீண்டும் இருப்பது அபூர்வமாக இருக்கிறது. இத்தைலத்தை தினத்திற் கொருமுறை மயிர்களுக்குத் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிர்கள் கருத்து நீண்டும் வளர்ந்து பார்வைக்கு அழகுதரும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1.

## போமேட்

இதை தலை வாருவதற்கு முன் கொஞ்சம் கையிலெடுத்து தலையில் தடவி வாரிக்கொண்டால் மயிர் ரேகைகள் மினுமினுப்பாகவும் அழகாகவும் இருக்கும். இந்து தேச பேர்போன அத்தர் சேர்த்து தயார் செய்யப்பட்டது.

புட்டி 1-க்கு விலை அணா 3.

## பற்பசை

சகல விதமான பல் வியாதிகளையும் அறவே நீக்கி, பற்களை பளிங்குபோல் வெண்மைப் படுத்தி, பற்களுக்கு ஒரு அரிய பலத்தையும் தேகத்திற்கு சுகத்தையும் தருகிறது.

இதன் விலை டியூப் 1-க்கு அணா 8.

## நிம்ப பற்பொடி

இது மனோஹரமான வாசனையோடு கூடியது. பற்களிலுள்ள காவிநிறத்தை போக்கி பளிங்குபோல் வெண்மை படுத்தும். பல்நோவு, ஆடுகிறபற்கள், ஈறு வீக்கம், ஈறிலிருந்து ரத்தம் வடிதல், வாய் நாற்றம், பற்புழுக்கள், பல் தேய்வு முதலிய வியாதிகளை நிவர்த்தி செய்து பறகளை கெட்டிப்படுத்தி வெண்மையாக பிரகாசிக்க செய்யும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 4.

## மாலதி

இது புஷ்பத்தின் பருப்பின் பாலிலிருந்து செய்யப்பட்ட சுகந்தமுள்ள நவனீதம். ஸ்திரீ புருஷர்கள் தலைவாரிக்கொள்வதற்கு முன் கொஞ்சம் தலையில் தடவிக்கொண்டால் மயிர் பட்டுபோல் அழகாகவும் மினுமினுப்பாகவும் இருக்கும். குளிர்ச்சியைத்தந்து அழகையும், வசீகரத்தையும் கொடுப்பது. மாலதி அத்தர் சேர்ந்தது.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 8.

## மாதவி

இது அநேக புஷ்பங்களினின்றும் எடுக்கப்பட்ட அத்தர்கள் நிரைந்துள்ள ஒரு ராஜாக்களுக்கான பனிபோன்ற பரிமளபதார்த்தம். இதில் கொஞ்சம் விரலில் எடுத்துக்கொண்டு முகத்தில் பூசிக்கொண்ட மாத்திரத்தில் விரைவில் மாயமாக சர்மத்தில் மறைந்து முகத்திற்கு காந்தியையும் தேஜஸையும் உண்டாக்கும். முகம் பளிங்கு போல் நிர்மலமாயிருக்கும். முகத்திலுண்டாகும் சோபை, மச்சம், முகப்பருவுகள் முதலியவைகளைப் போக்கும். மேலும் முகம் குளிர்ச்சியாயும், பனிநீரை தடவிக்கொண்டது போலுமிருக்கும்

இதன் விலை புட்டி 1-க்கு அணா 8.

## மல்லிகா

இது குழந்தைகளுக்கான லேபம். சந்தன அத்தர், மல்லிகைப் பூச்சார், காஷ்மீர் புனுகு முதலியவைகளால் செய்யப்பட்டது. குழந்தைகள் ஸ்நானம் செய்த உடன் உடம்பில் தடவினல் பொன் மேனியைக் கொடுத்து சர்மவியாதிகளையும் போக்கும். குழந்தைகள் ரப்பர் பொம்மைகளைப்போல் புஷ்டியாயிருப்பார்கள்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 8.

Lodhra Press, Royapettah, Madras.

# லோத்ராவின் மகிமை

### சிறந்த ஔஷதம்

ஸ்ரீமதி அன்னு சாண்டி, எம்.ஏ., பி.எல்., அட்வகேட், ஆசிரியை, "ஸ்ரீமதி," திருவனந்தபுரம்:— "நான் தங்கள் லோத்ராவை உபயோகித்தேன். ருதுகசம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் லோத்ராவே தலை சிறந்த ஔஷதம். அது அருந்த ருசியாயிருப்பதும், பத்தியமில்லாமலிருப்பதும் மேலும் குறிப்பிடத்தக்கது."

### தடைப்பட்ட மாதவிடாய்

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி அம்மாள், கொள்ளேகால், மைசூர்:—"கடந்த மூன்று வருஷங்களில் எனக்கு மாதவிடாய் சரியாக ஏற்படவில்லை. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் தூரம் வந்தது. இதனால் எனக்கு இடுப்பிலும், கணுக்களிலும் நோவு ஏற்பட்டது. நான் ரொம்பவும் மெலிந்து விட்டேன், என் உடல் எனக்கு பெரும் பாரமாகத் தோன்றியது. உடனே உங்கள் லோத்ரா இரண்டு புட்டியருந்தினேன். என் வியாதி என்னை விட்டு நீங்கியது. இன்னும் ஓரிரண்டு பாட்டில் மருந்து சாப்பிட நான் விரும்புகிறேன். மேலும் என்னைப் போன்ற உபாதைகள் உள்ள எல்லோரும் லோத்ராவை உபயோகிக்குமாறு நான் சிபார்சு செய்கிறேன்."

### சகோதரிகளின் அனுபவம்

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:— "லோத்ராவை உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருதுசூலை கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்."

### ஆச்சரியமான குணம்

ஸ்ரீமதி கர்த்தா, கொரளி அம்மனுத் ஹவுஸ், இரிஞ்சலக்குடம், கொச்சி:— "கடந்த பத்து வருஷங்களாக நான் மாதவிடாய் சம்பந்தமான தொந்தரவால் ரொம்பவும் கஷ்டப்பட்டு வந்தேன். உங்கள் லோத்ரா என்னை ஆச்சர்யப்படத்தக்கவிதத்தில் அக்கஷ்டத்தினின்றும் விடுவித்து விட்டது."


### கர்ப்பாசய ரோக நிவாரணி

ஸ்ரீமதி அம்மாகுட்டி அம்மாள், சங்கீத உபாத்தியாயினி, சர்க்கார் ஹைஸ்கூல், திருச்சூர்:— "நான் நெடுநாட்களாகப் பலவிதமான கர்ப்பாசயரோகத்தினல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். அநேக விதமான வைத்தியங்கள் செய்தும் குணம் கொடுக்கவில்லை. கடைசியாக உங்களது (கேசரி) லோத்ராவை உபயோகித்த ஒரு வார தினத்திற்குள் காரடி வித்தையைப்போல் குணம் அடைந்தேன். அதன் மகிமை சொல்லமுடியாது."

எங்கும் கிடைக்கும்.

கேசரி குடீரம், ராயப்பேட்டை, சென்னை

QUEEN OF TONICS




லோத்ரா